# பரவெளித் தத்துவம்

# PARAVELI THATHTHUVAM

( சிவதத்துவம் - விஞ்ஞானம் ஒப்பிட்டாய்வு நூல் )

ஆக்கம்:

தொல்புரக்கிழார்,
புலவர் நா. சிவபாதசுந்தரனார்

ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு

மதுரைநகர் [illegible] தமிழ்நாடு

4-1-81 — [illegible]

அகில இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசுபெற்றவரும்
பொருணூல் விற்பன்னர், தொல்புரக்கிழார்
ஆகிய

புலவர் நா. சிவபாதசுந்தரனர் அவர்கள்

எழுதிய

# "பரவெளித் தத்துவம்"

அல்லது

# "பதிமுதுநிலைத் தோற்ற விளக்கம்"

என்னுஞ் சிவதத்துவ நூல்



யாழ்ப்பாணம், மில்க்வைற் நிறுவன அதிபர்
சிவதருமவள்ளல்
திரு. க. கனகராசா J. P. அவர்களால்
மதுரை, ஐந்தாவது
அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு ஆய்வு அறிஞர்களுக்கு
அன்பளிப்பாய் வழங்கப்படுகிறது.

1981

உ

# பரவெளித் தத்துவம்

அல்லது

# பதிமுதுநிலைத் தோற்ற விளக்கம்

★

சிவதத்துவ — வான்தத்துவ ஒப்பிட்டாய்வு நூல்.

★


ஆக்கம் :

தொல்புரக்கிழார், பொருணூல் விற்பன்னர்

புலவர் நா. சிவபாதசுந்தரனார் அவர்கள்


★

ஐந்தாவது

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு,

நினைவு நூல்.


மதுரைநகர் — தமிழ்நாடு

1981

முதற் பதிப்பு: 1980

பதிப்புரிமை: நா. சிவபாதசுந்தரனார், தொல்புரம், சுழிபுரம்.

வெளியீடு: தமிழ்ச் சங்கம், வட்டுக்கோட்டைத் தொகுதி.

அச்சுப்பதிப்பு: விபுலாநந்த அச்சகம், யாழ்ப்பாணம்.

விலை ரூபா 15-00

PARAVELI THATHUVAM

A SCIENTIFIC STUDY OF


THE PHILOSOPHY ON SIVA

*First Edition:* 1980

*Copyright:* N. Sivapathasundaranar, Tholpuram, Chulipuram.

*Publishers:* Thamil Sangam, Vaddukoddai Electorate.

*Printers:* Vipulananda Press, Jaffna.



பரவெளித் தத்துவம்

என்ற இந்நூல்

யாழ்ப்பாணம்

அருளாளர் அணியில் அமைந்து

எமக்கெல்லாம் ஏற்றம் புரிந்த தவக்கருணையர்

# யோகசுவாமிகள் அவர்களின்

திருவடிகளுக்குக் காணிக்கை.

— ஆசிரியர்

உ.

# வெளியீட்டுரை.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கம் பண்டிதர், புலவர், வித்துவான்களை உறுப்பினர்களாக உடையது. தமிழ்மொழியை மரபுநிலை குன்றாது பேணிக் காத்து வருகிறது. இளைஞர்களுக்குத் தமிழ்மொழியை வரன்முறையாகக் கற்பித்து வருவதோடு சீரிய ஆய்வுப் பனுவல்களை உறுப்பினர்களைக் கொண்டு எழுதுவித்தும் வெளியிட்டு அரும்பணி புரிந்து வருகிறது. சில ஆண்டுகளின் முன்னர் இந்நூலாசிரியர் எழுதிய "**புறப்பொருள் வெண்பா மாலை ஆராய்ச்சி**" என்ற நூலைத் தமிழுலகிற்கு அளித்து மகிழ்ந்தது. இப்போது "**பரவெளித் தத்துவம்**" அல்லது "**பதிமுதுநிலைத் தோற்ற விளக்கம்**" என்ற சிவதத்துவ விளக்க நூலை வெளியிட்டு வைப்பதில் மகிழ்வு கொள்கிறது. இந்நூல் பருப்பொருளான இவ்வுலகில் ஒளிக்கரு எவ்வாறு விருத்தியுற்று ஒளிப்பொருளாய் - விண்மீன்களாய் விளங்கியது என்பதைப்பற்றி மேலைத்தேய வான்நூற்புலவோர் அளித்த விளக்கங்களுக்கு நேராக நமது சைவசித்தாந்தத்தின் ஒரு கூறான சிவதத்துவம் எப்படி இயைபுற்று விளங்கிறது என்றதை ஒப்பிட்டு ஆய்வு செய்கிறது. சுருங்கச் சொல்லின் சைவசமயக் கருத்திற்கும் விஞ்ஞானக் கருத்திற்கும் அதிகம் வேற்றுமை இல்லாத பெற்றியை இந்நூல் எடுத்து இயம்புகிறது எனலாம். புறப்பொருள் வெண்பா மாலையில் இவ்வாசிரியர் புறப்பொருளுக்கும் சைவசிந்தாந்தத்திற்கும் உள்ள இயைபைப்பற்றி எழுதிய தத்துவ முறையைக் குறித்துப் பலர் பாராட்டியுள்ளனர். இத்தகையான இவர் இவ் ஒப்பீட்டாய்வை எழுதி தமது சைவசித்தாந்த விளக்கத்தைப் புலப்படுத்தியுள்ளார். புலவர் அவர்கள் நம் சங்கத்தின் முன்னாள் தலைவரும், செயலாளருமாய் அமர்ந்து பணிபுரிந்தவர். இவரின் புறப்பொருள் ஆய்வின் பெற்றியை உணர்ந்து, ஈழத் தமிழகத்தின் முதுபெரும் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் "பொருள்நூல் விற்பன்னர்" என்ற விருதுப்பெயரை, இவர் பெற்றவராவர். இன்றும் இவர் அனைத்துலக ஆராய்ச்சி மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வாசித்துள்ளார். இத்தகைய நம் நண்பர் திரு. நா. சிவபாதசுந்தரனாரின் ஆய்வுத் துறையால் நம் தமிழ்ச் சங்கம் சிறப்புறுகிறது. எனவே அவரையும், நம்சங்கத்தையும் ஊக்குவிக்கும் மூலமாகத் தமிழன்பர்கள் இந்நூலையும் வாங்கிப்படித்து இன்புறுவார்களாக.

பன்னாகம் தெற்கு,
சுழிபுரம்,
12-12-1980.

பண்டிதர் அ. ஆறுமுகம்
சங்கத் தலைவர்

# முன்னுரை.

தமிழ்நாடு பண்டைப் பெருமை பலவுடைத்து. அவற்றில் ஒன்றே கொல்லாமையாற் கொண்ட உயிர்நேயம். இந்தநேயத்தில் முதற்கண் எழுந்தவர் காட்டு நாட்டகத்தில் நலத்த முல்லைத் தமிழ்மக்கள். முல்லைத்தமிழ் மக்களே "ஆயர்" எனப் பட்டனர். ஆவைக் கொல்லாது அயர்தல் புரிந்தவரே ஆயர் என்க. ஆயர்கள் ஆவினங்களைக் காப்பதற்காகக் காடும், காடுசார்ந்த நிலப்பக்கமுமாக இடப்பெயர்ந்து ஆங்காங்கு அமர்ந்திருந்தார்கள். பகலில் மண்ணையும், இரவில் விண்ணையும் கூர்ந்து நோக்கி மனநிறைவை அவர்கள் கொள்ளுங்கால் "இவைகளிலும் மேலான-நிலையான ஓர் இயற்கைப் பொருள் இருத்தல் வேண்டும்; இல்லையேல் இவைகள் இவ்வாறு இணைந்து இயைந் திருத்தல் எங்ஙனம் அமைந்துள்ளது," என்று "பேராவியற்கை"ப் பொருளறிவில் மிகுந்தனர். இவ்வாறு காணும் பருப் பொருளைக் கல்லிக் கல்லிக் கற்றுக் காணா அரும் பொருளைக் கணித்த கண்ணியத்தால் முல்லைநில மக்கள் கற்புடையர் என்ற சிறப்புப் பொருளுடைய சீரிய மக்களாகத் தமிழ் உலகில் சிறந்தார்கள்.

பேராவியற்கையின் பேராற்றல் விளைவால் தாமும், தம்முடலும், தம்முலகும் வடிவம் பெற்று வளமுற்றன என்ற கருத்துப் பொருளை அந்த முல்லைத்தமிழர் முடிவுறக் கொண்டனர். எனவே, அவர்கள் அப்பேராவியற்கையின் ஆற்றலில் ஆழ்ந்து ஆழ்ந்து ஆய்வு செய்தனர். ஆய்வில் உயிர்கள் ஒன்றையொன்று கவர்ந்து கதுவுதல் அவ்வாற்றலின் தாக்கத்தால் எனத் தெளிந்தனர். அக்கதுவுதலே "காதல்" என்ற பெயர்த்தாயிற்று. கதுவலாந் தொழிற்பாடு தோற்றவுரு அற்ற ஆக்கமாதலால் அது பண்பியலான தென்றும், அப்பண்பு பேராவியற்கையின் ஆற்றற் பண்பு என்பதும் தமது சித்தத்தில் முடிவாக்கினர். அப்பண்பையே "அன்பு" என்றனர். இவ் அன்பினாலேயே உயிர், உடல், உலகம் என்பன வடிவம் உள்ள பொருள்களாக மிளிர்ந்தன என்ற அறிவுடைமையை ஆயருலகத் தமிழ் மக்கள் பெற்றார்கள். இதன் விளைவே, "அன்பின் வழியது உயிர்நிலை" என்ற திருவாக்குத் திருவள்ளுவர் இடத்துப் பிறந்தது. பேராவியற்கையின் ஆற்றற் பண்பு எவ்வாறு தொழிற்படுகிறதோ, அவ்வாறே உயிரின் உயிர்ப்பு பாடுற்றுச் சிறக்கிறது என்பதாம். அன் + பு = அன்பு. "அன்" அல்லாதது. "பு" பகுதிப் பொருள் விகுதி, "அல்லாதது" என்றது தொழிற்படும் போது ஏற்படும் பொருள் நெகிழ்வே "அன்பு" எனப்பட்டது என்பதனை அப்பகுப்புச் சொற்கள் தருகின்றன.

"அல்லாதது" என்பது எது? இதற்கு முன்னர், எதற்கு அல்லாதது என்ற வினாவை எழுப்பல் வேண்டும். உயிர்க்கல்லாதது என்று அவ்வினாவுக்கு விடைவரும். அஃது எது? என்பார்க்கும் "பேராவியற்கை" என்றே பழந்தமிழர் பகர்ந்துள்ளனர், அந்தப் பேராவியற்கை தன்னாற்றலை இயல்பாகப் பரத்தல் புரியும்போது; பெயரும் இயற்கையான பொருள்கள் அதற்கு எதிரான பரத்தலைப் பொருள்முறையிற் புரியும் போது அதனுக்கு ஈடு செய்ய முடியாது, அதன் வண்ணவடிவாய் அவை வளம்பட்டு ஒடுங்கி அமைந்தன. பரத்தலால் 'பற்றல்' இயல் இயன்ற அப்பேராவியற்கை ஒரு வகைப் பொருள்நெறிப் பெற்றியை அடைகிறது. இஃதே 'உயிரி' எனப்பட்டது. உயிரை உரிமையாக உடையது உயிரியாம். உயிர்நிலையிலும் சரி, உயிரிநிலையிலும் சரி, உயிருக்கும் உயிரிக்கும் அன்பே நிலையதென்க. சுருங்கக் கூறின், பொருள், பொருளியக்கம், பொருளியக்க வடிவம் என்றவைகளின் தொடரியல் அன்பு என்பதாம்.

உயிரை உடைமையாக உற்ற அன்பாம் உயிரி, அந்த உயிரிடத்து இயங்கித் தொழிற்படும் போது அவ்வுயிர் அவ்வுயிரியை அன்பு என்றே உணர்கிறது. அந்த 'அன்மை' செவ்விய தன்மைத்தாய்ச் சிறக்கிறதை அவ்வுயிர் அரிதாய் அறிதல் உற்றுச் செம்பொருள் என்றது. செவ்விய தன்மையதாய்த் தன்னிடம் சிறந்த உயிரியைச் 'சிறப்பு' என்றே அவ்வுணர்வினர் உரைத்து நின்றனர். இதனையே, திருவள்ளுவர் 'சிறப்பென்னும் செம்பொருள், என்றார். செம்பொருள் என்பதே 'சிவம்' என்றாயிற்று. சி + அம் = சிவம், சி-சிறத்தல், அம்-அழகு. சிறந்து அழகானது சிவம் என்பதே சொற்பொருளாம். இந்த விளக்கத்தைப் பொருள்நோக்கில் தெளிதல் வேண்டும். சொல் நோக்கில் ஆயும்போது; 'சி'-சிவமாகவும், 'வ'-சிவசத்தியாகவும் ஆன்றோர் காட்டியுள்ளனர். இதுவே அன்பு விருத்தியில் சிவம் சிறந்த முறையாம். இந்த விளக்க நோக்கிலேயே திருமூலர்;

"அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே." — திருமந்திரம்

என்று மந்திரமாக அருளியுள்ளனர். எனவே அன்பியலின் தத்துவமே சிவம் என்றும், அந்தச் சிவதத்துவத்தின் பெருவிளக்கமே பரவெளி என்றும் ஈண்டு நாம் தெளிதல் வேண்டும்.

இந்தப் பரவெளித்தத்துவத்தை இந்நூல் செப்புகிறது. இந்நூல் ஆக்கத்தில் முதற்கண் சிவப்பொருளாம் இறைவனையே நான் முதற்கண் வழுத்துகின்றேன். நிற்க; கொழும்புத்துறை யோகசுவாமிகளின் உணர்வின் ஆணையால் உந்தப்பட்ட மானிப்பாய் முன்னாள் சிவில் அதிகாரியாக இருந்த திரு. மு. வயிரமுத்து J. P. அவர்களின் ஊக்கத்தால் இந்நூலைப் பதிப்பிக்கத் தொடங்கினேன், அவரின் நல்லெண்ணப்பேறால் இந்நூல் இனிதுற்றது. இதனைப் பதிப்பிக்க அச்சகத் தேர்வில் யாழ்ப்பாணம், விபுலாநந்த அச்சக அதிபர் சைவப்புரவலர், சிவமணி திரு வே. கந்தசாமி அவர்களுக்கும், அவரின் அலுவலர்கட்கும் எனது நன்றி உரித்தாகுக. மேலும், மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா J. P. அவர்கள் சிவதருமங்களுக்குக் கொடுத்தலில் முன்னிற்பராதலின், இந்நூலாம் சிவதத்துவ விளக்க நூலை மதுரைத் தமிழ் மாநாட்டு ஆய்வாளர்களுக்கு அன்பளிப்புச் செய்தல் புதுமையன்று, அன்னார்க்கும் எனது நன்றி. இச் சிவதத்துவ ஆய்வில் குறைகளில்லாமல் இருக்காது. அதனை ஆன்றோர் சுட்டிக்காட்டின் மறுபதிப்புக்களில் திருத்தம் நாம் செய்வோம் வணக்கம்.

தமிழ் நிலை,
தொல்புரம், சுழிபுரம்,
ஸ்ரீ லங்கா.
25 - 12 - 1980

இங்ஙனம்,
நா. சிவபாதசுந்தரனார்.

# நூற்பொருள்கள்


1. நூன்முகம் :

2. வான்பொருள் :

முன்னுரை : வான் - வானம்

வான்தோற்றம் : பரம் - பராபரம்

வான்தோற்ற வளர்வு : பராபரை - பரபிந்து

3. வான்பொருள் மலர்ச்சி :

விண்நிலை : அம்மை - மைம்மை

விண்ணகநிலை : பரநாதம் - பரசிவம்

விண்ணகப்பொருள் நிலை : கலைமுறை

தத்துவமுறை

பரவெளி நிலை : காரணமுறைப் பக்கம்

பராபரவெளி : பராபரப்பொருள்

பரவெளி : பராபரைப் பொருள்

பரநிலை வெளி : பரசிவப்பொருள்

பரவெளி நிலை : காரியமுறைப் பக்கம்

பரநிலை வெளி : பரசிவம்

இறைநிலை - கடவுள்நிலை - பதிநிலை

காரணநிலைவெளி : பரசிவப்பொருள்

சிவப்பரம் : ஆதிசிவம்

சத்தர் : இலயசிவம் - இறை

உத்தித்தர் : போகசிவம் - கடவுள்

பிரவிருத்தர் : அதிகாரசிவம் - பதி

காரியநிலைவெளி : பரசிவப்பொருள்

தத்துவம் - மூர்த்தி - தொழில்

4. வானப்பொருள் :

காலத்தோற்றம் - காலக்கடவுள்

5. காலப்பொருள் :

கதிப்பொருள் ; ஒளிக்கோளம்

கதிர்ப்பொருள் : வெண்ணொளிக் கோளம்

கதிர்மண்டலப் பொருள் : காரொளிக் கோளம்

6. நிறைவுரை :

அசையொளி : பரவெளி

அசையொளியளவு : பரநிலைவெளி

ஒளியசை : சத்தி பரத்துவம்

ஒளியசை விளக்கம் : சிவபரத்துவம்

காட்சிப்புலன் : தத்துவவெளி

வளர்ச்சிமுறைக் காட்சிப்புலன் : சிவதத்துவத் தோற்றம்

# நூன்முகம்.

"அண்டத்திலுள்ளது பிண்டத்தில்" என்பது நமது முதுமொழி. அண்டம் - உலகம். பிண்டம்-உடல். இவ்விரண்டும் பொதுவாகப் பொருள் இயல்பில் ஒன்று என்பதே இம்முதுமொழியின் உட்கருத்தாம். அண்டத்தின் பொருட்களே சிறந்து உலகில் உயிர் வாழ்வதற்கு உடலாகிறது. இதனுற்றுன் சீவவுடல் பிண்டம் எனப்பட்டது. இந்தியநாட்டு ஞானிகள் அண்டத்தையும், பிண்டத்தையும் தனித்தனி உணர்ந்தபோதே இத்தகு கருத்தை எடுத்தார்கள். அந்த ஞானிகள் சீவ உடலைக் களமாகக் கொண்டு கண்ட தத்துவங்கள் முப்பத்தாறும். இந்த முப்பத்தாறையும், உடல் (ஆன்ம) தத்துவம் இருபத்து நான்கு என்றும், உணர்வுத் (வித்தியா) தத்துவம் ஏழு என்றும், சிவ(உணர்த்தும்) தத்துவம் ஐந்து என்றும் வகைப்படுத்திக் காட்டியுள்ளனர். இந்த வகை மூன்றில் ஆன்மதத்துவம் என்ற உடல் வகையில்; உடலுக்கும் உலகிற்கும் உள்ள பொதுத்தன்மையை உணர்ந்த பேற்றுலேயே அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்றனர். இந்த ஆய்வை மேலை விஞ்ஞானிகள் உடலைக் களமாகக் கொள்ளாது, உலகைக் களமாகக்கொண்டு ஆய்வு செய்தார்கள். உலகப்பொருள்களை அவர்கள் "பருப்பொருள்" என்றனர். நம்மவர் அதனைப் "பூதம்" என்றனர். பூதம் என்றுல் பெரும்பொருள் என்பதே கருத்து. பெரும் பொருள் எனினும், பருப்பொருள் எனினும் ஒன்றே. இந்தப் பூதப்பொருளான பருப்பொருளின் இயல்புகளை அவர்கள் அதன் இயக்கத்தின் வடிவ மூலம் அறிய முனைந்தார்கள். பொருள் – பொருளியக்கம் – பொருளியக்க வடிவம் என்ற மூன்றில் மூன்றும் நிலையான பொருளியக்க வடிவமே மேலையரின் விஞ்ஞானத் தேர்வுக்கு ஆதியாகிறது. நமது மெய்ஞானிகள் பருப்பொருள்-நுண்பொருள் ஆய்வுக்குத் தமது உடலையே கருவியாகக் கொண்டு, தமது யோகஞான ஆற்றலால் நேரடியாகவே பொருளைக் கண்டு அதிலிருந்து ஆய்வு செய்த தேர்வுஞானமே அண்டத்திலுள்ளது பிண்டத்தில் என்றதாகும். இந்த முதுமொழியில் "அண்டம்" என்பது பொதுப்பொருள். "உள்ளது" ஏன்பது அதன் சிறப்புப் பொருள். இதுவே பிண்டம் என்ற ஆன்ம உடல் என்க. அண்டத்தின் சிறப்புப் பொருளான ஆன்மவுடல் இதுபோது பருப்பொருளாம் அண்டத்தின் பகுதியாகிறது. அண்டத்தின் பகுதிப்பொருளான ஆன்மவுடலின் இயக்கத்தையும் இயக்க வடிவத்தையும் உணர்ந்த நமது ஞானிகள் அதனையே உணர்வுத் (வித்தியா) தத்துவம் என்றனர். பருப்பொருளாம் அண்டச் சிறப்பின் சிறப்பே வித்தியாதத்துவம் என்ற உணர்வுத் தத்துவமாம். இந்த உணர்வு முதற்கண் "புலனுணர்வு" ஆகிறது. உடலுக்குரியதான புலனுணர்வு உடலகத்தில் மிகவும் உட்படும் பொருளாத்

தோற்றம் பெறும்போது "உள்ளம்" எனப்படும். இந்த உள்ளத்தின் இயக்க வடிவங்களே உணர்வுத் தத்துவங்கள் எனப்படும். அதுவே மனம், புத்தி, சித்தம், அகங்கரரம் என நான்காகும். பருப்பொருளாம் அண்டத்தில் இருந்து வந்த புலனுணர்வு அதன் பிண்டத்தின் உள்ளே உட்பட்டு உள்ளமாக மறுமலர்ச்சி பெற்றதோடு அமைந்து விடுகிறது. இவ்வாறு அடங்கிய உள்ளம் தனது உண்மையாம் உள்பொருளால் இயங்கிப் புலனுணர்வுப் பொருளாகப் பருப்படுகின்றது. இவ் உள்ளுணர்வுப் பொருட்களையே உணர்வுத் தத்துவமென்று ஆன்றோர் சுட்டினர். அண்டமாம் பருப்பொருளால் எழுந்த புலனுணர்வு உண்மையால் உள்ளம் எனப்படுவது விஞ்ஞான நோக்கில் "பௌதிக நெறி" யாக தேரலாம். உள்ளமான புலனுணர்வுக்கு ஊட்டம் கொடுத்து, உணர்வுப் பொருளாக உருப்படுத்தும் உள்ளத்தின் உள் பொருளை அந்நோக்கின்படி "இரசாயன நெறி" இயலாக உன்னலாம். எனவே உள்ளத்தின் உண்மைப் பொருள் உயிர் எனப்படும் போது, அஃது இரசாயனப் பாங்கானது என்பது தாமே பெறப்படும். உள்ளம் பௌதிகமாகவும், அதிற் கலந்து மயங்கிய இரசாயனமும் அதுவாவதுபோல, உள்ளமும் அதன் உள் பொருளாம் உயிரும் வேறறவே உன்னி அவ் உயிரையும் உள்ளம் என்றே தத்துவ நெறியர் சுட்டுவர். உமாபதி சிவாச்சாரியர் திருவருட்பயன் என்ற நூலில் "ஒன்று மிகினும் ஒளிகவராதேல், 'உள்ளம்' என்றும் அகலா திருள்" என்று சுட்டுவர்.

> "உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
> உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
> உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
> உள்ளம் அவனை உருவறி யாதே" ... திருமந்திரம் 417.

என்ற திருமந்திரம் உயிரை "உள்ளம்" என்ற சொல்லால் சுட்டியிருப்பதுங் காண்க. "உயிரியாகிய சிவமும் வேறறக் கலந்து உடனாக இருப்பினும் உள்ளமாகிய உயிர் தனது சிற்றறிவினாலும், சுட்டறிவாலும் அச்சிவமாம் உயிரியைக் காணமாட்டாது" என்பது இந்தத் திருமந்திரத்தின் கருத்தாகும். நிற்க,

உலகப் பொருள் தூலவுடலின் உள்ளே உள்முகமாகும்போது அஃது அகமாகப் பௌதிகப் பொருள் முறையில் விருத்தியுற்ற உள்ளத்தில் அப் பௌதிகத்தையொட்டிய இரசாயனமும், அதிற் கலந்து உடனாகக்கொண்டிருக்குஞ் செயற்றிறனால் அஃது உயிர்ப்பாய் உயிர் என்ற அகப்பொருளாகச் சிறக்கின்றது. உய்+இர் = உயிர், உய்த்து இருப்பது என்ற கருத்தாம்.

பௌதிக நெறியான உள்ளுடலில் உய்த்து இருப்பது எது? அதனுடன் கலந்து உடனாயிருந்த இரசாயன நெறிப்பொருளான உயிர் என்க. இந்த இரசாயனம் பௌதிகத்தில் சார்ந்த வேறான சிறந்த பொருள் என்பது இன்றைய விஞ்ஞான முடிபாம். எனவே உள்ளத்தின் உள் பொருளாம் உயிரானது உள்ளத்தைச் சார்ந்திருந்தாலும் அதன் வேறான சிறந்த பொருளதாம் என்க. இரசாயன நெறியிற் பொருள், பௌதிக முறைநெறி யியலில் கலந்து உடனாய் விளங்கும் விஞ்ஞான இயல் நோக்கிலேயே தத்துவஞானிகளும் அதன் சிறப்பான வேறான உயிரையும் உள்ளம் என்று உரைத்தனர் என்று நாம் தெளிதல் நன்றாம். இரசாயன நெறிமுறையான பொருள் "உயிர்ப்பொருள்" எனவே, பௌதிக முறையான உள்ளம் என்ற பொருள் "உயிரற்ற பொருள்" என்பது பெற்றாம். இதிலிருந்து உள்ளத்திலும் அதன் உட்பொருளான உயிர் மேலான பொருள் என்பது வெளிப்படையாயிற்று. அந்த மேன்மை யாதெனில், உயிர்ப்பு என்ற இயக்கச் சத்தியதாம். இந்த இயக்க வல்லமைப்பாடு இரசாயன முறையான நெறியில் எப்படிப் பிறந்தது என்று ஆழ்ந்து எண்ணியபோது; அஃதை உளவாக்கிய மூலப்பொருளாலேயே பொருந்திற்று என்று துணிந்தனர். துணியவே, உயிர் முழுநிறைவான மூலப்பொருளல்ல என்பதையும் உணர்ந்தனராவர் இவ்வுணர்வின் பேற்றால் உள்ளத்தின் உள்பொருளான உயிருக்கு உரித்தான இன்னொரு உயிர் உண்டு என்ற இன்னொரு முடிவும் பிறந்தது. உயிருக்கு உயிரான உள்பொருள் "உண்மை"ப் பொருள் என்றும், உயிர் "உள்" பொருள் என்றும் அல்லது அவ்வுண்மைப் பொருளினைப் போன்றதென்றும் நாம் தெளிதலே நெறியாம்.

உயிர்ப்பு என்ற மேன்மை இயலால் இலங்கிய உயிரானது பொருளாகத் தோன்றவே; அவ் உயிர்ப் பொருளுக்கு உரிய உயிர்ப்பண்பும் உளவாதல் வேண்டும். அப்பண்பு எது? அதுவே "ஒளிரும்பண்பு" என்றனர். மேற்காட்டிய திருமந்திரத்தில் "உள்ளுறு சோதியை" என்றது இதனை என்க. ஒளிப்பொருள் அறிவுப்பண்புப் பொருள் என்பது ஆன்றோர் முடிவு. உயிரியக்க முடையதெனலால் ஒளிரும் பண்பாம். எனவே உயிர் என்றால் "அறிவுயிர்" என்றதே பொருளாகும். இதனைச் "சித்து" என்றும் இயம்பினர். இவ் உயிருக்கு உயிரான பொருள் உண்மை யாதலின் "சத்து" என்றும் சாற்றினர். தூலவுடலில் புலனுணர்வு அதன் உள்ளிடத்திற் குறியாகும்போது "உள்ளம்" உருப்பட்டது. அப்போது அதன் உட்பொருளும் உடன் நிகழ்வாய் உய்தல் பட்டது. அவ் உய்தற் பாட்டிலே உயிருக்கு உயிரான மூலப்பொருளும் அவ் உய்தற் பொருளில் ( உயிரில் ) வேறறக்கலந்து உடனாய் அமைந்தது. உண்மையான பொருள் என்ற சத்து

உள்பொருள் என்ற சித்தென்பதில் ஒன்றாய் உடனாய் நின்றது எங்ஙனம் என்பதை ஞானிகளோ, விஞ்ஞானிகளோ சொல்லாலும், பொருளாலும் சுட்டமுடியாமல் சோர்ந்து விடுகின்றனர். ஆனால் சித்தாகிய உயிரைக் கொண்டே சத்தாகிய உள்மையைக் கருத்தளவாக முடிவு செய்தனர். உள்மையாம் சத்தைச் சொரூபம் என்றிடும் உண்மை நிலைக் கொள்கையாலே தோத்திரம் செய்தல் வேண்டும். ஆனால் அவ்வாறு நம்மால் செய்ய முடியாது தடத்தம் என்ற சார்பு நிலைக் கொள்கையாலேயே உண்மையாம் சொரூபத்தை யாம் தோத்திரம் செய்கின்றோம். இதிலிருந்து உயிர் வலியற்றதென்பதும், உயிருக்குயிராம் பொருள் வலியுடையதென்பதும் பெற்றாம். அறிவாலும் ஆற்றலாலும் வலிமிகுந்து உயிருக்கு ஆதாரமாகும் உயிர்ப்பொருளை ஆன்றோர் "உயிரி" என்று அழைப்பர், எனவே, உள்ளத்தில் உயிர் பொதுப்பொருளாயும், உயிரி சிறப்புப்பொருளாயும் அமைகிறதன்றோ. உயிரை உள்ளத்திலும் சிறக்கவைத்துத் தானும் அதனினும் சிறந்ததாய் நிலைத்தலின் உயிரை உடைமையாக் கொண்ட உயிரியைத் தமிழ்ச்சான்றோர் உயிருக்குயிர் என்னாது "சிறப்பு" என்றனர். திருவள்ளுவர் அச்சிறப்பு என்பதை விளக்கமாய்ச் "சிறப்பு என்னும் செம்பொருள்" என்றார். செம்மை + பொருள் = செம்பொருளாகும். செம்மை-செவ்வியதன்மை. அதுவே முழுநிறைமையாம் தன்மை என்க. சிவப்பு என்ற பண்புறு செயலையும் தரும். சிவப்பென்ற செந்நிறத்தையுங் குறிக்கும். அதாவது; ஒரு பொருள்; கருவாய் உருவைப் பெறும்போது முதற்கண் நிறம் பெறும். இந்நிறம் முழுமையாக அப்பொருளில் நிறைவு பெறுதல் 'சிவத்தல்' எனப்படும். இச்சிவத்தலில் அப்பொருள் நிறம் சிவப்பாக-செந்நிறமாகப் பிரதிபலித்தலின் சிவப்பு என்ற கருத்தும் அச்சொல் பெற்றதென்க. எனவே செம்மை என்றது; நிறம் என்ற பொதுவையும், சிறப்பு என்ற சிறப்பையும் உள்ளடக்கியதோர் செழுஞ்சொல் என்க. இவ்விளக்கத்தை வைத்துக் கொண்டு செம்பொருள் என்ற சிறப்பு "சிவன்" என்பதையும் "இறைவன்' என்பதையும் உள்ளடக்கிய செழுஞ்சொல் என்க. "சிவன்" சிறப்பின் சொரூபத்தையும், "இறை" அதன் தடத்தத்தையும் காட்டும் சொற்களாகும். சிறப்பானது பொருள் எனவே; சிவம், இறை என்பன அதன் இயக்கங்களாம், இதில் சொரூபமான சிவத்தின் இயக்கத்தை யோகிகளாலும்; ஞானிகளாலும் இத்தன்மைத்து என்று சொற்களால் சொல்ல முடியாது பொருள் அளவில்-கருத்தளவில்: அனுபவித்து ஆனந்தித்தனர். தடத்தவியலான சிறப்பின் இறைநிலையே, சொல்லாலும் பொருளாலும் ஞானிகளும் யோகிகளுமே ஒருவாறு நமக்குப் புலப்படுத்தியுள்ளனர். அவைகள் தோத்திரமாகவும், சாத்திரமாகவும் கிடைத்துள்ளன. தடத்த நிலையிற் தலைப்பட்ட சிறப்பு என்னும் செம்பொருள் இயங்கி எல்லாத் தத்துவங்களையும் தன்னுள் ஒடுங்

கச் செய்தலும், அந்தத் துவங்களை உயிர்களின் பொருட்டாகக் கொடுத்தலும், அவற்றை உயிர்கள் பற்றி நின்று துய்த்து அறிவு விளக்கம் பெறச் செய்தலும், ஆகிய தொழில்களை இயற்றுதல் செய்யுங்கால்; அருவம், அருவுருவம், உருவம் என்ற வடிவங்களைப் பெறும். இவ்வாறு செம்பொருள் அருளோனாகவும், செம்பொருளின் இயக்கம் அருளாகவும், அந்த இயக்கத்தின் வடிவங்கள் அருளாற்றலாகவும் தத்துவநெறியர் கூறியுள்ளனர். செம்பொருளின் இயக்க வடிவங்களாம் அருளாற்றல்களே உலகாக, உயிராக, உயிரியாகப் பொருள் நிலைப்பட்டன, இப்பொருள்களில் செம்பொருளான அருளோன் ஒன்றாய், உடனாய், வேறாய் அருள்முகமாய் நெறிப்படுவதைத் தெளித்தமையாலேயே, தடத்த நிலையான இறையை ஞானிகள் இறைஞ்சி இன்பம் துய்த்தனர். இவ்வுண்மையில் ஒன்றுதலை;

"பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே" — மணிவாசகர்

"கூறும் நாவே முதலாய்க் கூறும் கரணம் எல்லாம் நீ"
"அண்டம் பகிரண்டமும் அடங்க ஒருநிறைவாகி" — தாயுமானவர்

என்ற தொடர்களால் அறிக. இங்ஙனமே உடனாதலை;

"அருக்கனிலே சோதி அமைத்தோன்; திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன்; திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன்; பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன்; மேதகு
காலின் ஊக்கம் கண்டோன்; நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்; வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்" — மணிவாசகர்

"துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாய் என்நெஞ்சம் துறப்பிப்பாய்நீ"

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" — அப்பர்

என்ற தொடர்களால் அறிக. இங்ஙனமே வேறுதலை;

"கற்பனை கடந்த சோதி"

"உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்"

"சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க"

என்ற தொடர்களால் தேர்க. இவ்வாறு அண்ட பிண்டம் முதலிய தத்துவங்களின் ஓயாது ஒழியாது இயங்கிய இயக்கமே செம்பொருள் பதியானதின் உண்மையைப் புலப்படுத்தும்- இறைவனின் பதிதலாம் இருப்பு நிலையே

அண்ட பிண்டங்களின் தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம் ஆகிய மூன்றோடு. உயிரறிவின் மறைப்பும் விளக்கமும் ஆகிய இரண்டும் சேர்ந்து ஐந்தொழில்களை ஆக்குவதாகும். எனவே இவ்வாக்கங்களை ஆக்கும் இறைவனின் இருப்பு நிலையின் இடம் எது? அதுவே அம்பலம் என்ற பரவெளியாம்.

" அம்பலம் ஆவது அகில சராசரம்
அம்பலம் ஆவது ஆதிப் பிரானடி
அம்பலம் ஆவது அப்புத்தி மண்டலம்
அம்பலம் ஆவது அஞ்செழுத் தாமே " — திருமந்திரம் 2775

என்ற திருமந்திரம் பரவெளியினது பொருளை விளக்கமாக்கிறது. அப் பொருளின் தத்துவ நீர்மையை,

" பூதங்கள் ஐந்இற் பொறியிற் புலனைந்தில்
வேதங்கள் ஐந்தின் மிகும்ஆக மந்தன்னில்
ஓதும்கலை காலம் ஊழியுடன் அண்டப்
போதங்கள்ஐந்தில் புணர்ந்துஆடும் சித்தனே " — திருமந்திரம் 2730

என்ற திருமந்திரத்தால் தெளியலாம். இந்தப் பரவெளியின் பண்பார் விரிவினை நூலகத்து இனிக்காணலாம்.

# ABOUT THIS BOOK.

It is possible to discern a similarity between the manifestation of Siva in the form of the symbol Linga identified with the cosmos and the Linga signifying the Supreme Being inwardly perceived as Siva, while considering the philosophic system of the matter as seen within the space as expounded by Thirumoolar. Linga is the symbol denoting Siva. Siva being an object, it is implied that it possesses an Intrinsic Power, or energy. It is this Intrinsic Power that is called Sakthi in our philosophic system. Sivalinga is the symbol of the Supreme Being as seen in the inseparable combination of Siva and Sakthi. Those who have attainend the power of inner perception have called Siva as Father and Sakthi as Mother. Therefore it is obvious that the Intrinsic Power is considered as Mother and the Supreme Being as Father. Therefore whatever substance is taken into consideration that substance appears in two forms in the form of Power and as the basic field for the Constituent Power. This is similar to the Sun and its rays. Therefore Linga is the Supreme Being called Sakthi and Saththan (Siva). Therefore the philosophers who attained the highest Enlightenment named the Supreme Being 'Sathasivalingam'. Sathasivam, the Supreme God with his inseparable Sakthi, the Chief cause of action, created the Cosmos by his mere thought. Therefore the whole cosmos is the diffusion of the Intrinsic Energy. An exposition of this idea is found in the inspired songs of Thirumoolar. In two of those stanzas it is said that the Space is the holy body of the Supreme Being Sathasivalingam and the stars discernible in that Space form the wreath on that Holy Body. So it is for anybody to see that Sathasivalingam is the Siva of the Cosmos from its inception.


It is the Sathasivalingam, the Siva of the Cosmos that we have called bluish white Star of the Heavens. It is this that is called 'Sutthha Siva'. Thirumoolar called this 'Sathasiva, the pearl of the Great Space'. It is the Sathasivalingam which like the tree and its hardness inseparably exists with Thiruvarul, the Intrinsic Power which co-ordinates and puts into action Ayan,

Hari, Aran, the Supreme (Sathasivam), Aimugan (Mahesan), Vindhu, Natham seen on the active part of the Great Space. In this form of Sakthi, there are five manifestations called 'Kalai'. The sun gets its rays due to the Grace of that Sakthi. The graceful presence of the Supreme Siva is there in those lustrous rays It is that Giant Red Heavenly Star, the Supreme God. After that Supreme God by his grace makes his abode, the lustrous rays of Thiruvarul radiates and fills all the ten directions. This is the Heavenly Star with its fiery colour. It is that Heavenly Star called 'Paraparai'. Now the Paraparai becomes an Intrinsic power of the Supreme God Paraparam. Paraparai, the Intrinsic power of Paraparam manifests itself as a Divine Power due to the presence of the excessive nature of Paraparam. It is that which is called Sathasivalingam, the Suththa Sivam. It should be clear to us that on account of the excessive presence of Paraparam in Paraparai the Sathasivalingam reminds of something that is Form and Formless. It should be noted that the Nature of Paraparam is the Intrinsic Power and the excess of that Power is the Dviine Form. The excess of that Power is 'Sathakiam'. The nature of the generation of that excess power is called the differnt faces of Sathasivam. Those faces are discernible from the direction of the Head, the East, the South, the North and the 'West'. It is natural for it to appear with the face on the top of the Head called "Eesanan" which is glasslike in colour. The face towards the Eastern direction called "Thatpurudam", is yellow, the Face towards the South called "Ahoram", is Blue, the Face towards the North called "Vamathevam" is red, the Face towards the West called 'Sathiosatham' is Milk White. The colours resemble the chief colours of the nucleus of the Stars. As the Intrinsic Power and the Divine Power emanate from Paraparam and Paraparai in this manner the Intrinsic Power without a Form and the Divine Power with Form Appear in an inseparable state, it takes the shape of a both Form and Formless appearance like a reflection on a mirror. That Form and Formless appearance is called Sivalingam. That is the Sathasivalingam. This Sathasivalingam, as explained by Science, in the ascending state is the End in the lustrous Heaven and is the Origin in the decending state. The End and Origin of the Space is the central position of the Space of the Divine Power. That Origin and the End on the active side appear in Form and Formless state showing the power of Space. In the domain of the Stars in the descending order on the active side, the Star of a particular colour gives the appearance of a particular Divine Form. The four Forms are steps in the descending order. The Four Formless shapes are steps in the ascending Order. The one with the Form and Formless state is the middle, step. All these are Forms assumed by Paramasivam out of His Grace according to his wish. A stanza in Thirumanthiram shows how the celestial space is divided into the categories of cause and effect and how the appearance of the Intrinsic Power takes place. The Supreme God Siva through whom the cause and effect takes place is called Paraparam, The End is the Heavenly Star. The Origin is the Giant Red Heaveanly Star. As the unknown is inferred through the known the Giant Red Star — to presume the Nucleus of the Star as Paraparam, it is called Paraparam, the End and the Origin. It is a scientific fact that the Giant

Heavenly star is present in the ascending and descending state in the stars and the planets. So we come to the conclusion that it is Paraparam that permeates everything. He being the Supreme, diffusing in both cause and Effect like sweet smell continuously performs the Five great actions.

The Supreme God permeates the whole Space. That Heavenly Space due to the expanding power of the Supreme God derives the system of Cause and Effect. The celestial Space evolved from Cause is called Parapara Space, Para Space and Paranilai state in respect of the expanding energy of the Supreme Being. Similarly the Paraveli in respect of Effect is called Paranilaiveli, Karananilaiveli, Kariyanilaiveli. The Paraveli connected with cause is termed the Larger Heavenly Space and the Paraparaveli derived from Effect is termed Sky. The larger celestial Space Paraveli derived from cause includes within itself Paraparam and Paraparai. The Space called Param includes within itself Paravindhu and Pararanatham. The Paranilai Space includes within itself Parasivam, the Pure Being. In the same way Paraveli in respect of the Effect, the Paranilai which is the Formless Space, Paramasivam assumes the names of Parasakthi, Adisakthi, Thirothanasakthi. In the Space of the Form and Formless which is derived from Effect Sivam called Natham and Sakthi called Vindhu are seen in the Space derived from cause. In the same way in the Space derived from Effect the outer Space of Effect, the Sathasivam, Maheswaran, Sudhavidhai are clearly seen. There is acertain kind of similarity between the Pure light and the light of the sky. Let us examine it.

M. E.




இந்நூலாசிரியர்:

புலவர் நா. சிவபாதசுந்தரனுர் அவர்கள்



உ

# பரவெளித் தத்துவம்

அல்லது

# பதிமுதுநிலைத் தோற்ற விளக்கம்

★

## வான் பொருள்

## முன்னுரை : வான் - வானம்

வான் என்ற சொல்லும் வானம் என்ற சொல்லும் ஒரு நிலைப் பொருளாக நாம் கருதிவிடுகின்றோம். அவ்வாறு கருதுதல் முறையன்று. வான் என்பது பேரண்டங்கள் அடங்கிய மாபெரும் வெளி. வானம் என்பது சிற்றண்டத்துச் சிறு வெளி. பூமண்டலமாகப் பூத்த நிலவுலகம் ஒரு சிற்றண்டம். இத்தகு சிற்றண்டங்கள் தோன்றுவதற்கு முன்பு இருந்த மாபெருவெளியே வான். சிற்றண்டம் பெருவெளியிற் பிறந்த பின்பு, அவைகளுக்கிடையே விளங்கும் பெருவெளியே வானம். பூமண்டலமாம் நிலவண்டம் மாபெருவெளியில் நிலை கொள்ளுங்கால் நாள் என்ற நட்சத்திரங்களும், கோள் என்ற கிரகங்களும் மலிந்த ஒளிப் பொருள்களின் பரப்பு ஏற்படுகின்றது. இதனால் மாபெரு வெளி சிறுவண்டங்களின் சிறுவெளியாகப் பகுதலைப் பெறுகின்றது. அப்பகுப்பு வெளியே ஆன்றோர் வானம் என்றனர். விண்ணென விளங்கும் விண்ணில் மின்னிடும் ஒளிப்பரப்பை நடுவாகக் கொண்டு அதன் மேற்பக்க வெளி வான் என்றும், அதன் கீழ்ப் பக்க வெளி வானம் என்றும் தொல் தமிழர் தேர்ந்தனர். பேரொளிப் பொருளெல்லாம் தோற்றம் பெறுதற்குக் காரணமாக வான் வளம் மலிந்ததால் வான் காரணவெளி என்றும், அவ்வொளிப் பொருள் எல்லாம் காரியப்படுதற்குக் களமாக வானம் கண்ணியம் பெற்றதால் அதனைக் காரியவெளி என்றும் சொல்லப்படும். காரணம் — காரியம் என்ற நிலையாக வான்-வானம் என்பன தோன்றினும் அவை பொருள் முறையில் ஒன்றே. பர வெளி தன்னிலையில் வான் என்றும், பிறவற்றை விளக்கும் முன்னிலையில் வானம் என்றும் அமையும். வான் பொருளாயின் வானம் அப்பொருளின் தத்துவமாகும். வானகமும் மண்ணகமுமாய் நிறைந்த வான் பொருள் என்று சித்தியாரில் குறிப்பிடுவதும் ஓர்க.

வான்பொருள் கதிரோன் நிலையில் அதன் புறத்தே புல்லிப் பொருந்துவதால் அது புறப்பொருளாயிற்று. புறப்பொருளான வான் என்பது புவி நிலையில், அதன்புறமான வானம் என்பதற்குப் புறமாக அமைவதால் புறத்திற் புறமாயிற்று. வானம் என்பதும், அவ்வான் பொருள் நிலக்குக் கீழ் (உள்) முகப்பட்டு நிலைப்பதால் புறத்தில் அகமாகும். புறத்தில் அகமான வானம் மாந்தனின் மண்ணுலக வாழ்விற்குக் காலப்பொருளின் இடமாகக் கணிக்கப்படுதலின் அஃது அகத்திற் புறமாயிற்று என்று நாம் ஈண்டு நினைதல் வேண்டும்.

## வான்தோற்றம்: பரம் - பராபரம்

வான் என்ற சொல் வா+ன் என்று பகுக்கப்படும். "வா" என்பது வாவு — வாவுதல் என்ற கருத்துடையது. வாவுதலைத் தாவுதல் என்பர். ஒன்றிலிருந்து இன்னொன்றுதற்கு வாவித் தாவுதலைப் பாய்தல் என்பர். இப்பாய்தல் ஞானிகள் அருட்சி என்பர். அவ்வாறு வாவித்தாவும் பாய் பொருளின் பண்பார் விளக்கமே வான். ஒன்றிலிருந்து இன்னொன்றுதற்கு வாவும் பாய்பொருள் நீக்கமற எங்கும் நிறைந்து பரத்தல் நிலையதாதலின் அது பரத்தற் பொருண்மையது என்றும் துணியலாம். இதனல் அஃது "பரம்" என்ற பெயர்த்தாயிற்று. இச்சொல்லும் "பர்+அம்" என்று பகுக்கப்பட்டு அக்கருத்தை வெளிப்படுத்தல் காண்க. "அம்" தொழிற்பெயர் விகுதி. பர்—பரத்தல். பரத்தல் பொருண்மையால் ஆகிய பரப்பே வான். பரத்தல் பெருக நுண்பரப்பு, பரத்தல் பொருண்மையால் நிறைவுறுதலின் நுண்வெளிப் பரப்பாக அது துலக்கம் உறுகிறது. வெள் + இ=வெளி. வெள் — வெண்மை — வெளிப்பாம், இ-உடையது. வெளிப்பாம் வெண்மையை யுடையது வெளியாம். நுண்பரப்பு வெளிப்பரப்பாகுதல், அவ்விடத்து நுண்மையை வெளிப்படுத்தலாம். இதனுலே வெளிப்பரப்பு நுண்வெளிப் பரப்பு எனப்பட்டது. இதனையே தத்துவநெறியர் பரவெளி என்றனர். அருள்வெளி என்பதும் இஃதென்க. முன்னர் ஒன்றிலிருந்து இன்னொன்று தற்கு என்ற தொடர்க்கூற்றில் இன்னொன்றுதல் என்பது பரம் என்ற பொருளைச் சுட்டுமாயின், ஒன்று என்று உரைத்தது எது? என்ற வினு எழுமன்றே; இதற்கு விடை இயம்பின், 'அந்தப்பரம்' பொருளினைத் தோற்றுவித்த — பாய்பொருளினைத் தோற்றுவித்த மேலான பொருண்மையைக் குறிக்கும். அந்த மேலான பொருண்மையே மேலோர் 'பராபரம்' என்றனர். எனவே பராபரத்தின் முன்னிலையில் நுண் பரப்பு நுண் வெளிப் பொருளாய் — பரம் என்ற பொருளாய்த் தோற்றம் பெற்றதென்று நாம் அக்கருத்தை நெறிப்படுதல் இனி முறையாகும். இதுவே பரமாகாயம் என்ற மாபெரும் வெளிப்பொருள்.

## வான்தோற்ற வளர்வு : பராபரை - பரபிந்து.

முழுப்பொருளாம் பராபரம் என்ற முகப்பில் இன்னொன்றுதற்குப் பரத்தற் பொருண்மையான பாய்பொருள் முற்பட்டுத்தாவுகையில் அம் முகப்பியல் உள்மையாகிறது. இதுவே வான் என்ற மாபெரும் பரவெளி. பராபரம் முன்பியலில் அத்தாவுகைக்குக் காரணம் என்ன என்ற வினு ஈண்டு நிகழலாம். சூரியன் இருளை ஓட்டுவது எதற்காக என்று கேட்டால் இதற்குக் காரணகாரியமுறையாக விடை இறுத்தல் முடியாது; அஃது இயற் கையானது என்றே சொல்வம். இங்ஙனமே அத்தாவுகையும் இயற்கையா னது என்றே அமையும். வல்லமைப் பாடான வான் என்ற பரவெளியைத் தோற்றுவித்த பரத்தற் பொருண்மையான பாய்பொருளை நம் முன்னோர் பராகம் என்ற சொல்லாற் புலப்படுத்தியுள்ளனர். பர் + ஆகம் = பராகம். பர் — பரத்தல். ஆகம் — உடல். பரத்தலால் ஆக்கமான ஆக்கை உடையது பராகம் என்று பகு சொல் முறையிற் புலனுகின்றது. தொகுமுறையில் அச் சொல் 'துகள்' என்ற கருத்தாகும். எனவே பர் என்ற பகுசொல் ஆகுபெய ராய் ஒள்ளிய நுண் துகளைக் குறிக்கும். ஆகம் என்பது பரத்தலால் துலங்கும் ஒள்மையைப் பெற்ற நுண்துகள்கள் தமக்குரிய பற்றுக்கோடாம் ஆக்கை என்ற ஆதாரத்தைப் பெற்று நிலைபெறுதலைக் குறிக்கும். உள்மை இயலான ஒள்ளிய நுண்துகட் பொருள்கள் நீக்கமற எங்கும் பரந்து நிறைந்து, பராபரத்தின் முகப்பியலை நுண்வெளியாக்கலே பராகம் என்ற சொல்லின் செய்தியாம். இதுவே வான் பொருளின் முதல்வளர்வு. பரா பரத்தின் முகப்பிலிருந்து ஒள்ளிய துகட்பொருள்கள் நுண்வெளியில் மென் மேலும் இடையறுது பாய்தலால் வெளியின் நுண்மை இயல்பு மிகுதியுறு கிறது. அவ்வியல்பு மிகுதியாம் பொருண்மை வேறுதிறனின்றி அந்நுண் வெளியையே மீண்டும் பற்றுக் கோடாகக் கொண்டு குறியுறுதலைப் புரிகின் றது. இதனுல் உள்மைவெளி தனக்குரிய மெய்மையைப்பெறும் வெளியாக வெளிப்புறுகிறது. அதாவது, பராகம் என்ற குறிப்பொருளும் பரவெளியும் பிரிக்க முடியாத ஒருபொருளாக அமைகிறது. குறியற்ற பரவெளி இது போது குறிக்குரிய பரப்பாக மிருதல் வான்பொருளின் மறுவளர்ச்சியாம். குறி என்றது அடையாளமாம். ஈண்டு அடையாளம் என்றது, பரவெளி உருவம் பெறுதல். அதாவது பரத்தற் பொருண்மை தனக்குரிய உருவாம் உடல் பெற்றுப் பொருள் நிலைப்படுதல். பராபரத்தின் நுண்பரப்பில் பாய் தற் பொருண்மை அந்நுண்பரப்புக்கு ஒப்பாக ஒன்றி உள்ளமைந்து ஒளி ருதலே பொருள் நிலை. உடல் என்பதும் உடு + அல் என்று பகுக்கப் படும். உடு — உள்நிறைதல், அல் — அல்லாதது, உள்நிறைதல் பெருது நிறைந்த தொன்று உடலெனப் பெறுதலில் அக்கருத்தும் ஈண்டு அமைதல் ஓர்க. பாய்தற் பொருண்மையான பரம், பரம்பொருளாகப்

பதம் பெறுதலென்க. இதனை இன்னும் விரிக்கின், பரத்தற் பொருண்மை பரமென மிக நுண்மையாக உருவம் பெற்றுக் காலப்போக்கில் அதனியல்பு மிகுதியாகும். அம்மிகுதிப் பொருண்மையும் அப்பரத்தற் பொருண்மையின் செயலால் தோன்றிய பொருளாதலின் பிரிவற்ற செயற்படு பொருளாகிப் "பரை" என்ற பெயர்ப்பொருளைப் பெற்றதாம். இதுவே பராபரம் பராபரை ஆனதின் விளக்கம். பராபரையும் பராபரத்தின் வடிவமாம். பரா பரையும் பொருளால் ஒன்றும், தன்மையால் இரண்டாயும் பிரிக்க முடியாத தொடர்பு நிலையது என்றவாறு. பராபரம் என்ற ஒரு பொருள் தான் பரவெளிப்பட்டுப் பரையாய்த் தாதான்மியமாம் பிரிவற நிற்பதெனத் தெளிக.

இன்றைய மேலைத்தேய வான்வெளி விஞ்ஞானிகளும் பராகம் என்ற துகட் பொருண்மையைத் "துகளாவி" என்று நம் கருத்துக்கு ஒருமைப் படக் குறித்தது விருந்தாகும். அவர்களின் துகளாவிக் கருத்து விளக்கம் நமது பராகம் என்ற சொல்லிலும் ஏற்படும். அச்சொல் "பார் + ஆ + கம்" என்று பகுக்கப்படும். பர் — பரத்தற் பொருண்மையான துகள். ஆ — ஆவி. கம் — நீர். எனவே துகளாவிகள் நீர்த்திவலைகளாகும் என்ற விஞ்ஞானக் கருத்து இப்பகுசொற்களால் அமைகிறது. இதனை நம் தத்துவஞானிகள் "அமுதவிந்து" என்றருளியதும் எவ்வளவு வியப்புக்குரியது. இச்சொற் செய்திகளால் பரத்தற்பொருண்மை ஆவியுருவானதுகள் என்பதும், அவ் ஆவித்துகள் நுண்பரப்பை நுண்வெளிப்பரப்பாய்ப் பரந்து நிரப்பி நீர்த் திவலைகளாகக் கூர்தல் பெற்றதென்பதும் பெறப்பட்டன. இதுவே பரா பரை என்ற தத்துவத்தின் விஞ்ஞான விளக்கம்.

பரத்தற் பொருண்மையான துகளாவி பரவெளியிற் குறியிடம் மேவுங் கால் மெய்மையியலாக உள்ளுறுதலால் "மெய்யுள்" ஆகிறது. இம்மெய்யுள் நம்மவரால் "வாயு" என்று பெயர் பெற்றது. இவ்வாயு பஞ்சபூதங்களில் பகரும் வாயு அன்று; சித்தியலான சீவித்தலுறும் பரவாயுவாக எண்ணல் வேண்டும். வாயு என்ற சொல் "வாய் + உ" என்று பகுக்கப்படும். உள் என்பதே சொல்லாக்கில் உ என்றுயிற்று. வாய் என்பது இடம், முகம், வழி என்ற கருத்துக்களைத் தரும். வான் என்ற பரவெளியில் துகளமுது விந்து வாகக் கால் கொள்ளுதலையே வாய் என்ற பகுசொற் பொருளாம். இன்னும் விரிக்கின், பரவெளியில் மின்னும் மின்பொருள்கள் பல்கிப் பெருகுவதற்குச் சத்தி நிலையான துகளாவிகள் ஒளிமுகம் கொள்வதற்கு மையவிடம் மருவலே 'வாய்' என்பதாம். மையவிடமான வாயின் உள்ளே நீர்த்திவலைகள் உள்ளுறுதலே - கால்விடுதலே " உள் " என்ற " உ " வாகும். எனவே, வான்வெளி பராபரத்தின் இடவாற்றலாகப் பரா பரையாக வளர்முகம் பட்டதென்று ஈண்டு நாம் தெளிதல் வேண்டும்.

வாயு என்பதின் வாய் என்ற பகுதி இடம் எனவே, உள்மையின் மெய்யாகவும், அச்சொல்லின் விகுதியான உள்ளென்ற 'உ' என்பதும் உ – உய் — உயிர் என்று வரப்பெறலால் உள்மையின் உயிராகவும் உளங்கொள்ளலாம். எனவே, துகளாவிகளின் பொருண்மை உயிர், உடல் என்ற பொருளாதற்கு உரியதென்பது பெற்றும். இனி, தத்துவ – விஞ்ஞான முறையில் இக்கருத்து ஒப்புமையாதலை விரிப்பாம்.

பரவெளியின் இடவாற்றலைப் பராபரையாகக் குறித்தோம். பராபரையின் உருவை "உ" என்ற எழுத்து வடிவாக ஞானிகள் உணர்ந்துள்ளனர். இந்த "உ" என்ற வடிவைக் கொண்டே துகளாவிகளின் வாயு என்ற மெய்யுளை விளக்கலாம். புள்ளி, புள்ளியால் அமைந்த சிறு சுழி, அதனையொட்டிவரும் உட்கவிந்த வளைவு, அவ்வளைவினை மருவிய நேர்கோடு என்பன 'உ' வின் வடிவக் கூறுகளே. இவ்வடிவக் கூறுகளே துகளாவி வாயுளாகும் விஞ்ஞான செய்திக்கு ஒருபுடை ஒப்பாக அமையும். எவ்வாறு இவைகள் ஒப்பாக அவற்றைத் தருகின்றன என்பதை நாம் எண்ணுவாம். துகளாவிகள் பரவெளியிற் காலூன்றலே உகரவரிவடிவில் உள்ள புள்ளி. இப்புள்ளியை விஞ்ஞானிகள் ஒப்புக்கொண்டு மையம் என்று கூறினர்கள். நம் சித்தாந்திகள் இம்மையம் என்ற புள்ளியை நுண்விந்து என்றனர். இவ்விந்து பரவெளிக்குக் காரணமுறையில் அமைதலின் பரவிந்து எனப்பட்டது துகளாவிகள் பரவெளியில் புள்ளியாய்க் காலூன்றிய பின்பு அவைகள் உள்முகமாக உழன்றன. அந்த உழலல் இயக்கில் அவற்றில் அடர்த்தி மிகவே அவைகள் இறுகல் உற்றன. இந்த விஞ்ஞானக் கருத்து உகரவரி உறுப்பில் உள்ள புள்ளியின் சிறு சுழிக்கு ஒப்பாகும். இதுவும் பரவிந்துவின் தூலநிலையாம். சிறு சுழியாய் இறுகலுற்று முகம் (வாய்) கொண்ட துகளாவிகள் எல்லாப் பக்கங்களிலும் ஈர்ப்பு விசையால் இழுத்தல் உறவே சிறு சுழியான புள்ளியைச் சுற்றி மேலும் துகளாவிகள் பெரும் பந்துபோல் சூழ்ந்து கொண்டன. இந்நிலையில் அதில் ஏற்பட்ட விசையால் பம்பரம் போன்ற சுழற்சி அதற்கேற்பட்டது. அப்போது அத்துகளாவிகளைப் பார்த்தால் ஒளிப்புகையாகத் தோன்றும். இந்த ஒளிப்புகை என்ற வெள்புகையே விண்மீன்களின் பிறப்பிடம் என்று மேலை விஞ்ஞானிகள் விளம்பியுள்ளனர். இதுவே, உகரவடிவ உறுப்பில் சிறுசுழியான வட்டத்தில் இருந்து மேல் எழுந்த வில் போன்ற உள்வளைவுப் பகுதி. உடல், உயிர், வெளிப்படுவதற்கும் ஒடுங்குவதற்கும் உரிய வாயிலாக—இல்லமாக அஃது இயன்றதாகத் தமிழ் ஞானிகள் தேர்ந்துணர்ந்து "குடில்" என்று பெயரிட்டனர். இச்சொல் "குட்+இல்" என்று பகுக்கப்பட்டு குடில் என்று அமைந்தது, "குட்" என்பது வளைவு. இல்—அமைவிடம். வளைவான அமைவிடம் குடில் என்பது பெற்றும். இது பரவிந்து என்று அவ்ஞானிகளால் குறித்தபடியால் இரண்டும் ஒன்றே. இவ்வாறு

ஒளிப்புகைச் செய்தியும் காரணப்பரவெளியிற் கொள்ளும் பரவிந்தாம் குடிலின் செய்தியும் ஒப்புறல் காண்க. பரத்தற் பொருண்மையான துகளாவிகள் பரவெளியில் காரண நிலையில் ஒள்ளிய வெண்புகையாக விளக்கம் பெற்றதலால் அவைகள் ஒள்ளிய வெள்மையை உள்ளடக்கிக் கொள்ளும் கருப்பொருள் எனத்தேறலாம். அத்துகளாவிகளால் நிறைந்த பரவெளியும் முதற்கண் கருநீலமாகவே இலங்கிற்று எனவும் துணியலாம். இருள்மையாகத் தோன்றிய பரவெளி துகளாவிகளின் ஒளிப்புகையால் வெள்மையாக வெளிப்புக்கொள்வதையே பரவிந்தாம் குடிலுக்கு மறுபெயராக நம் தத்துவ ஞானியர் கொடுத்த "மாமாயை" என்ற சொல்லே எடுத்துக் காட்டும். மா+மாய்+ஐ = மாமாயை. மா—கருமை. மாய்—மாய்தல்' ஐ—அழகு, எனவே கருமை மாய்தலால் வெள்மைப் பண்பழகு ஆகியது என்று அப்பகு சொற்களின் திரள் கருத்தால் அதனை அறிக. எனவே விஞ்ஞானக் கருத்தால் பரவிந்து ஈரமுடைய ஒள்மைப் பொருள் என்பது பெற்றும். இதனாலேயே பரவிந்து சுத்தமாயை என்றும் சொல்லப்படும், முழுப்பொருளாம் பராபரம் வனப்புப்பட்டு பராபரையாயும் பரவிந்தாயும் நின்றதென்க.

## 2 வான்பொருள் மலர்ச்சி

### விண்நிலை : அம்மை - மைம்மை

வான்வெளியானது "வெள்" என்ற ஒள்ளொளியின் விளக்கம் உடையது. வெள் — வெண்மை. இந்த வெள்ளொளி அடங்கிய பொருளே வெளி. இவ்வெளி அவ்வெள் நுண்மையைத் தூலமாய் வெளிப்படுத்தற்குக் கூர்தல் முகங் கொள்ளுஞ் செயல் நிலையே விண்நிலை யெனப்பட்டது. விள்—விண் என்பது விளக்கமாம். விளங்குதல் இல்லாத வான் பரப்பானது விளங்குவதற்கு வெளிப்புறுதலே விண்நிலையாம். விண்நிலையைத் தெளிந்து கொள்வதற்கு வானம் என்ற சொற்பொருளே நமக்கு உதவும். வானம் என்ற சொல் வான் + அம் என்று பகுக்கப்படும். இதில் வான் விளக்கம் முன்னர் தெரித்தோம். ஈண்டு "அம்" என்பதின் விளக்கத்தைத் தேர்வோம். அம் — அழகு, நீர் என்ற கருத்துக்களைத் தரும். அழகு என்ற கருத்து சிறப்பாக வானுக்கும், நீர் என்ற கருத்து சிறப்பாக வானத்திற்கும் நேருறும். வான் அழகாவது, அதன் கூர்தல் நெறிப்போக்கில் வீண்ணெனும் ஒலியால் அஃது ஒவென விளங்குதல். வானம் அழகாவது, கூர்தற் பொருள்கள் மைப்பொருளாகி மழையைச் சொரிவதாம். துகளாவியால் வான்வெளி கூர்தற்பட்டு வெண்புகையாய்—மேகக்கருவாய்ச் சிறந்த

நிலேயே விண்நிலேயாம். வானின் பொருளாம் வெண்புகை விண்மீனுய் ஒளிர்வதற்கும் மழைமேகமாய் ஒலிப்பதற்கும் முதற்கண் அது மைம்மை யாதல் வேண்டும். அதாவது "அம்" என்பது அம்மையாதல் வேண்டும். அம்—நீர். மை —மேகம். நீரையுடைய மேகத்தையே அம்மை என்றேம். சித்தாந்திகள் இதனையே சிற்சத்தியாக நினைத்தார்கள். மை – கறுப்பு. மை —மேகம். கறுப்பு மேகமே மைம்மையாம். வெண்மேகமாம் நீர்மேகம் நீர் இயல்பியல் மிகுதியுறும் போது கருமையடையும். எனவே அது கார் மேகம் எனப்படும். கார்மேகத்தை உடையதே வானம். நீர்மேகத்தை யுடையதே வான். வெண்வெளி நீலவெண்மையாகவும் அதிநீலவெண்மை யாகவும் மலர்ச்சியுறும். நீலவெண்வெளி வானின் விண்ணுகவும், அதி நீலவெண்வெளி மண்ணின் விண்ணுகவும் — வானமாகவும் நாம் நேரலாம்.

முழுப்பொருளின் புறச்சத்தியால் பரத்தல் பொருண்மையான நுண் பொருள் நுண்பரப்பை வெளியாக மிகுத்திடவே துகளாவிகள் துலங்கின. இதனே இன்றைய மேலே விஞ்ஞானிகள் ஒப்புதல் கொள்வர். வல்லமைப் பொருளான மென்துகள் வாயுள்கள், கூர்தல் இயல்பால் ஆங்காங்கு ஒன்று சேர்ந்து பற்பல வாயுட்திவலேகளாக உருண்டு திரண்டன. திரண்ட துகள்வாயுள்கள் இறுகித் தனித்தனி வாயுட்பிண்டங்களாக ஒன்று சேர்ந் தன. இவ்வாயுட் பிண்டங்கள் வான் என்ற வெளியில் உருவானவுடன் அவைகளுக்கிடையே துகளாவிகள் அற்றதான வெற்றுவெளி அமைகிறது. அவ்வானின் வெற்றுவெளியினையே ஆன்றேர் விண் விளக்கமுடையது என்ற கருத்தைக் கொள்ளலாயினர். வாயுட் பிண்டங்களின் இடையே விளங்கும் வெளியின் வெளிப்பிடமே. விண்ணுலகம் இவ்வாறு வாயுட் கோளங்களும் வெற்று வெளிகளும் ஏற்பட்டு மயங்கிய வான்வெளி நிலேயே நாம் விண்நிலே என்றேம். இதுவே விண்மீன் பிறப்பின் முற்பகுதியாம். இதுவே பராபரை பரவிந்தாக நிலேபெற்ற செய்திக்குரிய பொருள் முதற் கருத்தாம்.


## விண்ணகநிலே : பரநாதம் - பரசிவம்

வாயுட் பிண்டங்கள் சிதைந்து ஒள்உருவாய் வெற்று வெளியில் பொருள் நிலேப்பட்டுப் பரவல் பெறலே விண்ணக நிலேயாம். விண் ஒள்ளிய பொருள்களுக்கு இடமாக இயலுறுதலே விண்ணகமாகும். இஃது எவ்வாறு பரவெளியாம் காரணப்பரவெளியில் இயன்றது என்பதனே இனி நோக்கு வாம். வாயுட் கோளங்களின் இயல்பை ஆயுங்கால் அதன் மையத்தில் அடர்த்தி மிகுதியாயும், அவற்றைச் சுற்றிப் போகப்போக அடர்த்தி குறைவாயும் இருக்கும். இதனுல் அக்கோளங்களின் நடுப்புள்ளியில் இருந்து பக்கத்தில் உள்ள பொருள்களேப் பிடித்துத் தன்பால் ஈர்க்கும் சக்தி பிறக்கிறது. இந்த மையவீர்ப்புச் சக்தியால் வாயுட் கோளத்தின்

மேற்பரப்பில் உள்ள வாயுட்கள் உள் இழுக்கப்படுதலால் அக்கோளங்கள் வரவரச் சுருங்கிக் கொண்டே வந்தன. இச்சுருக்க நிகழ்விஞல் அவ் வாயுட் கோளங்களின் அமுக்கமும் அடர்த்தியும் பெருகிக் கொண்டன. இந்நிலையிற் பிறிதொரு மாற்றமும் இங்கு நிகழ்வதாயிற்று. அதாவது ஒவ்வொரு வாயுட் கோளங்களுக்கிடையே ஈர்ப்புச் சக்தி ஏற்பட்டு நன்கு இறுகாத நிலையுடைய கோளங்கள் சிதறியும் விடுகின்றன. சிதறிய துண்டு கள் வான்வெளியில் சேண்மைப்பட்டு இறுகி அமுக்கம் அடைந்து, அதனுல் மிகுவெப்பமும் ஒளியும் உடையதாய் விளக்கம் கொண்டன. இறுகிய வெப்பவாயுட் கோளங்களே அவ்வெப்பவியல்பில் மிகுந்திட அக்கோளங் களில் உள்ள வாயுள் அணுக்கள் சிதைந்தும், சிதைந்த அவ்வணுத்துளிகள் மறுபடி ஒன்று சேர்ந்து புதிய அணுக்கள் உண்டாவதுமாக அஃது ஓர் அணுவுலையாக அமைகிறது. இந்த வாயுட் கோளத்தின் அணுக்களின் செயற்பாடுகளால் ஆகிடும் ஆக்கத்தையே "பொருள்" என்று தமிழ்ச் சான்ருேர் குறித்தனர். அக்கோளங்களின் செயற்பாடுகளைப் பொருள் என்ற சொல்லும் விளக்கம் தருவதாக அமைந்துள்ளது. இச்சொல் பொர் + உள் என்று பகுக்கப்படும். பொர் — பொரு — பொருதல் என்று அமையும். வாயுட்கோளங்களின் இறுகல், சிதறல், அமுங்கல், சிதைதல் சிதைந்தனசேரல், அது புதிதாதல் என்பன எல்லாம் பொருதலன்றி வேறென்னவாகும். 'உள்' என்றது பகுதிப்பொருள் விகுதி. அதாவது, வாயுட்கோளத்தின் உள்ளே — அகத்தே அணுத்துளிகள் பொருதி அணு வுலையாக மாறுதலைக் குறித்திடும். இதனுல் அது தொழிற்பெயர் விகுதியாக வும் அமையும். தத்துவநோக்கில் பொரு—ஒப்பு என்றும், உள்—உள்மை என்றும் கருத்தாகும். ஒப்பு என்பது; முழுப்பொருளுக்கு ஒருபுடை ஒப் பாக வான்வெளியின் ஒளிப்பொருள்கள் சத்தியாய் ஒளிர்தல், உள்மை என்பது: முழுப்பொருள் ஒளிச்சத்தியின் ஒரு கூறினை வாங்கி அகத்திட்டுக் கோளத்தினுள்ளே இயன்ற பொருதற் பொருள்கள் நாளும் கோளுமாய் ஒளி விடுதல். எனவே, இறையொளிச் சக்தியாய் ஒண்மை கொண்டு ஒளிரும் உள்மையே பொருள் என்பது பெற்ரும். வாயுட் கோளத்தினுள் பொருத லுற்ற அணுத்துகள் வெப்பச் சக்தியாயும், வெளிச்சச் சக்தியாயும் காரணப் பரவெளியில் வீசலால் வான் விளக்கமாகி விண்ணகமாகப் புலனுயிற்று. இதுபோது வாயுள் — வாயுவாகப் புதிதுறுகிற தெனலாம். வா + யு = வாயு. வா — வீசல். யு — பகுதிப் பொருள் விகுதி. மிகவிரைந்து வீசலால் ஒளி திரளுதலும் வெப்பம் மிகுந்து பரவுதலும் விண்ணகப் பெற்றியதாம். இதனுல் விண்ணகம் "விசும்பு" என்ற பெயர்த்தாயிற்று. அந்த வாயுக் கோளங்களின் விஞ்ஞானச் செய்தியை நம் தத்துவநெறியர் "நாதம்" என்ற சொல்லால் செப்பிவிட்டனர். நாதம் என்பது நா — நாத் — நாதம் என்று வரும். நாத் — அசைதல் என்ற கருத்தது. அம் — தொழிற்பெயர் விகுதி பரவிந்துவின் முனைப்பால் பரவிந்து பெயர்தலுக்கு முற்படும்போது அதன் அசை பொருளே பரநாதம் எனலாயிற்று. பராபரையின் குறியும்

(பரவிந்து) அக்குறியின் செயற் பெற்றியும் (பரநாதம்) அப்பராபரையை ஒரு செம்பொருட்தத்துவமாக்கிறது. பராபரையின் அசையாக் குறிப்பொருளாம் பரவிந்தும், அசையும் குறிப்பொருளான பரநாதமும், ஒன்றித்து முடிவில் ஒரு சமசீர்ப்பொருளாய் ஒப்புற்ற முழு உருவமே காரணவெளியில் என்றும் இருப்பதாகிய சிவப்பொருள் என்க. முழுவுருவம் என்றது, அருவத்தில் உருவான உருவத்தையும் உள்ளிட்ட உருவம் என்க. இதுவே பரசிவத்தின் உருவமாம்.

## விண்ணகப் பொருள்நிலை : கலைமுறை




குளிர்நிலையில் உள்ள வெண்புகையாம் கருக்கொண்ட மேகம் வெப்பச் சக்தியையும் வெளிச்சத்தையும் வீசல் செய்யும் பெரும் இராட்சதக் கோளமாக முதற்கண் தோன்றுகிறது. இதன் பின்பு அது சிவப்பு இராட்சதக் கோளமாகும். இந்த விண்மீன் கோளமே ஒரு நிலையில் பொன்மை கலந்த சிவப்பு நடுத்தர விண்மீனாகும். இஃது இன்றைய சூரியனைப் போன்ற நிலையாம். இந்நிலைக்கோளம் கூர்தல் இயல்பு மிகுதியால் புதிய விண்கோளை

ஆக்கினும் ஆக்கும்; அவ்வாறு ஆக்காது விடுக்கினும் விடுக்கும். புதிய விண்மீன் நிலையை அடையினும் அடையாவிடினும் அக்கோளம் வெள்ளைக் குள்ள நட்சத்திரமாக அமையும். அமைந்தாலும் அவற்றுள் சில காலப் போக்கில் வெண்மை இழந்து கறுப்பு நிறமீறுக அடையும். மேலும் விண்ணகத்தில் வெண்புகைமேகமும், அவற்றுள் உருப்பெற்ற விண்மீன் களும் சிற்சில இடங்களில் மயங்கித்தோன்றும். வெண்புகை என்ற விண் மீன்கரு கூர்தலுற்று உருவமாகும்போது மிகப் பெரிதாயும், சிவப்புநிற வொளியைக் கொடுக்கக் கூடியதாயும், அடர்த்தியாயும், மேற்பரப்பு வெப் பம் குறைவாயும் இருக்கும். அது சிறிது சிறிதாய் இறுகிடும் போது அடர்த்தியும் மேற்பரப்பு வெப்பமும் நாளுக்குநாள் அதிகரித்துக்கொள் ளும். அவ்வதிகரிப்புக்குத் தக்கதாகப் பருமமும் குறைந்து நிறங்களும் மாறும். சிவப்பு இராட்சத விண்மீன் வளர்ச்சியிலே முறையே பொன் நிறம், மஞ்சள்நிறம், நீலநிறம், நீலவெண்நிறம் என்றிடும் வகையில் மாறிப் பருமனும் அதற்குத் தகக் குறையும். ஆனுல் அந்த ஏறு நிலை யான காரணத்திற்குப் பின்பு, இறங்கு நிலையாகிய காரியத்தில் அக் கோளங்கள் மேலும் இறுகும்போது உட்பாகத்தில் திரவநிலையை அடைந்து மேற்பரப்பு வெப்பநிலை மேலும் குறையும். அதனுல் அவைகள் நீலம் - மஞ்சள் - பொன் - சிவப்பு - வெள்ளை - கறுப்பு என்ற நிறங்களை முறையே திரும்பப் பெற்றுத் திகழும் என்று சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர். நமது ஞானிகளும் தத்துவங்களுக்கு வடிவு - நிறம் - குணம் - இயல்பு தொழில் - அடையாளம் - தேவதை - அட்சரம் - கலை என்பன கூறியவற்றில் இருந்து, ஒருபுடையாக அதனை ஒப்புக்கொண்டுள்ளனர் எனக் கூறலாம். விண்மீன் ஒற்றையாகவும் இரட்டையாகவும் கூட்டமாகவும் விண்ணில் அமைந்துள்ளது. வானம் என்ற காரியவெளியில் தெற்கு வடக்காக ஒரு விண்மீன் கூட்டமாக அமைந்துள்ளது. இதை நம் முன்னேர் ஆகாயகங்கை என்றனர். மேலையர் " பால்வழித்தோற்றம் " ( Milky Way ) என்று அழைத்துள்ளனர். இவ்வாறு கலை முறையில் விண்ணகப் பொருள் நிலையை மேலும் தேர்க.

## தத்துவமுறை :

விண்ணகப் பொருள்நிலையின் தத்துவ முறையை நோக்குங்கால் திரு மூலதேவரின் உள்ளப்பாங்கின்படி அண்டலிங்கமாம் உலகசிவத்திற்கும் ஞானலிங்கமாம் உணர்வுச் சிவத்திற்கும் உள்ள ஒப்புமைப்பாட்டினைக் காண்பதாகச் சொல்லிடலாம். இலிங்கம் என்பது சிவம் என்ற பொரு ளின் குறியாகும். சிவம் பொருளெனவே அப்பொருளோடு ஆற்றலையும் உடையது என்பதாம். அவ்வாற்றலையே நமது தத்துவநெறி சத்தி என்றது.

சிவமும் சக்தியும் செறிந்த பெரும் பொருளின் அடையாளமே சிவஇலிங்கம் என்பது. சிவத்தை அப்பனுவும் சத்தியை அம்மையாகவும் நுண்ணுணர்வினர் நுவன்றனர். எனவே அம்மை ஆற்றலாகவும் அப்பன் பொருளாகவும் அமைதல் காண்க. ஆதலால் எப்பொருளை எடுத்தாலும் ஆற்றலும், ஆற்றலுற்ற நிலைக்களமுமாக அப்பொருள் இருதிறப்படும். இது கதிரும் கதிரவனும் போன்ற நிலையாகும். எனவே, இலிங்கமானது சத்தி சத்தன் என்றதோர் பெருஞ் செழும்பொருளாம். இந்தச் செம்பொருளுக்குச் சதாசிவலிங்கம் என்ற பெயரை ஞானிகள் அமைத்தார்கள். சதாசிவனுகிய முழுமுதலே, தன்னைவிட்டு நீங்கா ஆணையாகிய சத்தியை வினைமுதற்காரணமாகக் கொண்டு அண்டத்தைக் கருத்தளவால் உருவாக்கியது. எனவே, அண்டம் அனைத்தும் ஆற்றலே. அந்த ஆற்றலின் பரிசைத் திருமூலதேவர்;

> " போது புனைகழல் பூமிய தாவது
> மாது புனைமுடி வானக மாவது
> நீதியுள் ஈசன் உடல்விசும் பாய்நிற்கும்
> ஆதி யுறநின்ற தப்பரி சாமே"

என்றும்;

> " தரையுற்ற சத்தி தனிலிங்கம் விண்ணாந்
> திரைபொரு நீரது மஞ்சன சாலை
> வரைதவழ் மஞ்சுநீர் வானுடு மாலை
> கரையற்ற நந்தி கலையுந் திக்காமே.

— திருமந்திரம் ; 1694, 95

என்றும் அருளியுள்ளார். இவ்இரு பாட்டில் சதாசிவலிங்கமாம் செம்பொருளின் திருமேனி விசும்பாகவும், அவ்விசும்பில் விளங்கும் விண்மீன் அத்திருமேனியில் அமையும் மாலையாகவும் சொல்லப்பட்டிருத்தல் காண்க. ஆகவே சதாசிவலிங்கம் உலகமுதற் சிவமாக உளப்படுதல் ஓர்க.

உலகமுதற் சிவமாகிய சதாசிவலிங்கத்தையே நாம் நீலவெண் விண்மீனுகக் குறித்துள்ளோம். இதுவே சுத்தசிவம் எனப்படும். இதனைத் திருமூலர் " சதாசிவம் நல்வெளி முத்தே " ( திருமந்திரம் : 1700 ) என்றனர். சதாசிவலிங்கமே பரவெளியின் காரியப் பக்கத்தில் காணப்படும் அயன், அரி, அரன், ஆண்டான், ( சதாசிவம் ) ஐம்முகன் ( மகேசன் ) விந்து, நாதம் என்னும் இவைகளை இயைந்து இயக்கும் திருவருள் ஆற்றலை மரமும் அதன் வயிரமும் போலவிட்டு நீங்காதிருக்கிறதென்க.

இத்தகு சத்தியில் ஐந்து கலைகள் உண்டாகும். அச்சத்தியின் அருட்சியால் ஞாயிற்றின் கதிர்கள் உண்டாம். அந்த ஒளிக்கதிருள் பரமாம் சிவம் அமர்ந்தருளும். அதுவே பெரிய இராட்சத சிவப்பு விண்மீனை பராபரமாம். அப்பராபரம் அமர்ந்தருளிய பின்பு அவ்வொளிக் கதிராகிய திருவருள் பத்துத் திசையிலும் நிறைந்து இயக்கி அமையும். இதுவே கிச்சிலி நிறமான விண்மீன். அம்மீனே பராபரை எனக்குறிக்கப்பட்டுள்ளது. ஈண்டு பராபரை, பராபரத்தின் ஒரு தத்துவப்பொருளாகிறது. பராபரத்தின் தத்துவப்பொருளான பராபரை பராபரத்தின் இயல்பு மிகுதியால் மூர்த்திப்பொருளாகவும் எழுச்சியுறும். அதுவே சுத்தசிவமென்ற சதாசிவலிங்கமாம். சதாசிவலிங்கத்தைப் பராபரம் பராபரையிடத்துக் கொள்ளும் இயல்புமிகுதியின் நிலைக்குறிப்பொருள் என்றும் - சொரூபப்பொருள் என்றும் நாம் தெளிதல் வேண்டும். பராபரத்தின் இயல்பே தத்துவமென்றும், அவ்வியல் மிகுவே உருவமாம் மூர்த்தி என்றும் நாம் எண்ணல் வேண்டும். அவ்வியல்பு மிகுதி சதாக்கியம் எனப்பட்டது. சதாக்கியமான இயல்புமிகுதி முகிழ்க்கும் நீர்மையைச் சதாசிவத்தின் முகங்களாகக் கூறப்பட்டது. அம்முகங்கள் உச்சி, கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்ற திசைகள் நோக்கி விளங்கின. விளங்கிய அம்முகம் முதற்கண் வண்ணமாகவே அமைதல் இயற்கையாதலின் அம்முறையில் உச்சி முகம், ஈசானம் - படிக நிறம். கிழக்கு முகம், தற்புருடம் - மஞ்சள் குங்கும நிறம். தெற்குமுகம், அகோரம் - நீலநிறம். வடக்கு முகம், வாமதேவம் - சிவப்பு நிறம். மேற்குமுகம்: சத்தியோசாதம் - பால் நிறம் என்றிட அமையும். இங்கே சொல்லப்பட்ட நிறங்களும், நட்சத்திரக்கருவினது உள்ளது சிறந்தலான நிறங்களும் ஒத்தமைதல் காண்க. இவ்வாறு பராபரம் பராபரையிடத்துத் தத்துவமும் மூர்த்தியுமாகக் கால்கொண்டெழுகையில் தத்துவம் அருவமாகவும், மூர்த்தி உருவமாகவும் பிரிக்க முடியாத பெற்றியில் பெறப்படுவதால், கண்ணுடியில் நிழல்போல அஃது அருவுருவமாகக் குறியினைக் கொள்ளுகிறது. அருவுருவமான குறியே சிவலிங்கம் எனப்பட்டது. அதுவே சதாசிவலிங்கம் என்றுயிற்று. இச்சதாசிவலிங்கமே விண்ணெளிக்கருவின் ஏறுநிலையின் அந்தமாயும், அதன் இறங்கு நிலையின் ஆதியாயும் விஞ்ஞானத்தில் விளக்கமாகியது. அவ்வெளியின் அந்தாதிநிலை பரநிலைவெளியின் மையத்தின் நடுநிலையாக அமையும். அதன் ஆதியந்தநிலை காரியப்பக்கமாய் அருவம் – அருவுருவம் – உருவம் என்றிடும் அதன் வெளித்திறங்களை அமைத்துக் காட்டும். காரியப்பக்கத்து இறங்கு விண்மீன் கோளங்களில் இன்னநிற விண்மீன் இன்ன இறைவடிவமாக அமையும் என்ற தேர்வுக்கு;

> "நாலான கீழது உருவம் நடுநிற்க
> மேலான நான்கு மருவு மிகநாப்பண்
> நாலான ஒன்று மருவுரு நண்ணலாற்
> பாலா மிவையாம் பரசிவன் தானே"

திருமந்திரம்: 1734

உருவம்நாலு; கீழ்ப்படிஎன்ப. அருவம் நாலும் மேற்படி என்ப. நடுப்படி; அருவுருவம் ஒன்று என்ப. இவையனைத்தும் பரமசிவன் அருளிற் கொள்ளும் நினைப்பு ( இச்சை ) உருவமாம் என்றிடும் அந்தத் திருமந்திரப்பொருளே சான்றாகும்.

" அந்தமும் ஆதியு மாகிப் பராபரன்
வந்த வியாபி யெனலாய வந்நெறி
கந்தம தாகிய காரண காரியந்
தந்தைங் கருமமுந் தான்செய்யும் வீயமே "

திருமந்: 1890

என்ற திருமந்திரமானது பரவெளி காரணம் காரியமாகப் பகுக்கப்பட்டு தத்துவத் தோற்றம் கொள்வதற்குரிய நீர்மையினைக் காட்டுகிறது. காரண காரியமுதல்வினைவுகளுக்கு எண்ணத்துணையாய் நிற்கும் முழுமுதற்சிவன் பராபரன் எனப்படுவன். அந்தம் — சிவப்புக்குள்ள விண்மீன். ஆதி — பெரிய இராட்சத சிவப்பு விண்மீன். இங்கு கண்டதைக் (காரியத்தை) கொண்டு காணுததை (காரணத்தை)க் கருதிக்கொள்வபோலப் பெரிய இராட்சத சிவப்பு விண்மீனே — நட்சத்திரக்கருவே பராபரம் எனத்துணிவதற்கு " அந்தமும் ஆதியுமாகிப் பராபரன் " எனப்பட்டது. அந்தப்பெரிய இராட்சதவிண்மீனே ஏறுநிலை, இறங்குநிலை விண்மீன் கோளங்கள் அனைத்துமாகியது என்ற விஞ்ஞானச் செய்தியால், பராபரமே எங்கும் நீங்கமற நிறைந்து நிற்கும் வியாபியாவன் என்பது பெற்றாம். அவனே காரணத்திலும் காரியத்திலும் வாசனை பரவியபோல முதல்வராய்த் திருத்தொழில் ஐந்தினையும் இடையறாது புரிவன்.

மேலான கடவுட்பொருள் முழுநிறை இருக்கையாக விளங்கும் வெளிப்பரப்பு, அப்பொருளால் பரவெளியாக விளங்கும். அப்பரவெளி மேலான கடவுட்பொருளின் விரிசக்தியால் காரணமுறையையும் காரியமுறையையும் பெறும். அக்காரணமுறையான பரவெளியும், அக்கடவுளின் விரிசத்திப் பொருள் நிலையாகப் பராபரவெளி, பரவெளி, பரநிலைவெளி யென்று கூறுபடும். அங்ஙனமே காரியமுறையான பரவெளியும்; பரநிலைவெளி, காரண நிலைவெளி, காரியநிலைவெளி என்ற வகையிற் கூறுபடும். காரணமுறையானபரவெளி வான் என்றும், காரியமுறையான பரவெளி வானம் என்றும் தேறலாம். வான் என்ற காரணமுறையான நுண்பரவெளிக்கண் பராபர வெளிப்பகுதி: பராபரம், பராபரை என்ற பொருள்களாலும்; பரம் என்ற வெளிப்பகுதி: பரவிந்து பரநாதம் என்ற பொருள்களாலும்; பரநிலை வெளிப்பகுதி சுத்தப் பொருளான பரசிவம் என்ற பொருளாலும் அமையப் பெறும். இங்ஙனமே; காரியமுறையான பரவெளியிற் பரநிலைப் பகுதி

யாம் அருவ வெளியிற் பரசிவமானது பரரசத்தி, ஆதிசத்தி, திரோதன சத்தியாக அமையும். அருவுருவவெளியாம் காரியத்திற் காரணநிலையான வெளியில் நாதம் என்ற சிவமும், விந்து என்ற சத்தியும் பொருள்களாக அமையும். இவ்வாறே உருவ வெளியாம் காரியத்திற் காரியநிலையான வெளிப்பகுதியும் காரியசதாசிவம், மகேஸ்வரன், சுத்தவித்தை என்ற பொருள்களால் புலப்படும். இந்தச் சித்தொளிப் பொருட்கும், அசத் தொளிப் பொருளான விண்ணொளிப் பொருட்கும் ஒருபுடையான ஒப்புமை உண்டு. அவ்வொருமைப் பாட்டினை ஆய்வாம்.

## பரவெளிநிலை : காரணமுறைப்பக்கம்
## பராபரவெளி - பரவெளி - பரநிலைவெளி

*

## பராபரவெளி : பராபரப்பொருள்

விண்மீன் பிறப்பிடம் ஒளிப் புகைபோல வெளிப்பரப்புக்குப் பிறப்பு இடம், பாரபரத்தின் விரிசத்தியாகிய புறச்சத்தி என்க. இங்கு பராபரத் தின் புறச்சத்தி என்றது. திருவருளாகிய பராபரையின் ஆற்றல் என்க. அந்தத் திருவருளாற்றலாம் புறச்சத்தியின் தன்மையிடமே பராபரவெளி எனப்படும். அத்தன்மையிடச் சத்தியே விஞ்ஞானிகள் கூறும் துகளா வியாம். வெளிப்பரப்பைப் பற்றிடமாகக் கொண்டு துகளாவி ஒண்புகை யாகச் சிறந்தது போலப் பராபரத்தின் தன்மைச் சத்தியும் திருவரு ளும் அத்தன்மையிடத்தையே தொழிலுறும் மையமாகக்கொண்டு பரம் பொருள் என்று சிறக்கும்; அப்போது வெளிப்பரப்பு பராபர வெளியாகப் பொருள்கொள்ளும். பராபரத்தின் புறச்சத்தியில் தன்மையிடச் சத்தியாய் ஆதிசத்தி எழுவதற்கு ஏது என்ன என்று கேட்பின், அதற்கு விடை இயல்பு என்பதே. அதாவது காரணம் காணமுடியாத இயற்கையியலுகை என்பதாம். எனவே பராபரத்தின் திருவருளாம் புறச்சத்தியும் அதன் தன்மையிடச் சத்தியாம் திருவருளாற்றலும் தாதான்மியமாம் பிரிவற்ற நிலைப்பொருள்கள் என்பது தாமே பெற்றும். பிரிவற்ற நிலையில் உள்ள அப்பரம்பொருள் தன்னுடைய தன்மைச் சத்தியால் தன்னையாம் அகத்தை விளக்கும். தன்செயற்சத்திகளால் புறத்தையும் விளக்கும். அப்பொருள் அகத்தை விளக்கும் நிலையிற் பராபரம் எனப்படும். புறத்தை விளக் கும் நிலையில் பராபரை எனப்படும். ஆதலால் பராபரைவேறு பராபரம் வேறு அன்று, பராபரம் - தன்மை நிலை. பராபரை - தன்மைப் பொருள் நிலை.

பராபரத்தின் தன்மைப் பொருள் நிலையையே நாம் பரம்பொருள் என்றோம். இப் பரம்பொருளை மேலை விஞ்ஞானிகள் கூறும் சடவொளிப் பொருள் விரிவில் பொன்நிற விண்மீன் கோளத்திற்கு ஒப்பிடலாம். இக் கோளம், விண்மீன்கரு குளிர்ந்த நிலையில் இருந்து உருவாகிய வளர் கோளமாதலின் இதற்கு ஒப்பான சித்தொளிப் பரம்பொருளும் தன்மை இயலானது என்பதில் துணிபு அமைந்தது. இதனாலேயே தத்துவநெறியர் பராபரையைப் பராபரத்தின் கருணை என்றனர். பராபரம் தன்னிடத்தின் நுண்மைப் பொருளான பராபரையை வெளிப்படுத்திப் பரம்பொருளென்று அதனைப் பரவெளியில் நிலைப்படுத்தும்போது அவன் செம்பவளப் பொன்னூர் மேனியனாக ஆங்கு மிளிர்கின்றான். நுண்பொருளாம் பராபரையைப் புறநிலைப் படுத்துங்கால் அவன் தனது தன்மையை உள்முகப்படுத்துங்கால் செவ்வண்ணம் செறிந்த பொன்மேனியனாதலின், சிவப்பு இராட்சத விண்மீன், கிச்சிலிவிண்மீன் கோளங்களுக்கு நிகராக நாம் நினைத்தோம். எனவே பராபரம் அருட்சி நிலையில் செவ்வண்ணமும், அருட்சிப்பொருள் நிலையில் பொன்வண்ணமும் உடையது என்பதாம். இங்கே பராபரத்தின் அருட்சிவண்ணம் ஆதாரமாகவும் அருட்சிப்பொருள் (அருள்) நிலை ஆதேயமாகவும் தேர்க. இவ்வாறு பராபரவெளி காரணப் பரவெளியாகப் பரிணமிக்க ஏதுவாயிற்று.

## பரவெளி: பராபரைப்பொருள்.

முழுநிறை இருக்கையான பராபரம் அவ்விருக்கையாம் பராபரவெளியில் பரம்பொருள் ஆக்கமாவதற்குக் காரணம் என்ன என்பதற்குக் காரணம் காட்டலாகா இயல்பு நெறி என்பதாம். அந்த இயல்புநெறி பரிணமித்தல் முறையில் ஏறுநிலையான செறிதல் நிலையிற் சிறக்கும்போது காரியத்திற்குரிய காரணம் கால்கொள்கிறது. இக்காரணம் தோன்றித் தத்துவமாகும் இடத்தின் வெளியை நாம் பரவெளி என்றோம். பரவெளி பராபரவெளியைக் கீழ் நிலைப்படுத்தி மேல்நிலை கொள்வதால் 'பரா' வென்ற பதத்தை அஃதுஇழந்து "பரம்" என்ற இடவெளிப் பெயரைப் பெற்றது. எனவே பராபரத்திக்குப் பரவெளி முன்னிலை வெளியாக அமைகிறது. அம் முன்னிலை வெளியைத் தெளிவாகக் கூறின், பரம்பொருளின் வல்லமைப் பாட்டுக்குரிய வெளியாகுமென்க. இதனை ஈண்டு விரிப்பாம்.

பராபரையின் வல்லமை தனக்குரிய பராபரவெளியில் இருந்து வாவுவதால் பரவெளியிற் குறி கொள்கிறது. இக்குறி "பிந்து" என்று சொல்லப்பட்டது. அப் பிந்து என்ற குறி பரவெளியில் நிலைகொள்ளவே அது "பரவிந்து" என்று நிலைப்பெயர் பெற்றது. இதுபோது பராபரையின் பரவெளிக்குறி அவ்வெளியின் நிலைக்குறியாகவே, அது பராபரையின் தனித்தத்துவமான பரவெளிப் பொருளாயிற்று. இந்த உண்மையைப் பிந்து என்ற சொல்லே எடுத்துரைக்கும். பிந்த் + உ = பிந்து,

பிந்த் – கூறுபடுதல். அதாவது 'துளி' என்பதாம். பராபரையின் வல்லமைப் பொருள் துளி மாத்திரையாய்க் கூறுபட்டுப் பரவெளியின் பொருளாகியதே "பரபிந்து" என்பதாம். இதனை மேலையர் கூறும் அணுத்துளியாக நேரலாம். பரம்பொருள் தொழிலுக்குரிய விளக்கத்தைப் பெறவேண்டி உன்னும் போது புலப்பட்ட பொருளே பரவிந்தாம். எனவே பரவிந்து பரம் பொருளின் காரிய நிகழ்வுக்கு உரிய இன்றியமையாத கண்ணியப் பொருளாய்த் திகழ்தலின் காரணப் பொருளாயிற்று. இதனால் பரபிந்து பற்றி நின்ற இடத்தின்வெளி பரவெளி என்பதுடன் காரணப் பரவெளி என்ற மறுபெயரும் பெறலாயிற்று. அந்தப் பரபிந்து விண்மீன் ஒளி வளர்வில் மஞ்சள் விண்மீனுக்கு அமையும். மிகு மஞ்சளாய் (பொன்) மிளிர்ந்த பராபரையொளியின் துளியாகப் பொருந்தியது பரபிந்து எனப் பட்டதால் அஃது இயல்பான மஞ்சளாய் அமைதல் நேரியதே.

பராபரையாம் பரம்பொருளின் பரத்தற்பொருண்மை கூறுபட்டுத் துளியாய்ப் பரவெளியிற் பற்றுதல் அப்பொருளின் தொழிலாற்றலால் என்க. அவ்வாற்றல் காரணவியல்பினதெனவே பண்புப்பொருளாகியதனெலாம். பராபரையின் துளிப்பொருள் பரவிந்தாதலின் அப்பொருளின் பண்பு பரவிந்தில் உடைமையாகவே அதுபண்புப் பொருளாயிற்று. பராபரையின் பண்புடைமைப் பொருளாய்ப் பரபிந்து விளங்கலின் பரவிந்தின் செயலெல்லாம் பராபரையின் செயலாற்றலின் விளைவு என்பது பெற்றும். பரம்பொருளின் பரத்தல் ஆற்றலான பரவெளியிற் சுழன்ற குறியானது பரவெளியிற் கால்விட்டு நிலைக்கவே அதனைப் பரம்பொருள் தன்செயல் நினைவால் மேலும் அசைக்கவே அது பரிணமித்துப் பரவெளியில் மேலும் ஒரு காரணப்பொருளாகப் "பரநாதம்" என்ற பெயரைப்பெற நின்றது. நாத் - அசைதல் என்ற கருத்தாம். பரவிந்தின் அசைதலில் பரிணமித்த பொருளே பரநாதம். எனவே பரம்பொருள் பரசிவத்தைத் தோற்றுவிக்கப் பரவிந்து மூலகாரணமாகவும், பரநாதம் மூலப் பகுதியாகவும் அமைவனவாகும். பரவிந்து தோன்றிய பின்பு அதன் தொழிற்பகுதியாற் சமைந்த பொருள் பரநாதமாதலின் மூலகாரணத்தின் பகுதி எனல் பொருந்தும். இதற்கு விண்மீன் ஏறுநிலையில் நீலவிண்மீன் நிகராகும். பராபரையான பரம்பொருள் தன்மை நிலையில் பொன்வண்ணமாகவும். முன்னிலையில் நீலவண்ணமாகவும் அமையும் என்ற தத்துவத்தார் கொள்கைக்குப் பரநாதம் நீலவிண்மீனாக அமைதல் அமைவுடைத்து. பரம்பொருளின் அருவவடிவின் மூலநிலை எம்முறையாக அரும்பிச் சிறந்தது என்பதைப் பரவெளிப் பொருள்கள் நமக்கு ஓரளவு உணர்த்துகின்றன.

## பரநிலைவெளி : பரசிவப்பொருள்

பரநிலைவெளியானது பராபரவெளி பரவெளி என்பனவற்றைக் கீழ் முகப்படுத்தி மேல்முகப்பட்ட வெளியாம். எனவே பராபரவெளியில் விளங்கும் பரம்பொருட்குப் பரநிலைவெளி படர்க்கையாகும். தன்மை

யான பரம்பொருள் பரவிந்து பரநாதம் என்ற இருநிலையாக முன்னிலைப்பட்டுப் பரசிவமாகப் படர்க்கையுறுகிறது என்று நாம் தெளிதல் வேண்டும். பரவிந்து பரநாதம் என்ற காரணப் பொருளைக் காரியப் பொருளாக மாற்றுவதற்குப் பரம்பொருள் அவைகளைக் கடந்து நின்று கிரியா முகமாகும்போது பரவெளி பரநிலை வெளியாகப் பரிணமிக்கிறது. அந்நிலையிற் பரம்பொருள் பரசிவப்பொருளாகப் பதம் பெறுகிறது. பரம்பொருள் பண்பெனவே பரவிந்தும் பரநாதமும் அப்பண்பிற்படும் – தோன்றும் பொருள்களாகும். பரம்பொருட் பண்பில் தோன்றிய அப்பொருள்கள் மேலும் பாடுறும்போது பரசிவம் அதன் பண்பாட்டுப் பொருளாக அமைகிறது. இந்தப் பண்பாட்டுப் பொருளையே தத்துவ அறிஞர் "சாதாக்கியம்" என்றனர். சாதாக்கியம் என்றது கண்ணுடியுள் நிழல்போல அருவத்தில் உருவம் உளவாதல் என்க. வெறுவெளியான பராபரவெளியிற் பரம்பொருள் அருவமாகாத அரும்பொருளாய் இருந்தது. அப்பொருள் செயல் முகப்படும்போது, பண்புருவாகக் காரணம் முறைநிலையாய் அருவம் அமைகிறது. அதுவே பின்னர் அப்பரவெளியின் உச்சிநிலையாம் அந்தத்தை அடைகிறது. அவ்வாறு அஃது அடையுங்கால் தன் அருவத்தின் உண்மை இயலை வெளிப்படுத்துகிறது என்க. பரம்பொருளிற் செறிந்து இருந்த செவ்வண்ணவுரு அதில் மிக நுண்மையாகப் புலப்படுதலே அவ்வெளிப்பாடாகும். இதனுல் அதனைப் பரசிவப்பொருள் என்றேம். பரம்பொருளும் பரசிவப்பொருளும் ஆதாரவாதேயமாகப் பிரிவற்ற நிலைப் பொருளே பரநிலை வெளிப்பொருளாம். இப்பொருள் நிலேத்த உச்சிவெளியும் பரநிலைவெளி என்ற பெயரைப் பெற்றது. பரம்பொருள் பரசிவப் பொருளாதற்குப் பரபிந்து காரணமாகவும், பரநாதம் அக்காரணத்துக்குள் நிகழ்ந்த காரியமாகவும் நாம் தெளிதல் வேண்டும். இந்தக் காரண காரியப்பாட்டாலே அருவத்தில் உருவம் உளப்படுதலாயிற்று. இவ்வகையிற் பரம்பொருள் காரணத்திலும் பரசிவம் காரியத்திலும் அமைவுறுவர். இங்கு காரியப் பொருளாம் சிவம் நுண்பொருளாதலின் அது சிறக்காது காரணமாகிய பரம்பொருளே சிறந்து நிலைத்து நின்றது. அந்நிலைப் பரம்பொருளை ஞானிகள் காரண சதாசிவம் என்றனர். காரணமாய் நுண்மைப்பட்டு என்றும் நிலையாய் நின்ற சிவப்பொருளே காரியப் பரவெளியில் பருப்பட்டுக் காரியப்பொருள்களைத் தத்துவப்படுத்தலின் அப்பெயர் பெற்றதெனலுமாம். பராபரையின் ஒண் துளியாகிய பரவிந்துவின் ஆக்கப் பாட்டினுல் உருவான செம்மைப் பொருளாதலின் பரசிவம் "சுத்தசிவம்" எனப்பட்டது. அருவத்தில் உருவம் அழியாது நிலைத்து நின்றதால் சதாசிவம் என்று அறையப்பட்டது.

பரசிவத்தின் செய்தியை நாம் முன்னர் விளக்கிய உகர வரிவடிவக் கூறுகளில் இயையக் கூறலாம். உகரவரிவடிவக் கூறுகளில் புள்ளியின் சிறுசுழி வடிவம் பரவிந்து என்க. அதன் நேர்கோடு பரநாதம் என்க. இவை இரண்டும் தனித்தனிப் பகுதியாய் அமையும் போது உகரஎழுத்து அருவமாய் அமைகிறது. உகரத்தின் அருவமான சிறுசுழியையும் நேர்

கோட்டையும் உகர எழுத்தாம் உருவை ஆக்கவேண்டின் அச்சிறு சுழியிலிருந்து வில்லைப்போன்ற உட்கவிந்த வளைகோடு நேர்கோட்டில் வந்து பொருந்த வேண்டும். எனவே சிறுசுழி பரவிந்து. நேர்கோடு பரநாதம். ஆகவே உட்கவிந்த வளைகோடு உருவமான பரசிவம் என்பது தாமே புலப்படும். ஞானிகள் தம்தியானத்திற்கு அமைத்த சிவலிங்கமும் உட்கவிந்த வளைகோடு போலிருத்தலும் ஈண்டு ஓர்க. பரம்பொருள் பரவெளியைக் கடந்து அதன் உச்சியில் உதிக்கும்போது கீழ்மேலாக அமைந்து நின்ற பரபிந்து பரநாதம் என்பவைகளைப் பக்கமுற நேராக நிறுத்தி அவ்வெளியிற் பொருளாகும். ஆக்கப்பட்ட அப்பொருள் அருவப் பொருளால் ஆகியதாதலின் அஃதும் அருவமே. அவ்அருவப் பொருளில் உள்வளைந்த கோடுபோல ஒரு கீருகப் பரசிவம் அவ்விடத்தின் பொருளாய் உருப்படும் எனத்தெளிக. நாதபிந்துகளைப் பக்கமாய் நேருற நிறுத்தும் பரம்பொருளின் செம்மைச் செய்கையே ஞானிகள் "சிவ" என்ற சொல்லால் செப்பினர். இவ்வாறு அதனை நோக்கும் போது சிகரம் பரபிந்தாயும், வகரம் பரநாதமாயும் கருதிவிடலாம். இந்த இரண்டு எழுத்தொலிகள் அசைந்து நிரையசை என்ற ஓரசையாக நமது யாப்பு இலக்கணத்தில் எண்ணுவ போலவே பரசிவத்தின் பொருள் நிலையையும் நேர்தல் வேண்டும். பரசிவத்தைச் சுட்டிய உட்கவிந்த வளைகோடு விஞ்ஞான முறைச் செய்தியில் எவ்வாறு அமைகிற தெனில்; "பந்து வடிவமான உருண்டை வாயுட் கோளம் (பரபிந்து) பம்பரம் போன்று சுழற்சி வேகத்தால் அவ்வட்ட வடிவில் மேல் - கீழ்பக்கங்கள் சிறுதட்டையாய்த் தோடம் பழம் (பரநாதம்) போல மாற்றம் அடைந்தது" என்ற கருத்துரையோடு கொள்ளலாம். மேலும், பரசிவத்தை விண்மீன் ஒளிவளர்வில் நீலவெள்ளை விண்மீனே நேருறுகிறது. நீலவிண்மீனின் பரிணமிப்பே நீலவெண் கோளம், நீலவெண் கோளத்தில் உள்ளவெள்மை நீலவண்ணக் கோளத்தின் உள்ளார்ந்த பொருளை வெளிப்படுத்திய பொருளாக அமைகிறது. எனவே நீலம் அருவமாகவும், வெண்மை உருவமாகவும் அமையும். எனினும் நீலமும் வெண்மையும் பரவெளி உச்சியின் ஒளிக்கோளத்தில் மயங்கி ஒளிவிடுதலில் அக்கோளம் அருவுருமாயிற்று. இவ்வாறு தத்துவமும் விஞ்ஞானமும் பெரும்பாலும் இணைந்து இயலுவது நமக்குப் பெருவிருந்தன்றோ. விஞ்ஞான ஒளிப்பொருள் வளர்விலும், ஞானவொளிப் பொருள் வளர்விலும் அந்த நீலவெள்ளை விண்மீன் கோளமே காரணப் பரவெளிக்கு அந்தமாக அமைகிறது. இதனோடன்றிக் காரியப் பரவெளிக்கு அதுவே ஆதியுமாகவும் அமைகிறது. விண்ணொளி விருத்தியில் நீலவெண்கோளமே ஏறுநிலை என்ற பரநிலைக்கும், இறங்குநிலை என்ற அபரநிலைக்கும் மையக் கோளமாக அமைகிறது.

நீலவெண் விண்மீன் சுத்தசிவம் என்னும் சதாசிவமாகும். இச்சதாசிவம் காரியப் பக்கத்துக் காரணநிலை, காரியநிலை என்றவைகளில் விளங்கும் சிவன்களைக் கடந்த தனிமுழு முதலாகும். இதனையே நம் தத்துவச் சான்றோர் இலிங்கம் என்பதற்கு உரிய பொருளாய்த் துணிந்து சதாசிவலிங்கம்

என்றனர். மற்றவைகள் இலிங்கமாகாது மூர்த்திகளாகும். நீலவெண் கோளத்தின் வெள்ளொளியே சதாசிவலிங்கமாகத் தியானித்தார்கள் ஞானிகள். இதனையே திருவள்ளுவர் "வாலறிவன்" என்றார். திருமூலர், "நாடுஞ் சதாசிவம் நல்லொளி முத்தே" (திருமந் : 1700) என்பர். நீலவெண் விண்மீன் கோளத்தின் நீல நிறவொளி காரணப் பக்கத்தையும், வெண்நிற வொளி காரியப் பக்கத்தையும் சுட்டும். இதற்குச்சான்று, "உலகாணி யொண்சுடர்" (திருமந் : 2042) என்று திருமூலர் அருளியதேயாகும். இன்னும்; காரணப் பக்கத்தில் கண்ட பரநாதாந்தத்து நீலவெண் விண்மீன் கோளம் தன்விருத்தியில் விளங்கிய திறத்தை ஆன்றோர் "அண்டம் ஆரிருள் ஊடு கடந்தும்பர், உண்டுமோர் ஒண்சுடர் "என்று கூறியவாற்றால் தேறலாம். இதில் "அண்டம்" என்பதால் பரவெளியின் காரியப்பக்கம் பெற்றாம். "ஆரிருள் ஊடு கடத்து உம்பர்" என்றது, பரவெளியின் காரணப்பக்க நெறியில் உச்சிவெளியின் மேல்நிலை சுட்டியது. அந்த உச்சி வெளிக்கு மேல் ஒப்பற்ற ஒண்சுடர் (சொரூபசிவம்) உண்டு என்பதை, "உண்டுமோர் ஒண்சுடர்" என்பது காட்டும், இந்த (சொரூபசிவமாம்) ஒண்சுடரின் ஒள்ளொளி, காரணப்பக்கத்தின் ஏறுநிலையின் அந்தத்தில் நின்ற நீலவிண் கோளத்தில் பட்டொளிர்வதாலேயே அது நீலவெண் விண்மீன் கோளமாயிற்று என்று ஞானியர் தரும் விளக்கம் நமக்கு விருந்தன்றோ. இந்தத் தெளிநிலையாலேயே ஞானியர் தம் தியானத்தில் நீலவெண் கோளத்தைச் சதாசிவலிங்கமாக நேர்ந்து கொண்டனர். பரநாதாந்தத்தின் உச்சி மேல் உளப்பட்ட ஒண்சுடரினொளி, பரநாதப் பொருளில் பட்டுப் பெரும் பொருளாய்ப் பரவெளியில் நிலைத்ததால் காரணமுறையான அப்பரவெளி பரநிலைவெளி எனப்பட்டது. நிலையற்ற பரவெளி இதுபோது நிலையுற்ற — குறியுற்ற பரவெளியாகப் பதம் பெற்றது எனத் தெளிக. பாழான பரவெளி அருவம் என்ற பொருள்வெளியாகப் பொருந்திற்றென்க. பராபரம் என்ற பெரிய இராட்சத சிவப்பு விண்ணொளி விருத்தியுற்று நிலைக்கும்போது (பொருள்வெளியாகும்போது) அந்த நிலைப்பும் ஒரு வடிவம் என்று நம் முன்னோர் தேர்ந்தது அவர்களின் பொருளாய்வின் நுட்பத்தைக் காட்டுவதாகும். ஞானிகளின் தியான உணர்வுக்கும் அந்த நிலைவடிவம் முறையாக முகிழ்த்தல் உறுததால் அவர்கள் அதன் வெளியை அருவவெளி என்றனர். இதனை இன்னும், "ஆதாரத்தாலே நிராதாரத்தே சென்று, மீதானத்தே செல்க உந்தீபற — விமலற்கிடமதென்று உந்தீபற." என்ற சான்றோர் உரையால் நாம் தேறலாம். இவ்வுரையையும் நாம் சிறிது விளங்கினால் பரசிவத்தையும் அண்டலிங்கத்தையும் தெளிவுறலாம்.


"ஆதாரத்தாலே" என்றது, காரணவெளியாம் பரவெளிக்குத் தொடர்பற்றுத் தனித்த மூலவெளியைச் சுட்டும். இதனையே பராபரவெளி என்கிறோம். "ஆதாரத்தாலே நிராதாரத்திற்குச் சென்று" என்றதில் "சென்று" என்றதால் ஒளியின் ஏறுநிலை பெற்றாம். "நிராதாரம்" என்றதால் வேறு வேறு மூலமில்லாது தானே மூலமாக அமைந்துறுதலைக் குறிக்கும். எனவே காரியப்பக்க வெளிக்குரிய, காரணப்பச்கமாம் பராபரவெளியின் அந்தத்தை


நீத்து ஆதியாகிறது என்பதாம். இதனால் பராபரவெளியின் அந்தத்திற்கும் பரவெளியின் ஆதிக்கும் இடையில் ஒரு பாழ்வெளி இலங்குகின்றது என்க. அதாவது: காரியபக்க வெளியினுக்கு உரிய காரணவெளியை நாம் பர வெளி என்கிறோம். இப்பரவெளி நிராதாரவெளியாகும். இதற்கும், காரண மூலம் என்ற பராபரவெளிக்கும் காரணமாகும் முறை வகையிற் தொடர்பு இல்லாமையாலேயே அவ்வாறு கூறுப்பட்டது. இதனால் காரணவெளியாம் பரவெளித்தோற்றம் இயல்பானது என்பது பெற்றும். ஆனால் நிராதாரத் தைச் சொல்லும்போது ஆதாரத்தாலே என்று அடைகொடுப்பானேன்? என்று வினவின்; இதற்கு விடை காணல் வேண்டும். இதனைக் கலைமுறை யில் இயைத்து விளக்கவிடை காண்போம்.

விண்மீன் கருவான பெரிய இராட்சத விண்மீன் (பராபரம்) என்ற மேலான பொருள் தன்னுற்றலை (திருவருளை) வெளியில் வெளிப்படுத்திப் பொன்நிற விண்மீன் (பாராபரை) என்ற சத்திப்பொருளை ஆக்கிறது. இந்தவல்லமைப் பொருளாம் பொன்நிற விண்மீன் (பாராபரை) தன்னி டத்து ஆற்றலை (திருவருளாற்றலை) அவ்வெளிக்கண் செலுத்தி மஞ்சள்- நீலம் என்ற நிறவிண்மீன்களை (பரபிந்து - பரநாதம்) உருப்படுத்தியது. மஞ்சள் (பரபிந்து) நீலம் (பரநாதம்) என்ற விண்மீன் கோளங்கள் காரணகோளமாகக் கணிக்கப்படுதல் அவைகள் பொன்நிற விண்கோளத்தை (பாராபரை) ஆதார சத்தியாகக்கொண்டு விளக்கமுற ஒளிர்வு கொள்ளல் என்க. எனவே மஞ்சள் (பரவிந்து) நீல (பரநாதம்) நிறக்கோளம் இராட்சதசிவப்புக்கோளமாம்பராபரத்தால் அமையவில்லை என்பது பெற்றும். இதனையே நிராதாரம் என்றும் இயம்பப்பட்ட தென்க! நீலவெண்மீன் கோளம் நிலைத்த பரநிலை வெளிக்குப் பராபரவெளி சொரூபம் என்றும், பரவெளி தடத்தத்தின் நுண்வெளி என்றும் நாம் தேரலாம். இதனால் பரநிலை வெளியைத் தடத்தவெளி என்றல் மிகையாகாது. இன்னும், நீலவெண் விண்மீன் கோளத்தில் பெரிய இராட்சத சிவப்பு விண்ணொளி மிகமிக நுண் மையாகவும், நீலநிற விண்ணொளி மிகநுண்மையாகவும், தூவெண்ணொளி நுண்மையாகவும் அமைந்திருக்கும் என்று தேர்க. மிகமிக நுண்மையான செவ்வொளியைச் சுத்தசிவமாயும், மிகநுண்மையான நீலவொளியை அதன் திருவருளாயும், நுண்மையான வெண்ணொளியை அதன் ஆற்றலாயும் எண் ணிடலாம். இவ்வாறு பரசிவத்தின் செய்தியை இன்னும் பலவாறு சிந்திக் கலாம்.

சாதாக்கியமே தத்துவத்தை உருவாக்கி இயக்குவது, பரநிலை வெளியில் மிகநுண்மைப் பொருளாகப் பரசிவம் மிளிருதல் நாதம் பிந்து என்றவை களின் சமநிலையில் என்க. இந்தச் சமநிலை எவ்வாறு உருவாகியது என் பதை நாம் அறிதல் வேண்டும். இந்த அறிதல்முறை தெளிவாக விளங்க வேண்டுமானால் தத்துவமும் (அருவமும்) மூர்த்தியும் (உருவமும்) எவ்வாறு தோற்றம் பெற்று விளங்கியது என்ற செய்தியை முதற்கண் உணர்தல் வேண்டும்.

# பரவெளித்தத்துவம்


காரணநிலை வெளி
பரநிலை வெளி
காரணப்பக்கம்
காரியநிலை வெளி
பரநிலை வெளி
அருவவெளி - காரியப்பக்கம்
சொரூபம்
உன்மனகலை
சக்தி சிருட்டி
சமனகலை
அநாதர்
காரணவியாபகர்
அனந்தர்
வியாபினி
வியோமரூபர்
சக்தி
உ சி வெளி
சுத்தசிவம்
நீல வெள்ளை
விண்மீன்
இச்சை
மூர்த்திசாதாக்கியம்
ஞானம்
கர்த்திரு சாதாக்கியம்
ஈச்சுரன்
கிரியை
கரும சாதாக்கியம்
ஈசானன்
பராசத்தி
பராபரம்
ஆதிசக்தி
பரம்
பரை
அமூர்த்திசாதாக்கியம்
ஈசன்
திரோதான சத்தி
திரோபவன்
அருட்சத்தி
சிவ சாதாக்கியம்
சதாசிவம்
சிவ சிருட்டி
தடத்தம்
பஞ்ச சாதாக்கிய தத்துவம்
பரநிலைவெளி
காரணத்தில் காரியம்
சுத்தவெளி காரணநிலைவெளி-வான்
அசுத்த வெளி
பரவாகீஸ்வரி
பரநாதம்
நீல விண்மீன்
நாதம்
ஞானம்
சிவம்
இலயசிவம்
ஈசானம்
தற்புருடம்
அகோரம்
வாமதேவம்
சத்தியோசாதம்
பஞ்சப்பிரமாவம்
தத்துவம்
மூர்த்தி
அருவுருவம்
காரண சதாசிவம்
ஒலிவடிவம்
சொற்பிரபஞ்சம்
சுத்த மாயையில் பஞ்ச கிருத்தியம்
அசுத்த மாயையில்
சங்கியாதீதக்கலை
காரியத்தில் காரணம்
அருவுருவ வெளி
பரவாகீஸ்வரி
பரபிந்து
மஞ்சள் விண்மீன்
விந்து சக்தி
கிரியை
சுத்த மாயை காரியம்
சுத்த வித்தியா தத்துவம்
காதமூர்த்தி
விந்துமூர்த்தி
விந்து சத்தி
உமா சத்தி
அம்பிகை
கணேசை
ஈஸ்வரி
பஞ்ச சாதாக்கிய சத்திகள்
அருவுருவ வெளி
கலை - காலம் - நியதி
வித்தை
அராகம்
காரணப்பகுதி
பரவெளி
பரயோனி




ஆக்கம் -
*புலவர் நா. சிவபாதசுந்தரனார்*
தொல்புரம், சுளிபுரம், இலங்கை.
1980

மகேன்

## பரவெளிநிலை: காரியமுறைப்பக்கம்.

### பரநிலை - காரணநிலை - காரியநிலை.

★

### பரநிலைவெளி: பரசிவம்

### இறை நிலை :

மேலான முழுநிறைப் பொருளான பராபரம் தனது இருக்கையாக விளங்கிய பரப்பினைத் தனது இருத்தல் நினைவால் வெளிப்பரப் பாக்கியது. அவ்வெளிப்பரப்பே, " பராபரவெளி " என்று கணிக்கலாயிற்று. அவ்வாறு கணிப்பதற்குக் காரணம்: பராபரம் என்று குறித்திடும் பெரிய இராட்சத விண்மீன் ஒளிக்கரு வெளிப்பரப்பில் பொருளாய்ப் பொலிந்தமையாம். பொருளாய்ப் பொலிதலாவது: ஒளிக்கரு என்ற பராபரம் அவ்வெளிப்பரப்பில் பராபரை என்ற பெரும்பொருளாய்ச் சிறத்தல் என்க. வெளிப்பரப்பைத் தனது இருக்கைப் பொருளாக இலங்கவைத்த பராபரம், தனது முன்னேக்கால் அப்பரப்பைக் காரணமுறை நிலைக்குப் "பரவெளிப்" பரப்பு என்றிட வைத்தது. பராபரத்தின் இயல்பான முன்னேக்கு, பரவெளியிற் பரந்து நிறைந்து எல்லையுறவே அதன்கண் குறியரும்பலாயிற்று. குறியரும்பிய எல்லையிடமே பரவெளியின் மையம். காரணம் முறையுற்றுச் சிறந்த பரவெளியின் உச்சியிடமும் அதுவேயாம். அந்த உச்சி மையத்தின் நடுவுநிலையில் பராபரத்தின் முன்னேக்கியல்பு மிகுந்திடவே, அப்பார்வை குறிப்பொருளாய் "பார்வதி" என்றிடும் வகையில் அதிற் பதிதல் பெற்றது. அப்போது பரவெளி "பரநிலைவெளி" என்ற சிறப்புப் பொருளாயிற்று. பராபரத்தின் அருட்பண்பாம் பராபரையும் பார்வதி என்ற பண்புப் பொருட் பெயரையும் பெற்றது. பராபரையை மெய்யாகக் கொண்ட பராபரத்தின் பார்வை பரவெளியில் வதிதலால் ஏற்பட்ட நிலையே "இறைநிலை" என்க. பராபரத்தின் மைக்கண் (அறிவு) ஒளியாற் காட்சிப்பட்ட வண்ணவொளியே விண்மீன் ஒளியின் நீலவெண்நிற வொளியாம். நீலவெண்நிறவொளியாகப் பரநிலைவெளி விளங்குதல், பராபரையுருவான பராபரத்தின் சிறப்பாற்றலின் விளக்கமாம். அஃதாவது : திருவருளின் ஆற்றல் விளக்கமாகும் பரநிலை வெளியைப் "பராசத்திவெளி" என்று கணித்திடலாம். அதன் நீல வெண்நிற ஒளியினை நாம் பராசத்தியின் வண்ணவடிவமாக தேரலாம். அப்பரவெளி பரநிலைவெளியாக - பராசத்திவெளியாக நிலைகொண்டது என்பது; காரணவெளிமுறை முழுமையாக வெளிப்பரப்பில் விளக்கமாயிற்றென்ப. எனவே, வெளிப்பரப்பு முதற்கண், பராபரவெளியாகி மிக மிக நுண்மையயதாய் அருவாயும், பரவெளியாகி மிக நுண்மையதாய் அருவுருவாயும், பரநிலைவெளியாகி நுண்மையதாய் உருவாயும் அமைந்ததென்க. இந்த அமைப்புச்

சீரிலே பரவெளித் தத்துவத்திற்குரிய மூலதத்துவப் பொருள் தலைப்பட்ட தென்க. அத்தலைப்பட்ட தத்துவப் பொருளையே நாம் "பரசிவம்" என்கிறோம்.

பராபரவெளியிற் பராபரை உருவாக இயல்பிற் பரந்தெழுந்த பராபரம், தன்னாற்றல் என்ற சத்தியாம் பராபரையைத் தனித்து நிலைகொள்ளும் வகையில் நின்றது. எனவே, பராபரம் இதுபோது வெளிப்பரப்புக்கு நிராதாரமாயிற்றென்க. பராபரம் வெளிப்பரப்பில் நிராதாரமாய் நிறைந்திடவே, அவ்வாறு நிறைந்திடாத பராபரை அப்பரப்பில் ஆதியாகிப் பரவெளி என்ற வெளிநிலைப்பரப்பை ஆக்கியது. பராபரத்தாலே பராபரை தனித்த பொருள் நிலையது என்ற உண்மையை விண்மீன் ஒளிவளர்வில் செந்நிறக்கோளம் பொன்நிறக்கோளமாகப் புலப்பட்டதால் தெளிக. பராபரம் பொன்னார் மேனியாகப் பரவெளியில் அருவுருவாய் இதுபோது அமைகின்றது. ஆனால் பராபரையோ வெள்ளொளியாய் மிக நுண்மைப் பட்டுப் பரவெளியில் நிறைவுறப் பரந்து சிறக்கிறது. அவ்வாறு சிறந்த பராபரத்தின் அருளொளி, பின்னர் பரவெளியின் எல்லையில் நீலவெண்ணொளியாக நிலைத்தல் - தங்குதல் உற்றது. இதுவே இறை நிலையின் வளர்வுச் செய்தியாம். பெருஞ்சிவப்பு நிற வெளிக்கோளமாக வெளிப்பரப்பில் வெளிப்பட்ட பராபரமே பரவெளியின் எல்லையுச்சியில் நீலவெண் ஒளிக்கோளமாம் என்பதை அறிவுறுத்தவே "பரசிவம்" என்ற பெயர் அதற்கமைந்தது. எனவே, வெளிப்பரப்பில் பராபரம் பராபரை என்று வேறாய் நின்ற தத்துவமாகும் பொருள்கள், பரவெளியிற் பரவிந்து பரநாதம் என்று உடனாய் அமைந்து, பரநிலைவெளியிற் பரசிவமென ஒன்றாய் விளங்கினவாக நாம் ஈண்டு தெளிதல் வேண்டும்.

பரவெளி எல்லை உச்சியில் தங்கிய இறையாம் பரசிவம் என்ற ஒளியானது வெள்மையாயினும் அதன் அடித்தளவொளி செம்மையாதலின் அது சிவம் எனச் சொல்லல் ஆயிற்று. அச்செம்மையும் சுத்தம், அசுத்தம் என்று பாகுபடும் காரிய வெளிப்பொருள்களுக்கு முறையான காரணமாகாது, அதனின் வேறாய்த் தனிக்காரணமான ஒளிச்சொரூபமாதலின் அதன் தூய்மையும் வேறாய்த் தனித்தன்மையது என்று நாம் அறிந்திட வேண்டும் என்பதற்காகவே தத்துவநெறிஞர் பரசிவத்தைச் "சுத்தசிவம்" என்று சிறப்பித்துச் சுட்டியுள்ளனர். அச்சுத்தம் "வாலறிவு" என்று ஆன்றோரால் வழங்கப்பட்டுள்ளது. காரணமுறை வெளியின் அந்தமும் காரியமுறை வெளியின் ஆதியுமாகப் பொருந்தும் அந்தாதி வாயிற்கண் வாலறிவுப் பொருளாய் இறுதல் உற்று இலங்கியதே பரசிவம். பரவெளிப் பரப்பைப் பராபரம் தன்மை (பராபாரை) யிடவெளியாக்கிய பின்னர், அந்தத் தன்மையிட வெளியில் அப்பராபரம் பரசிவம் என்று ஞானிகள் எண்ணிடத் தக்கதாய் நின்று தங்குதலின், அதனைப் பரநிலை வெளியில் "இறை" என்றனர். பரசிவம் பராபரத்தின் மறுவியல்புப் பெயரே.

பராபர வெளியில் பராபரையான பின்பே பராபரம் "பொருள்" எனப் பட்டது. பொருளான பராபரத்தின் பரவாற்றல், வெளியிடத்தைப் பரவெளி யாக்கிப் பரவிந்து என்றிடும் இயலுருவாக் கண்டது. அவ்வெளியில் அவ்வியலுரு பரநாதம் என்று இயலுருப் பொருளாய் இனித்தது. இந்த நிலையில் பொருளான பராபரம் முழுப்பொருளாய் முகிழ்த்தது என்க. பர வெளியில் பராபரம் முழுப்பொருள் ஆனாலும் இறுதல் பெறுத பொருளாகவே இருந்தது. உள்ளது சிறத்தல் என்ற தத்துவத்தால் அந்த முழுப்பொருள் பரவெளியின் அந்தத்திற்குச் சிறந்து, சிறந்து ஈற்றில் அதில் தங்குதல் கொண்டது. அந்நிலையில் அது முழுமுதற் பொருளாய் அமைந்தது. இத னையே பராபரத்தின் "இறைநிலை" என்றேம். பரநிலை வெளியில் பராபரம் எனினும் பரசிவம் எனினும் ஒன்றே. ஆனால் இவ்விளக்கம் பரசிவம் தோற்ற மாகும்போது அஃது அடைந்த இறைநிலைகளைக் காட்டுவதாகும். பரசிவமான பின் அதனது இறைநிலை எத்தகையது என்பது அறிதற்பாலதாம்.

எல்லையற்ற பரவெளி பரசிவத்தால் எல்லையுடையதாயிற்று. இதனு லேயே எல்லைவெளி பரநிலைவெளி எனப்பட்டது. பரநிலை வெளியிற் தத்து வமாகத் தலைப்பட்ட பரசிவமானது, எல்லையற்ற பரவெளியைப் பொது வெளியாய், பேரம்பலமாயும்; எல்லையுற்ற பரவெளியைச் சிறப்பு வெளியாய், சிற்றம்பலமாயும் தன்னை இடையறுது எண்ணுபவர் உள்ளத்துள்ளே புலப் படுத்தியது. சிற்றம்பலமாகிய பரநிலை வெளியில் பராபரம் பராசத்தி வண் ணமாய்ச் சிவசாதாக்கியம் எனப்பட்டுச் சதாசிவமூர்த்தியானுர் என்று தோற்றமான பரசிவத்தின் இறைநிலையைத் தத்துவநெறியர் விளக்கஞ் செய்துள்ளனர். இவ்வாறு பரசிவத்தின் இறைநிலையை ஆன்றேர் மேலும் விளக்கம் காண்பாராக.

## கடவுள் நிலை :

பரவெளியின் காரணமுறைநெறி அந்தமும், காரியமுறை நெறி ஆதியாகப் பொருந்தும். அந்தாதி வாயிற்கண் பரசிவம் நீலவெண் ஒளியாய் நிலைநிற்றலைத் தியானத்தில் தேர்ந்த ஞானிகள், "என்றும் இருப்பவர் என்று சொல்லப்படுபவர்" என்ற கருத்தில் "சதாசிவம்" என்று செப்பினர். இன்னும், அத்தியானத்தில் நீலவெண் ஒளியினூடே அரிதாகச் செவ்வெளிக் கோடுகள் புலப்படுவதையும் உணர்ந்து, அந்த மின்வரைவு அதனின் மிகுகுறியாக உன்னி அவர்கள் "சதாசிவலிங்கம்" என்றனர். இதனை இன்றைய மேலைத்தேய பௌதிகவிஞ்ஞானிகள் - வான்வெளி ஆய்வாளர்கள் ஒத்துக்கொள்கின்றனர். பரநிலைவெளியின் மையத்தில் மலர்ந்த நீலவெண் நிறவொளிகள் செயற்திறனுன ஒளிகளாம் என்பதை நாம் மறக்கலாகாது. ஏனெனில், விண்மீன்கருவொளியின் வளர்வு நிலையின் ஒருபகுதியாக அவை அமைவதால் என்க. பரவெளிக்கண் மின்னியல் ஒளியின் ஒரு பகுதி (காண)

எல்லையில் நீலநிறவொளி ஆதாரமாகவும்; வெண்ணொளி ஆதேயமாகவும் அமைய அவ்விண்கோளம் விளக்கமாயிற்று. இதனையே நாம் முன் கூறிய பொருத்துவாயை அந்தாதி என்றது. அந்தம் - ஆதாரம். ஆதி - ஆதேயம். இங்ஙனமே செவ்வொளி மின்கோடுகளோடு நீலவெண் நிறவொளிக் கோளத்திலே நீலவெண்ணொளி ஆதாரம், அதில் இடையிடையே அரும்பும் அரிய செவ்வொளிக் கீறுகள் ஆதேயம் என்று விளங்கிடல் நலமாகும். இக்கோள விளக்கம் எல்லாம் பரசிவமாகிய சதாசிவலிங்கத்தின் தத்துவ நெறியியலாக அமையும். சதாசிவத்தை அருவுருவம் என்பர் தத்துவநெறிஞர். இங்கே ஆதாரம் என்ற நீலவெண் ஒளியை அருவமாகவும், அதில் மின்னும் செவ்வொளிக்கீறு உருவமாகவும் கொள்ளவேண்டும். கடவுள் என்ற சொல்லில் சதாசிவலிங்கத்தை நோக்கின் "கட" என்ற பகுதிக்கு நீலவெண் அருவ வெளியாம் ஆதாரமும், "உள்" என்றவிகுதிக்கு, மின்னும் செவ்வொளி உருவக் கீறும் ஆதேயமும் எனல் பொருந்தும் என்க. பராபரம் (ஆதேயம்) பராசத்தி (ஆதாரம்) ஆய் சிவசாதாக்கியம் எனப்பட்டுப் பரநிலைவெளியில் சதாசிவ மூர்த்தியானர் என்று தத்துவநெறிஞர் செப்பிய விளக்கமும் இஃதேயாம். பராசத்தியை மெய்யாக (ஆதாரம்) க்கொண்டு பராபரம் என்ற சிவசாதாக்கியத்தின் செயற்பாட்டின் மூல இயக்கப் பொருளையே "கடவுள்" என்ற சொல்லால் சொல்லப்பட்டது. "கடவுள்" என்ற சொல்லாக்கம் பரசிவத்தின் இறைநிலையின் செயற்பாடுகளை விளக்கும் திறனில் எழுந்தது. பரசிவம் இறையென இருந்திடும்போது, இயல்பாகவே தன்னுற்றலைப் புறத்தே உள்ள பொருள்களின் அகத்தும் புறத்தும் செலுத்துதல் – கடவுதல் செய்யும். அவ்வாறு கடவுதல் புரிந்தபோது அவற்றில் உட்படுதலும், உட்படாது கடந்து நிலைத்தலுமான இயல்பில் இயவுளாய் இலங்கும். இவ்விதமான செயற்பாடுகளையே கடவுள் என்ற பொருள்நிலை காட்டுவதாம். இந்த விளக்கமுறையில், பரவெளியின் காரியமுறை வெளிப்பக்கத்துப் பொருட்கும், பொருட் தத்துவங்களுக்கும் உட்பட்டும் உட்படாமலும் இருக்கும் பரசிவத்தின் இறை செயல் கடவுள் எனப்படும். இன்னும் பரவெளியின் காரணமுறைத் தத்துவங்களுக்கும் காரியமுறைத் தத்துவங்களுக்கும் உட்படாது அவைகளைக் கடந்து - பரநிலை வெளியையும் கடந்து சுத்த பரசிவமாகச் சொல்லும் முறையில் இறைமீக்கூர்தலும் கடவுள் எனப்படும். இந்நிலையில் பரசிவத்தின் சொரூபம் ஞானிகளின் தியானத்தில் நுண்மையாய்த் திகழ்ந்திடும். பரநிலை வெளியில் மையமாய் நின்ற பரசிவம் அதன் அயலிடமாம் மேல் - கீழ் பக்கங்களில் அசைவுற்றுத் தத்துவம் பெறுதலும் கடவுள் நிலையாம். இந்நிலையிற் பரசிவம் அவர்களின் ஆழ் மனதில் பருமையாகத்திகழும். இத்திகழ்வைத் தடத்தரூபம் என்றனர். பரசிவம் கடவுள் நிலையால் சொரூபம், தடத்தம் எனும் வகையாக ஏற்படலைத் திருமூலதேவர் மந்திரங்களில்,

வேதா நெடுமால் உருத்திரன் மேலீசன்
மீதான ஐம்முகன் விந்துவும் நாதமும்
ஆதார சத்தியும் அந்தச் சிவனொடுஞ்
சாதா ரணமாஞ் சதாசிவந் தானே - திருமந்: 1731

என்ற திருமந்திரம் கடவுளின் சொருப இலக்கண முறையிலும்;

" சத்தி தராதலம் அண்டஞ் சதாசிவஞ்
சத்தி சிவமிக்க தாபர சங்கமஞ்
சத்தி யுருவம் அருவஞ் சதாசிவம்
சத்தி சிவதத் துவமுப்பத் தாறே" திருமந்: 1737

என்ற திருமந்திரம் கடவுளின் தடத்த இலக்கண முறையிலும் பொருந்த அமைதல் காண்க. இவ்வாறு பரசிவம் இறைநிலையில் பொருளாகி, கடவுள் நிலையில் அப்பொருளின் ஆற்றலாகி அமைந்ததை ஆன்றோர் அகம் கொள்வாராக. இனி, அப்பொருளாற்றல் தத்துவமாய்ப் பதிதல் பெறும் பதி நிலையுறும் பரசிவத்தைக் காண்பாம்.

## பதிநிலை:

பரம்பொருளான பராபரமே பரவெளியிற் தன்மை இடப்பொருளாய்ப் பதிதல் பெறும். அத்தன்மைப் பதிபொருள் அவ்வெளியில் முன்னிலையிடப்பதிப்பொருளாய் இயவுளாகும்போது பரவெளி பரநிலைவெளியாய்ப் பண்புறும். அதாவது; பராபரம் பரம் எனப்படுவதாம். இந்தப் பரம் ஆதிசிவம் என்றும் அழைக்கப்படும். இங்கே ஆதிசிவம் என்றது, ஆதி சத்தியின் அகத்தே பதிதல் உற்ற சிவமாம் பதியென்று தெளிக. பரநிலை வெளியில் நடுவுநிலையாய் நின்று மேல்முகமாகக் கடவுளான பரசிவம் பின்னர் இயவுளாகிக் கீழ்முகமாய்த் தங்குதல் கொண்டு "பதி" பொருளாய்த் தோன்றுதலே சிறப்பாகப் "பதி" எனப்படும். அதாவது தடத்த நிலைப் பரசிவமே பதியாகும். பதியான பரசிவமே பராசத்தியாம் "அருள்" என்ற பொருளாயிற்று. இந்த அருளான பராசத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறே ஆதிசத்தியாய்ப் பரநிலைவெளியில் காரியப் பக்கப் பொருள்களாக அமைகிறது. ஆதிசக்தியே அமூர்த்தி சாதாக்கியமாய் "ஈசன்" என்ற மூர்த்தியாகும் என்று நம் தத்துவம் அறையும். ஈசன் என்ற சொல்லும் பதி என்ற சொல்லும் தலைவன் என்ற பொருளுடையது. எதற்குத் தலைவனாகப் பரசிவம் ஏற்படுகின்றதெனில் கண்டம், அகண்டம் என்றவைக்கு என்க. பரசிவத்தின் நிலை உலகசிவமாய்ப் பொருந்துதலைத் திருமூலர்;

" போது புனைகழல் பூமிய தாவது
மாது புனைமுடி வானக மாவது
நீதியுள் ஈசன் உடல்விசும் பாய்நிற்கும்
ஆதி யுறநின்ற தப்பரி சாமே" - திருமந்: 1724

என்று அருளியுள்ளார். பதிநிலையில் இருந்தே நம் தத்துவம் தோன்றுவதால் பதிநிலை பரசிவத்தின் சிறப்பான நிலையாகும். இச்சிறப்பு நிலையைத் திருமந்திரம்,

"ஈராறு நாதத்தில் ஈரெட்டாம் அந்தத்தின்
மேதாதி நாதாந்த மீதாம் பராசத்தி
போதா லயத்த விகாரந் தனிற்போத
மேதாகி யாதார மீதான உண்மையே" - திருமந்: *1705*

என்ற செய்யுள்களால் புலப்படுத்தியுள்ளார். இத்திருமந்திரம் பதியின் சொரூபம் தடத்தம் ஆகிய இரண்டு நிலையையும் எடுத்து இயம்புகிறது. அத்துடன் காரியமுறைப் பக்கத்து அருவம், அருவுருவம், உருவம் என்ற வெளிகளில் பதிநிலையில் பண்பாகும் செய்யுளாகத் தெளிந்து கொள்ளலாம். இவ்வாறு பதிநிலை பற்றிய செய்திகளைத் தெய்வநூல்களில் மேலும் காண்க.

## காரணநிலை வெளி: பரசிவப்பொருள்

## சிவப்பரம்: ஆதிசிவம்

வெளிப்பரப்பில் பராபரவெளி ஏறுநிலையாய் விருத்தி உறும் போது காரணமான முறைவெளி ஆதிவெளியாக வெளிப்படுகிறது. இந்தவெளி காரியமுறையில் இறங்குநிலையாகும் போது காரணநிலையாகிக் காரிய நிலைவெளிக்கு ஆதியாகவே அமைகிறது. காரியமுகமான சதாசிவம் தொழிலுறும்போது அதற்குரிய காரணத்தைக் காரியநிலைவெளியிற் கால்கொளச் செய்தல் வேண்டும். அந்தக்காரணத்தில் சதாசிவம் சிவமாக நிலைப்படுவான். அதாவது, அச்சிவம் என்றுமிருப்பவராக அமைவர். அங்ஙனமே பரசிவமும் தன் பரத்துவத்தை உள்ளடக்கிச் சிவமாகும். இத்தகு சிவப்பொருள் எவ்வாறு காரியமுறை வெளியில் காரணநிலைப்பொருளாகிறது என்பதை ஈண்டு ஆய்தல் நலம். பரநிலைவெளியில் பரநாதத்தின் நீலவொளிக் கூறேடு பொருந்திய சுத்தவெண்ணொளியே பரசிவமாகும். பரசிவமாம் அந்த வெண்ணொளியில் இருந்து காரியவெளிப் பொருளாம் அகண்டமும் அண்டமும் இயங்க, ஐம்பேரொளியினும் மேலதாகக் காணப்படும் செவ்வொளிவிளக்கம் உற்றது. இச்செவ்வொளி சிவம் என்னும் ஆதிநிலைப் பொருளாய்ச் சிறக்கிறது. அதாவது: நீலவெண் ஒளிப்பொருளின் வெள்ளொளியே அறிவுப் பண்பான பராபரம், அவ் வெள்ளொளியில் இருந்து மிகுந்து சிறந்த செவ்வொளியே ஆற்றல் பண்பான பராசக்தி. காரியமுறை வெளிப்பக்கத்தில் ஆற்றல் பண்பான செவ்வொளியே செறிந்து சிவவெளியாகத் திகழ்தல் இயல்பாம். எனவே, சிவவெளி பராசக்தியின் தத்துவப் பொருளாகிறது. அப்பொருட்

பெற்றியால் பரநிலைவெளி அருவம் என்ற தத்துவவெளியாகப் பரந்தெழுந்தது. அத்தத்துவத்தைப் பரநிலைவெளி பற்றுவதற்கு முன்னர் அது பாழ் வெளியாகத் திகழ்ந்திருந்தது என்று நாம் தெரிந்திடல் வேண்டும். "பாழ்" என்பது வடிவம் கடந்ததொன்றாகும். ஆற்றல் பண்பாகிய பராசத்தியின் அருவத்தில் அறிவுப் பண்பாகிய பராபரம் உருவமாக வடிவுற்றது. அந் நிலையில் "சிவசாதாக்கியம்" என்ற தெய்வப் பண்பாடு தலைப்பட்டது. இதுவே பரநிலைவெளியின் அருவதத்துவத்துக்குரிய ஆதிநிலையாம். அருவவெளி யின் இயல்பு நிலையுமாம்; அருவவெளியின் இயல்புப் பொருளான பராசத் திக்கு, அதன் இயல்பு (அருவம்) நிலையை இன்னும் மிகுத்திட அதில் வடி வுற்ற பராபரம் நினைவு (இச்சை) உற்றது. அந்நினைவாற்றலால் அருவ மான பராசத்தி ஆதிசத்தியாக உருவம் உற்றது. இதுவே திரோதான சத்தி. இதற்கு அருட்சத்தி என்றும் பெயர். இதுதான் மற்றைய படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் என்ற நான்கு தொழில்களுக்கும் காரண மானது. இதுவே அருவமான பரநிலைவெளியை அருவுருமான வெளியாக வும், உருவமான வெளியாகவும் செய்கிறது. பரநிலைவெளியின் அருவ வடி வுக்குப் பராசத்தி ஆதிநிலையாய் அமர்ந்திட, அவ்வமர்வில் ஆதிசத்தி பொருளாய் அமைந்து அதனை அருவுருவடிவாகச் சிறக்க வைத்தது. சிறத் தலாவது: காரியமுறைவெளியில் காரியத்திற்குரிய காரணம் கால்கொண்டு எழுதலாம். அருவுருவவெளி என்றது; அருவமான பராசத்தியும் அதன் உருவமான ஆதிசத்தியும் இணைந்து காரியமுறை வெளியில் காரிய நிலை வெளிக்குரிய காரணப் பொருளையும், பொருட் தத்துவங்களையும் தோற்றுவித்தலாம். அருவுருவம், உருவம் என்பன உருவவடிவில் அமை தலின், இவைகளின் ஆக்கம் பராசத்தி உருவமான ஆதிசத்தியின் மேலான தலைமைப் பொறுப்பில் அமைந்தது. இதனால் அச்சத்தி இச்சை, ஞானம் கிரியை என்ற சத்திகளாக விரிவுற்றது. இவ்வாறு ஆதிசிவத்தை இன்னும் ஆராய்க.

## சத்தர் : இலயசிவம்; இறை.

சிவசத்தி பொதுவகையில் அறிந்தும் அறிவித்தும் நிற்பதாகிய ஞானம் ஒன்றே சொரூபமாகப் பொருந்தும். இதுவே சிவவொளியின் சத்தி. இந்த சிவசத்தி உயிர்களுக்கு மலபாகம் வருதற்பொருட்டு ஐந் தொழில் செய்தலைக் குறித்துச் சிறப்புவகைப்படும். அந்நிலையில் ஆதிசத்தி எழுச்சி யுறுகையில் இச்சை, ஞானம், கிரியையென முந்நிலைப்படும். இச் சத்திகளைப் பரமாம் சிவம் பொருந்தும் போது ஆதிசத்தியின் காரிய மான அருட்டிருமேனி உண்டாகும். இந்த அருட்டிருமேனிகளையே நாம் ஈண்டு சிவநிலைப்பொருள் என்றோம். பரமான சிவம் அச்சத்திகளுள் ஞானசத்தியைப் பொருந்தியபோது ஞானமே திருமேனியாய் அருவத்

திருமேனி உண்டாகும். அந்நிலையிற் சிவப்பரமானது சிவம் என்றும், சத்தர் என்றும், இலயசிவம் என்றும், அருவசிவம் என்றும் தங்குதற்குரிய பெயர் பெற்றதாம். காரியமுறைப் பக்கத்திற்கு உச்சி மையவெளியிற் பரசிவமென இலங்கிய நீலவெண்ணொளி இறங்கு நிலையிற் தோன்றும் போது நீலவொளியே முதற்கண் முற்பட்டு இறங்கிறது. நீலம் - சத்திக்குரிய நிறவொளி என்பர் தத்துவர். நீலநிறம் மற்ற நிறங்களைத் தன்னுளடக்கி மேலுறும் ஒளியாக உள்ளது என்பதைக் கலைஞானம் ஒப்புறும். இக் கருத்து. தத்துவஞானத்திலும் இலயசிவம் என்ற இறைநிலையாம் சிவப் பொருளிற் பொருந்தும். இலயசிவம் என்பது ஒடுக்கசிவமாம், இலயம் —ஒடுக்கம் - தங்குதல். இச்சிவமே சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம் என்ற தத்துவங்களை ஒடுக்குபவராதலின் இலயசிவம் என்பர். இலயதானம்—சிவ தத்துவம். இத்தத்துவம் அபரவிந்து என்ற நாதப் பொருள் கொண்டது. இதுவே நீலவொளிச்கோளமாக இறங்குநிலையில் முதற்கண் அமைந்துள்ளது. இலயதத்துவம் சிவம், சத்தி என்றிடும் தத்துவங்களைக்கொண்டது, சிவதத்துவமாம் நாதத்தில் நின்ற சிவம் இலயசிவம். இந்த இலயசிவத்தைச் "சத்தர்" என்றும் அழைப்பதுண்டு. முயற்சி முதலான கிரியைகளை எல்லாம் தம்மிடத்து அடங்கியிருக்கும் நிலைச்சிவனே சத்தர் எனப்படுவர். விந்துவின் காரியங்களை ஒடுக்கியிருப்பவர் ஆதலின் சத்தன் என்றலுமாம். இவர் காரியங்களைச் செய்ய ஆழமாகச் சிந்திக்காமல் அக்காரியம் ஆற்றத் தொடங்காமல் சித்தமந்திரத்துடன் கூடியிருப்பவர். இவர் சத்திகலையற்றிருப்பதால் அருவமுமாயினர். இது பரசிவத்தின் அதிநுண்மை நிலையாம்.

## உந்தியுத்தர்: போகசிவன்; கடவுள்.

சிவமானவர் ஞானம் - கிரியை என்ற சத்திகளைச் சமமாகப் பொருந்தியபோது அருவுருவத் திருமேனி யுண்டாகும். இத்திருமேனியர் சதாசிவம் என்றும், உத்தியுத்தர் என்றும், போகசிவன் என்றும், அருவச்சிவன் என்றும் பெயர் பெறுவர். இது கடவுள் நிலையானது. போகத்தானம் - சாதாக்கிய தத்துவம். இதுவே இறங்கு நிலை விண்மீன் ஒளிகளில் பொன்நிற விண்மீன் கோளமாம். நீலநிறக் கோளம் முதலாகப் பொன்நிறக் கோளம் வரையும் உள்ள வெளிப்பரப்பு காரியத்திற் காரணம் நிலை கொள்ளும் வெளிப்பரப்பாகும். காரியவெளியினுள்ளே காரணம் நிலைகொள்வதற்கு இலயசிவன் முதலாக போகசிவன் இறுதியாக அமைவர். இவைகளின் நடுவில் இலங்கும் மஞ்சள் நிறவொளிக்கோளம் பரவிந்து என்ற சத்திதத்துவம் சான்ற கிரியை நிலையதாம். இக்கோள நிலையிலே நாதம், விந்து முதலிய தத்துவங்கள் கூடுகின்ற பிரகாசமான சுத்தமாயை பிறக்கிற தென்க. எனவே காரியமுறை வெளியில் இலயசிவத்தால் காரண சதாசிவமும், போகசிவத்தால் காரியசதாசிவமும் காரியத்திற் காரியம்

பிறக்கக் காரணப் பொருள்களாக அமைவதை ஆன்றோர் அறிவர். உத்தி யுத்தார் விந்துவின் காரியங்களில் முயற்சியுள்ளவராவர். உத் - மேல், யுக்- கூடுதல். "மேல்கூடுதல்" என்ற சொற்கருத்தை அச்சொல் உடையது. அருவத்தின் மேல் உருவம் கூடுதலே "மேல்கூடுதல்" என்றதின் விளக்கம். இதுவே "சாதாக்கியம்" எனப்படும். இச் சாதாக்கியமே போகசிவனுகக் கணிக்கப்படும். ஞானமாம் அருவசிவம் கிரியையாம் உருவச்சத்தியைப் பொருந்துதல் பெறும்போதே அருவுருவச் சிவம் எனப்படும். பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை, என்றிடும் ஐந்து சத்திகளும் பரவிந்தாம் சுத்த மாயையில் பதிந்தபோது உண்டான ஈசனுதி ஐந்து மந்திரங்களைத் திரு மேனியாக உடையவர் உத்தியுத்தர். அவர் பாசக்கலைகள் இல்லாமல் சத்தி கலைகளுடன் கூடியிருப்பவர். ஆதலின் இவர் அருவுருவமானவர். பஞ்ச சாதாக்கியமான தத்துவங்களாம் அருவமும், அவற்றின் மூர்த்திகளாம் உருவங்களும் ஒன்றுபட்டு நிற்கும் நிலையே அருவுருவம். இவ் அருவுரு வமே சதாசிவம் எனப்பட்டது. சதாசிவமான இவர் உயிர்களின் பொருட் டுத் தத்துவங்களை உபகரிப்பவராதலின் "போகசிவம்" எனப்படுவர். இது பரசிவத்தின் நுண்மை நிலையதாம்.

## பிரவிருத்தர்: அதிகாரசிவம்; பதி

பிரவிருத்தர் ஞானசத்தி இறங்கியும் கிரியாசத்தி ஏறியும் இருக் கும் இயல்பினர், உருவத்திருமேனியர், அம்மூர்த்தி மகேசுவரன் என்றும், அதிகாரசிவன் என்றும், உருவசிவன் என்றும் பெயர் பெறுவர். அதிகாரத். தானம் ஈசுரதானம். இவர் விந்து காரியங்களைத் தொடங்கியவராவர், இது பரசிவத்தின் தூலநிலையதாகும். இவரே காரியமுறை வெளிப்பரப்பில் காரியத்தில் காரியம் முழுமைப்படுத்துபவராவர். இவர் பாசக்கலையில் மிகுந்தவர். இதனுல் "ஈசத்" மலமுடைய "ஈசர்" எனப்படுவர் தத்துவங்க களைத் தழுவிய உயிர் அவற்றில் துய்த்து அறிவு விளக்கம் பெறச் செய் யும் உரிமைப்பாடுடையவர். இதனுல் அதிகாரசிவம் எனப்பட்டார். அதி- மேல். காரம் - செய்தல். அதாவது; விந்துவின் மேல் தொழிற்பாடு விளக்க முறும்படியான தன்வயமுடையவர் என்பதாம். காரியப் பரவெளியில் காரியத்திற்குரிய அதிகாரிகளை அவ்வத் தொழில்களைச் செய்யும் முறை யில் வழுவாதிருக்கச் செய்யும் உரிமையாம் பொருட்செல்வம் உடையவ ராதலின் "மகேசுவரர்" என்றனர். இவ்வாறு பரசிவம் சத்தர் என்று இறை யாயும், உத்தியுத்தர் என்று கடவுளாயும், பிரவிருத்தர் என்று பதியாயும் காரியப் பரவெளியில் இறை வெளி, கடவுள் வெளி, பதிவெளி என்று முத் திறத்தாய் அதுமுகிழ்தல் காண்க. காரியங்களைச் செய்யத் தொடங்கிய சத் தியை உடையவர், பதியாம் இவரே நவபேதங்களுக்கும் உடையவர். இந்த நவபேதத்தில் சத்திக்கும் விந்துவிற்கும் இல்லாமல் நின்ற ஏழு மூர்த்தி களுக்கும்; சத்தி, விந்து, மனோன்மணி, மகேஸ்வரி, உமை, இலக்குமி

சரஸ்வதி என்னும் சத்திபேதங்களைக் கொள்ளும். காரியபேதத்தால் சத்தி பேதமும், சத்திபேதத்தால் சிவபேதமும் உண்டாகும். சிற்சத்தியே பதிக்குத் தேகம். பிரவிருத்தர் சிவப்புக் குள்ளவிண்மீன் கோளமாக அமையும். இக் கோளம் அதிகாரத் தானமாக நேரலாம். அதிகாரிகள் வெள்ளைக்குள்ள விண்மீனும் சுத்த வித்தையில் இருப்பர். போகசிவமாம் காரிய சதாசிவர் ஞானமும் கிரியையும் சமமாகப் பொருந்த அமைவர் என்றதால்; காரிய சதாசிவர் காரியமுறைப் பரவெளிக்கு நடுநிலை மூர்த்தமாகும். அதாவது; காரியத்தின் காரணத்தில் ஞானமாயும், காரியத்தின் காரியத்தில் கிரியை யும், தொழிற்படும் பொதுநிலைத் தத்துவசிவமாகத் தெளிதல் வேண்டும். இதனாலேயே இச்சிவம் அருவம் உருவம் என்ற திருமேனிகள் மயங்கிய மயக்கத்திருமேனியாக ஆன்றோர் காட்டினர். அருவம் காரியத்தில் காரண விளைவுகளுக்கும், உருவம் காரியத்தில் காரிய விளைவுகளுக்கும் உரியதாக சதாசிவத்திருமேனி பொருந்தியதென்க. இந்தவகை விளக்கத்தில் காரி யத்தில் காரியம் நிகழ்ந்திடும் பரவெளிக்குக் காரியசதாசிவமே ஆதியாக வும், சுத்தவித்தை அந்தமாகவும் அமையும். சுத்தவித்தை (வெள்ளைக் குள்ளவிண்மீன்) யில் உள்ள அதிகாரத் தெய்வங்கள் மகேசுவரத்தில் (சிவப்புக் குள்ள விண்மீன்) பதிந்து மகேசுவரரின் ஆணையால் பதியாம் அதிகாரசிவமாகத் தோற்றம் பெறுவர்.

சிவமென்ற சத்தர் என்பவரின் சத்தி "காரிணிய மாவள்". அவள் அழித்தல் அருளல் என்ற இரு தொழில் புரிவாள். இது நீலம்-மஞ்சள் விண்மீன் கோளங்களாக நாம் நேரலாம். சதாசிவம் என்ற போக சிவத்தின் சத்தி சனனியாவள். அவள் படைத்தல் ஒன்றே செய்வள். இது பொன்நிற ஒளிக்கோளமாகச் சுட்டலாம். மகேசர் என்ற பிரவிருத்தரின் சத்தி "ரோதயித்திரி"யாகும். அவள் காத்தலும் மறைத்தலும் செய்வள். இதுசிவப்பு-வெள்ளை நிறவொளிக் கோளங்களாக ஒப்புறலாம். இவ்வாறு சிவ நிலைப்பொருள்கள் மூன்றும் ஐந்தொழிலுக்கு உரிய பொருள்களாக அமை யுறுதலையும், அதற்கேற்ப விண்மீனின் விருத்திக் கோளங்கள் இயைபுறுதலை யும் தத்துவம் உணர்ந்தோர் காண்பாராக.

பரவெளியில் பரசிவமாம் சுத்தசிவம் தன் பரத்துவத்தை உள்ளு றுத்திப் பதியாய்த் தத்துவம் பெறுமுன் அது கடவுளாய் – இறையாய்ச் சிறப்புறும். இச் சிறப்பாய் முதிருதலையே நாம் தோற்ற விளக்கம் என் றோம். இவ்விளக்கத்தில் பரவெளியும் காரணமாயும், காரணத்தைக் கடந் ததாயும் தோற்றவிளக்கம் அடையும் என்க. இந்தப் பரவெளி விருத்தி யில் அமையும் சிவப்பொருட் தத்துவங்களை நாம் சுத்தசிவ தத்துவமாகி நினைந்து மயங்கி விடுகின்றோம். இம்மயக்கத்தால் சுத்தசிவத்தை யொட் டிப் பல முரண்பாடான கருத்துச்செய்திகளைச் சொல்லி மிண்டு மனத்தராய் வாழ்கின்றோம். பொருளும் பொருள்நிலைப் பொருளும் ஒன்றென எண் ணும், எண்ணத்தின் நின்று விடுபடுவோமாக.

# காரியநிலைவெளி : பரசிவைப்பொருள்

## தத்துவம் - மூர்த்தி - தொழில்

நீலவெண் ஒளியாய் விளங்கிடும் ஒளிப்பொருள் பரவெளியின் உச்சி எல்லையில் நிலைத்துத் தங்கிடும் போதே "பரநிலைவெளி" தோற்றமாயிற்று. எனவே பரநிலைவெளி பரவெளியின் உச்சி எல்லைக்குக் கீழ்ப் பட்டதென்பது வெளிப்படையாகிறது. எனவே அவ்வொளி காரணமுறை வெளியைக் கடந்த "ஒளி" என்பது தெளிவு. நீலவெண் ஒளியே பரசிவம் என்று பகரப்பட்டது. சுத்தசிவம் சதாசிவம் என்று அழைப்பதும் அதனையே. பரசிவம் அவ்உச்சி எல்லையிலிருந்து கீழ்முகமாகப் பதிந்து ஆன்மாக்களின் கேவலநிலையை அகற்றும் போது, பரவெளி பரநிலைவெளியாய் நின்றிடும். பரசிவமும் பரசிவப்பொருளாக அவ்வெளியில் அமர்ந்திடும். உச்சி நிலையில் மிகமிக நுண்மையான பரசிவம், பரசிவப்பொருளாகப் பரநிலை வெளியில் மிகநுண்மையாகவே மிளிர்ந்திடும். அப்போது பரசிவமான ஒளியின் திறன் ஞானிகளின் தியானத்தில் நன்கு புலப்பட்டது. மிக நுண்மையான பரசிவத்தின் ஆயிரத்தில் ஒரு கூறு அனுசிருததேவர். அவர் வாமபாகத்தை எப்போதும் பிரியாத சத்தி அனுசிருதையாகும். அந்த அனுசிருத தேவரைச் சூழ நாலுதிக்கிலும் அனுதர், அனந்தர், வியாமரூபர், காரண வியாபகர் என்னும் நால்வர், தமது சத்திகளாகிய அனுதை, அனந்தை, வியோமரூபை, வியாபினி என்னும் நால்வர்களுடன் பணி புரிந்து கொண்டிருப்பார்கள் என்று அந்தப்புலப்பாடு சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே "சத்திசிருட்டி" எனப்படும் பரசிவையின் பொருள்களாம் பரசிவைப் பொருளான அவ் ஐவரும் காரணமுறைவெளி என்று சுட்டப்படும் பரவெளியின் பொருளான பரநாதக் கலையிலிருந்து காரியமுறை வெளியிற் காணப்படும் பரவிந்தாம் சுத்தமாயையில் ஐந்தொழில் புரிவர். இதுவே தத்துவம் தோன்றும் முறைமையாகும். இங்கு காரணமுறைவெளியின் பரநாதக்கலை ஆதாரமாயும், காரியமுறைவெளியின் பரவிந்து ஆதேமாயும் அமையும் அமைப்பே தத்துவம் தோற்றம் என்க. ஒளிக்கருவின் ஏறுநிலையில் உள்ள பரநாதமும் இறங்கு நிலையில் உள்ள பரவிந்தும் ஆதார ஆதேயமாக அமையும் முறையினைக் கண்ணாடியில் நிழல் போல என்ற உவமைமூலம் தத்துவநெறியை விளக்குவோர் விளம்பியுள்ளனர் பரவெளியின் காரண (பரநாத) முறையும், காரிய (பரவிந்து) முறையும் என்றும் பிரியாத இணைப்பில் என்றும் இருக்கும் என்ற உண்மை உணர்வில் உறுவதைத் தத்துவப்பெரியர் சாதாக்கியம் என்பர். "சாதாக்கியமே" தத்துவத்தை உருவாக்கி இயக்குவது, பரநிலைவெளியில் மிகநுண்மைப் பொருளாகப் பரசிவம் மிளிருதல் நாதம், விந்து என்றவைகளின் சமநிலையில் என்க. இந்தச் சமநிலை

எவ்வாறு உருவாகிறதென்பதை நாம் அறிதல் வேண்டும். இந்த அறிதல் முறை தெளிவாக விளங்க வேண்டுமானால், தத்துவமும் (அருவம்) மூர்த்தியும் (உருவமும்) எவ்வாறு தோற்றம் பெற்று விளங்கும் என்ற செய்தியை முதற்கண் உணர்தல் வேண்டும்.

கலைமுறையில் நாத - விந்துகளின் சமநிலையை நோக்கும் போது விண்மீன்களில் விளங்கும் இரட்டை விண்மீன்களை நேரலாம். இரட்டை விண்மீன்களைக் கணிக்கும் முறையில் இரண்டு விண்மீன்களை இணைக்கும் கோட்டில் மையமாக ஒரு புள்ளியைக் கொண்டு இந்த இரண்டு விண்மீன்களும், அவற்றின் இடையேயுள்ள பொருட்கவர்ச்சியும் சத்தியின் விளைவாக நன்கு பிணைக்கப் பட்டிருக்கலாம் என்ற விஞ்ஞானக் கருத்து ஈண்டு பொருத்தமாகிறது. ஞானவாற்றலான நாதமும் கிரியை ஆற்றலான விந்துவும் இவைகளுக்கிடையே இலங்கிய ஆதிசத்தியாம் இணைக்கும் மையத்தில் பராசத்தியால் சமமாக நன்கு பிணைக்கப் பட்டதாகும். என்று நம் தத்துவத்தையும் விளங்க வேண்டும். இந்தக் கலைத்தத்துவ விளக்கமுறையிலேயே சாதாக்கியத்தையும் தெளிதல் வேண்டும். இந்தச் சாதாக்கியம் சிவசாதாக்கியம், அமூர்த்தி (அருவம்) சாதாக்கியம், மூர்த்தி (உருவம்) சாதாக்கியம், கர்த்திரு (செய்வோன்) சாதாக்கியம், கரும (செயல்) சாதாக்கியம், என ஐந்துவகைப்படும். இந்த பஞ்சசாதாக்கியம் தத்துவம் எனப்படும். தத்துவம் அருவமாகக் கணிக்கப்படும். அந்தத் தத்துவங்களுக்கு முறையே சதாசிவம், ஈசன், பிரமன், ஈச்சுரன், ஈசானன் என்னும் ஐவர்கள் முதல்வராவர். இவர்கள் மூர்த்திகள். மூர்த்தி எனவே உருவம் புலனாயிற்று. அருவமான தத்துவமும் உருவமான மூர்த்தியும் தம்மில் ஒன்றியியைபுறும் போது மிகநுண்மையான பரசிவம் நுண்மையாகத் துலக்கம் பெறும். அந்நுண்மைச்சிவம் அரும்பொருள் என்றும் அறையப்படும். அருவமான தத்துவமும், உருவமான மூர்த்தியும் மயங்கிய மயக்கியலை உணர்வால் உணர்ந்து கொளற்கு அரியதாதலின் அஃது அரும்பொருள் எனப்பட்டது. சிவசாதாக்கியமாகிய தத்துவமும் சதாசிவமென்ற மூர்த்தியும் ஒன்றிய நிலையில் "ஈசானம்." அமூர்த்தி சாதாக்கிய தத்துவமும் ஈசனென்கிற மூர்த்தியும் ஒன்றிய நிலையில் "வாமதேவம்.'' மூர்த்தி சதாக்கியமாகிய தத்துவமும், பிரமன் என்கிற மூர்த்தியும் நிலையில் "சத்தியோசாதம்." கர்த்திரு சாதாக்கியமான தத்துவமும், ஈஸ்வரனென்ற மூர்த்தியும் ஒன்றிய நிலையில் "தற்புருடம்." கர்மசாதாக்கியமாகிய தத்துவமும், ஈசானனென்ற மூர்த்தியும் ஒன்றிய நிலையில் "அகோரம்,'' இங்ஙனம், அரும்பொருள்கள் ஐந்தும் அமைந்தன. இந்த ஐந்து அரும்பொருள்களின் தொகுப்புகள் அமைப்பிலேதான் ஞானசத்தியும், கிரியா சத்தியும் சமன் நிலைப்பட்டுச் சதாசிவலிங்கம் சான்றதென்க. ஈசனர், வாமதேவர், சத்தியோசாதர், தற்புருடர், அகோரர் என்றிடும் ஐவர் மூர்த்திகளாவர். இவ்வாறு பரசிவத்தின் தத்துவம் பொருளாகச் சதாசிவலிங்மாகப் புலப்படும் எனத் தேர்க.

இனி, ஆதிசத்திதான் இச்சா, ஞான, கிரியா சக்திகளாக விரிவுற்றுப் பரவிந்துவைக் கலக்கியபோது அச்சத்தியில் நாதமூர்த்தி உண்டாகும். நாதத்தில் நலத்தது ஞானம். நாதத்திலிருந்து விந்துமூர்த்தி விளங்கும். விந்துவில் விளங்குவது கிரியையாம். விந்து மூர்த்தியில் இருந்து விந்துசத்தி தோன்றும். விந்துசத்தி உமாசத்தியை அளிப்பாள். அவ் உமாசத்தி அம்பிகையை அருள்வாள். அம்பிகையில் இருந்து கணேசரும், அவரிலிருந்து ஈஸ்வரியும், இவளில் இருந்து மனோன்மணியும் தோன்றுவர். இவர்கள் ஐவரும் பஞ்ச சாதாக்கியங்களின் சத்திகளாவர். இவ்வாறு பரசிவைப் பொருள் எவை என்பதை ஒருவாறு தெளியலாம்.

மேலும்; முன்விளக்கிய அநுசிருதர் முதலான ஐந்து பேர்களும், பரநாதக் கலையில் இருந்து அதற்குரிய புவனங்களுக்கு அதிபதியாகிச் சுத்தவெளியில் உள்ள மாயையில் ஐந்தொழில் புரிவர். அவ்வேளையில் அநுசிருததேவர் காரியமான சதாசிவதேவர் (காரணசதாசிவம்), சதாசிவர் (காரியசதாசிவம்), மகேஸ்வரர், உருத்திரர் என மூவராகி; இவர்களுடன் மகேஸ்வரரில் இருந்து பிறந்த அரி, அயன் ஒன்றித்து ஐவராகி அசுத்த வெளியில் அமையும் மாயையில் ஐந்தொழில் புரிவர். இவ்வாறு தொழில் முறையில் பரசிவையின் பொருள்களை நாம் தேறலாம். இதனை இன்னும் விரித்துரைக்கில்; சுத்தமாயையை ஆதிசத்தியால் ஞானசத்தி பொருந்த நாத தத்துவமும், கிரியாசத்தி பொருந்த விந்து தத்துவமும், இவை இரண்டும் இணைந்து பொருந்த சாதாக்கிய தத்துவமும், கிரியை ஏறி ஞானம் குறையப் பொருந்தலால் ஈசுவர தத்துவமும், ஞானம் ஏறி கிரியை தாழ அணுகையில் சுத்தவித்தை தத்துவமும், தோன்றும். இவ்வாறு சிவதத்துவங்கள் தோன்றும். இந்தத்தத்துவங்களுக்கு முறையே சிவம், சத்தி, சதாசிவம், மகேஸ்வரன், உருத்திரன் என்ற சிவமூர்த்திகள் சிறந்து ஒளிர்வர். இத்தத்துவங்களில், மூர்த்திகளில் தொழில் புரிவதற்குரிய உரிமைப்பாடான தத்துவ - மூர்த்தி எதுவெனின், ஈசுவர தத்துவத்தைப் பொருந்தி நிற்கும் மகேஸ்வர மூர்த்தியாவர். இவர், சுத்த வித்தையில் அமர்ந்த அனந்த தேவரை அதிட்டித்து அவர் வாயிலாக அசுத்த மாயையிற் படும் தனு, கரண, புவன போகங்களைத் தொழிற் படுத்துவர். அவ் அனந்ததேவர் ஸ்ரீகண்ட உருத்திரரை அதிட்டித்துப் பிரகிருதி மாயையிற் படும் தனு, கரண, புவன போகங்களைப் படைப்பர். இவ்வாறு சிவம், சத்தி, நாதம், விந்து என்ற நான்கும், அருவமாயும், சதாசிவம் ஒன்று அருவுருவமாயும், மகேஸ்வரன், உருத்திரன் இருவரும் இவர்களின் அதிகாரத்தால் நடக்கும் பிரமா, விஷ்ணுக்கள் இருவருமாக ஒன்பது மூர்த்திகளும் ஐந்தொழிலைத் தன்மை, முன்னிலை, படர்க்கையாக இடங்கொண்டு இயற்றுவர். தன்மையாவது; பரிபூரண இருக்கை. முன்னிலையாவது; இச்சா ஞானக் கிரியைகளான இருக்கை. படர்க்கையாவது; மனம், புத்தி, அகங்காரம், சித்தம், உள்ளம் ஆக ஐந்து; அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் ஆக ஐந்து; அயன், அரி, அரன், ஆண்டான்,

அருளோன் என்ற ஐந்து என்றிடும் பதினைந்து முறையான இருக்கை, அவ்வாறான இருக்கைகளில் தொழில் எவ்வாறு இயலுமெனில், கரணங்களை அக்கரங்கள் செலுத்த, அக்கரங்களை மூர்த்திகள் செலுத்த, மூர்த்திகளை இச்சை - ஞானம் - கிரியை என்ற சத்திகள் செலுத்த; இச்சத்திகளை ஆதி சத்தி செலுத்த, ஆதிசத்தியைப் பராசத்தி செலுத்த, பராசத்தியைப் பரசிவம் செலுத்துவதால் தொழில் இயங்கும் என்க. இந்தத் தொழிற்திறனை,

"மேவும் பரசிவ மேற்சத்தி நாதமும்
மேவும் பரவிந்து ஐம்முகன் வேறீசன்
மேவும் உருத்திரன் மால்வேதா மேதினி
ஆகும் படிபடைப் போனர னுமே."

என்றும்,

ஆதி பராபர மாகும் பராபரை
சோதி பரமுயிர் சொல்லுநற் றத்துவம்
ஓதுங் கலைமாயை யோரிரண் டோர்முத்தி
நீதியாம் பேதமொன் பானுடன் ஆதியே."

திருமந்: *2417, 2543*

என்றும் திருமூலதேவர் அருளிய திருவாக்குகளால் அறிக. இத்தொழிற் திறத்தைச் சிறப்பாகக் காண்பாம்.

சத்தர் என்ற சிவம்; சுத்த மாயையைத் தமது சத்தியாற் கலக்கிச் சுத்த ரூபமாகிய நாத விந்துக்களையும், அர்த்த ரூபமாகிய நாதம் விந்து என்னும் பெயர்களையுடைய சிவதத்துவம் சத்தி தத்துவங்களையும், இத் தத்துவங்களிலே புவனங்களையும், இந்தப் புவனங்களில் வாழ்பவர்க்குரிய தனுகரணாதிகளையும், விந்துதத்துவத்திலே நின்று சதாசிவத்தையும் உண்டாக்கி, சதாசிவரைச் சாதாக்கிய தத்துவத்திற்குந் தலைவராக்கி, அவரை வேறறக் கூடி நின்று படைப்பாதிகளைப் பண்ணுவர் எனவறிக.

உத்தியுத்தராகிய போகசிவன் - சதாசிவம்; சாதாக்கிய தத்துவத் திலே நின்று ஈஸ்வர தத்துவத்தையும், அதிலே புவனங்களையும், அந்தப் புவன நாயகரான அனந்தர் முதலான அட்ட வித்தியேசுரருக்குத் தனுகரணாதிகளையும் உண்டாக்குவதும், இந்த ஈசுரத் தத்துவத்திற்கு நாயகராகிய மகேஸ்வரரைப் பண்ணுவதும், இந்தத் தத்துவத்திலே நின்று சுத்தவித்தியா தத்துவத்தை யுண்டாக்குவதும், தனுகரணாதிகளை உண்டாக்குவதும், சுத்த வித்தையிலிருக்குங் காரணமாகிய சத்தகோடி மந்திரங்கட்கும், இவ்வெழுகோடி மந்திரங்களுக்கும் நாயகிகளாயிருக்கும் பிருகுடி முதலான எழு சத்திகளுக்கும் தனுகரணாதிகளை உண்டாக்கும் எனவறிக.

பிரவிருத்தர் என்ற அதிகாரசிவம் அசுத்தமாயையைக் கலக்கிக் காலம், நியதி, கலை, என்ற தத்துவங்களை உண்டாக்குவதும், இவைகளிலே புவனங்களை ஆக்குவதும், இந்த நான்கு தத்துவங்களிலே இருக்கின்றவர்களுக்குத் தனு கரணாதிகளை உண்டாக்குவதும், ஸ்ரீகண்ட பரமேஸ்வரரை அதிட்டித்து நின்ற கலையிலே நின்றும், பிரகிருதியையும் வித்தையையும் இராகத்தையும் உண்டாக்குவதும், இவைகளிலே புவனங்களை ஆக்குவதும், இந்த நான்கு தத்துவங்களிலே இருப்பவர்களுக்கு வேண்டிய தனு கரணாதிகளை உளவாக்குவதும், கலாதிகளின் கூட்டத்திலே புருடதத்துவத்தை விளக்கச் செய்வதும், பிரகிருதியைக்கலக்கிக் குணங்களைப் பிரிப்பதும், தம்முடைய வலதுபாகம் இடதுபாகம் மார்பென்னும் அங்கங்களிலே உண்டான அயன், அரி, நீலஅரன் என்னும் மும்மூர்த்திகளையும், ஸ்ரீகண்ட பரமேஸ்வரனால் அடைவிலே இராசத சாத்துவிக தாமத குணங்களால் அதிட்டிப்பித்துக் குணமுதல் பிருதிவியீறான இருபத்து நாலு தத்துவங்களில் படைத்தல், காத்தல், அழித்தல்களைப் புரிவதும் எனவறிக.

பரசிவைப் பொருள்களில் ஆதிசத்தியே மூதற்பொருளாம். அந்த முதல்வியைப் பற்றி இன்னொரு சீரிய கருத்தும் இங்கு இயம்புதல் வேண்டும். பரசிவத்தின் ஆற்றல் (திருவருள்) பராசத்தி. பராசத்தியின் ஆற்றல் (திருவருளின் ஆற்றல்) ஆதிசத்தி. எனவே ஆற்றலின் ஆற்றலாக ஆதிசத்தி அமைதல் ஓர்க. அப்பனும் சிவ (பர) த்தோடு கூடிய சிவை (பரை) யே ஆதிசத்தி. இதுவே திரோதான சத்தியாகும். திரோதானம் மறைப்பு. ஆதிசத்தி ஆன்மாக்களின் ஆணவமலத்தைப் பரிபாகப் படுத்தும் பொருட்டுத் தனது ஒளியை அவ் ஆன்மா தன்னொளி உணர்வை உணர்ந்திட முடியா வண்ணம் மழுங்கிடும் முறையிற் செலுத்துகிறது. ஆன்மவொளியை மழுங்கச்செய்த ஆதிசத்தியொளி அவ்வான்மாவின் இருளை அதே அமையத்தில் எழுச்சி கொள்ளவும் செய்கிறது. ஒளியைத் தாழ்ந்திடச் செய்யும் தாக்கம் இருளை உயர்ந்திடச் செய்யும் நிலை இயற்கையானதே. எனவே ஆதிசத்தியாம் சிவவொளியின் செயல் சீவவொளியைச் சீவன் சீருறக் காணாது மறைத்தலே அன்றி இருளைப் பருமையாக வெளிப்படுத்தல் அன்று. இதனாலேயே ஆதியொளியை மறையொளி என்றிடத் திரோதானம் என்றனர். திரோதானம்: த்று-குறுக்கு, இடை என்பது. தா - பற்றல் என்பது. இதனால் ஆதிசத்தியின் அந்நிகழ்வு இடைநிகழ்வு அல்லது குறுக்கும் நிகழ்வு என்று கருத்துப் பெறுவதாகும். பரசிவத்தின் ஆற்றலின் ஆற்றலான ஆதியை மலசத்தி என்றல் எங்ஙனம் பொருந்தும்? பொருந்தாதெனினும் அதன் பெறுபேறு மலவியலாகப் புலப்படுதலின் மலம் என்றனர் போலும். அதாவது; ஆன்மவொளியைச் சுருக்குதலின் விளைவு ஆன்மவிருளைப் பெருக்குதலாய் முடிதலின் அப்பெருக்கப்பேறு ஆதிசத்தியின் நேர் தொடர்பில்லாத புதிய நிலையதாகும். ஆதிசத்திக்கு அமைந்த புதியநிலைச் செய்தியைக் கலைமுறையில் புதிய விண்

மீன் பிறப்போடு ஒரு புடையாக ஒப்பிடலாம். விண்மீன் ஒளிக்கருவின் விருத்தியில் அதன் இளமை நிலையிலோ, முதுமை நிலையிலோ புதிய விண் மீன் பிறக்கும் என்று வான்வெளி விஞ்ஞானிகள் கருதியுள்ளனர். பெரிய இராட்சத சிவப்பு விண்மீன் நம் சூரியனைப் போல நடுத்தர நிலையில் திடீரென வெடித்துச் சிந்தும் ஒளிச்சிதறல்கள் புதிய விண்மீனைப் பர வெளியில் விளங்கும்; இவ்வாறே வெள்ளைக்குள்ள விண்மீனும் புதிய விண் மீனைப் பிறப்பிக்கும்; இம்மீன்கள் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் ஒளிமங் கிக் கறுப்பு நிறமாம் இருள்நிலையை அடையும். இவ்வாறு விண்மீனில் இடையிட்டு நிகழும் புதுநிலைச் செய்திகளை, ஆதிசத்தியின் திரோதான நிலைக்கு நேர்வாக நாம் நினைக்கலாம். இவ்வாறே;

> " சிவனொடு சத்தி இகழ்நாதம் விந்து
> தவமான ஐம்முகன் ஈசன் அரனும்
> பவமுறு மாலும் பதுமத்தோன் ஈறு
> நவமவை யாகி நடிப்பவன் தானே. திருமந்: 180

என்று திருமூலதேவர் அருளிய தத்துவக் கருத்துப் பொருள்களைக் கலை முறையில் அமையும் விண்மீன் கருவளர்வாம் விருத்தியில் வைத்துச் சிவ தத்துவத்தை - பரசிவைப் பொருளை இனிக்காண்பாம்,

வெளிப்பரப்பின் விண்மீன் கருவானது சிவப்பு இராட்சத விண்மீனாக வளர்வுற்றபோது பராபரவெளி என்று வெளிப்பரப்பு பதம் பெற்றது அவ்வெளியிற் தனித்தனி உருவான பராபரச் செவ்வொளியும், பராபரைச் செம்பொன்னொளியும் பரநிலை வெளியின் உச்சியில் நீலவெண்நிற வொளியாக ஒரு கோளத்தில் மயங்கி விளங்கியன. இதனைத் திருமூலர் " ஒளிபவளத் திருமேனி வெண்ணீற்றன் அளிபவளச் செம்பொன் ஆதிப் பிரானும்" (திருமந்: 2695) என்று நிறவொளி முறையாகச் சொல்லிய திறனும் காண்க இன்னும்; அவர் "உச்சியில் ஓங்கி ஒளி திகழ் நாதத்தை"(திருமந்: 442) என்று நீலநிற விண்மீன் நீலவெண்நிற விண்மீன் கோளமாவதைக் காட்டுவர். இக்கூற்று வெளிப்பரப்பில் காரணவெளிப் பக்க மாம் பரவெளியை எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் நீலவெண்ணிற விண்மீன், ஒளியின் ஊடே ஒலியும் நுண்பொருளாய்க் கலந்து ஒளியோசைப் பொருளாய்ப் பொருந்தும் என்பதையும் உணர்த்துவதாயிற்று. " நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்" என்று தமிழ்ப் புலவோர் கூற்றும் ஈண்டு இயைபுடைத்தாகும். இப்புலவர் கூற்றால் நீலவெண்நிறமீனின் நீலவொளி சிவம் சத்தியாயும், வெண்ணொளி சத்தி சிவமாயும் பகுமுறையிற் தத்துவம் கொள்ளலாம். அவ்வாறே தொகுமுறையில் மாதொரு பாகனாகி முழுமை பெற்றசிவம் சத்தியின் தத்துவமபக்கமாகவும் உணரலாம். இன்னும், பராபர வெளியின் செம் - பொன் நிறங்களின் பகுநிலை சிவமாகும். பரநிலை வெளியின்

நீலவெண் நிறங்களின் தொகுநிலை சிவசத்தியாம். சிவசத்தி என்பது சிவமும் சத்தியும் என்று உம்மைத் தொகை யாகவும், சிவமாகிய சத்தி என்று பண்புத் தொகையாகவும் வருதலில், உம்மைத்தொகை; நீலவெண் நிறக்கோளத்தின் தனிநிலை (சொரூபம்) த் தத்துவத்தையும், பண்புத்தொகை; அதன் இனநிலை (தடத்த) த் தத்துவத்தையும், அறிவுறுத்துவதாகும். உம்மைத் தொகையாய்த் தனிநிலைத் தத்துவமான சிவசத்தியின் கருத்தைத் திருமூலர், " இருளது சத்தி ஒளியதெம் அண்ணல்" (திருமந்: 1095) என்று வழங்கியுள்ளார். இருள் என்றது, அதிநீல நிறமான விண்மீன் ஒளியைக் குறித்தது. சுருங்கச் சொல்லின் நீலவெண்நிற விண்மீன் பராபரத்தின் ஆற்றல் என்ற திருவருட் பொருள் என்பதாம். நீலவெண் விண்மீனில், வெள்ளொளி நீலவொளியினது உள்ளது சிறந்தற் பொருளாம். காரண ரூபமான சிவை, காரியரூபமாக வெளிப்படும் வெளிப்பாட்டின் குறியாகவே அஃது அமையும். வெள்ளொளியாய்க் காரியமுறை வெளிப்பக்கத்தில் முளைத்த மூலவொளி, அப்பக்கத்தின் தொடர் முடிவில் சிவப்புக்குள்ள விண்மீனாக மிளிர்ந்தாலும், அதன் எச்சமாக வெண்மைக்குள்ள மீன் சுத்தவித்தையாகப் பெறப்படுதலின், பண்புத்தொகையாகக் கொள்ளும் சிவமாகிய சத்தி, சத்தியாகிய சிவமெனக் கருதப்படும் என்பதாம். இவ்வாறு பரவெளித் தத்துவத்தின் அருமைப்பாடு திருமூலதேவரால் தமிழாகமத்தில்

"தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மை யறிந்தபின்
தத்துவம் அங்கே தலைப்படுந் தானன்றே" — திருமந்: 2774

என்று விளக்கப்பட்டிருத்தல் காண்க.

பரவெளியின் உச்சி மையத்தில் இறையென நின்ற நீலவெண் விண்மீன், இறங்கு நிலையில் பதியென முற்படும்போது, சிவசத்தி என்ற பராசத்தியின் குறியான நீலநிறவொளியை, அதில் மயங்கிய வெண்ணொளியின்ஆற்றல் அந்நிலைக்கு முற்படச் செலுத்தியது. செலுத்தவே, ஒளி வண்ணமான ஒலியாம் பரநாதம் தன் பரத்துவத்தைத் தகைத்து நாதமாய் - அபரவிந்தாய்க் காரியமுறை வெளியிற் பகுதலுற்றது. எனவே, நீலநிற வொளியே நாதத்தின் தாங்குஞ் சத்தி ஆயிற்று. அந்நீலநிற வொளியின் தாங்குஞ் சத்தியில் - ஆதாரத்தில், நீலவொளியைச் செலுத்திய வெள்ளொளியாற்றல் அதன் பொருளாய், – ஆதேயப்பொருளாய் – பாயுஞ்சத்தியாய்ப் பதிதல் கொண்டது. இதுவே ஞான சொரூபமான சிவம் என்க. இச்சிவமே நாதத்திற்கு அதிபதியாயிற்று. இதனால் நாதத்தைச் சிவதத்துவம் என்றனர். "பரநாதம்" பராபரையால் எழுவது. "நாதம்" ஆதிசத்தியால் எழுவது. அதாவது, ஆதிசத்தி விருத்தியான ஞானசத்தி, சுத்தமாயையிற் பொருந்தும் போது உண்டான ஒலியே நாதம் என்க. நாதத்தின் தாங்குஞ்

சத்தியே காரியவெளியில் இறங்கும் நீலநிற விண்மீன் கோளம். இது மஞ்சள் நிறம் கலந்த வெண்நிறத்தோடு தோன்றும். பாயுஞ்சத்தியாதலின் இந்த இரண்டு நிறவொளி இயைபிற் செந்நிறம் சிறக்கும். இதனையே தத்துவநெறிஞர் நாதம் செந்நிறப்பொருள் என்பர். மஞ்சள் கலந்த வெண்நிறம் நாதத்தின் சொரூப நிறம். செந்நிறம் என்ற சுவேத நிறம் அதனின் தடத்தத்தின் நிறம் என்று தெளிதல் வேண்டும்.

நாதத்திலிருந்து "விந்து" தத்துவம் தோன்றும். அசைதலான ஒளி வண்ணமான வொலி, வான்வெளியிற் பரவுங்கால் உண்டாகிய வட்டவடிவே 'விந்து'' எனப்பட்டது. அந்த விந்து கொள்ளும் இடம் நல்ல மஞ்சள் கலந்த வெண்மை நிறமாக விஞ்ஞானம் கூறுவதை நம் தத்துவமும் கூறுகிறது. இறங்கு நிலையில் மஞ்சள்நிற விண்மீன் கோளம், விந்துவாக்க கணிக்கப்பட்டது. கிரியாசத்தி நாதத்திற் பொருந்தி தொழில் செய்தலால் விந்துவின் உருவம் தோன்றும். இதனால் விந்து, சத்தி என்ற பெயரைப் பெற்றது. நம் தத்துவத்தில் விந்துவை இரத்தநிறம் என்பர். இந்த நிறக்குறிப்பு விந்துவின் தடத்த நிலையது. நல்ல மஞ்சள் கலந்த வெண்மை அதன் சொரூப நிலையது. தடத்த நிறமான இரத்தத்தைத் தொழிலுவமமாகக் கொள்ளலாம். எவ்வாறெனில், உடல் இயக்கம் நிலைபெறுதல் இரத்தத்தால் இனிதுறல் போலக் காரியப் பரவெளியில் நிகழும் காரண காரியப் பொருள்கள் எல்லாம் விந்துவாலே விளக்கம் அடையுமென்பதாம். இதனால் இவ் விந்தைப் பரவிந்து என்றும், நாதத்தை அபரவிந்து என்றும், தத்துவவுலகில் பேசப்படும். இந்த விந்துச் செய்தியை;

> "புறமகம் எங்கும் புகுந்தொளிர் விந்து
> நிறமது வெண்மை நிகழ்நாதம் செம்மை
> உறமகிழ் சத்தி சிவபாத மாயுன்
> திறனெடு வீட்ளிக் குஞ்செயற் கொண்டே." திருமந் : 1892

பரவிந்துவில் ஞானசத்தியும் கிரியாசத்தியும் ஒத்துத் தொழிற்படுதலால் சாதாக்கிய தத்துவம் தோன்றும். இதன் விண்மீன் கோளம் கிச்சிலி (பொன்) நிறமாக அமையும், அதாவது நல்ல மஞ்சள் நிறம் அந்நிறத்தில் மிகுந்து விளங்குதல், இதுவே சாதாக்கியத்தின் தாங்குஞ் சத்தியாம். அத்துடன் அதன் சொரூப நிறமும் அதுவாம். ஆனால் தத்துவத்தில் படிகநிறம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இருபொருள் ஒப்புமையில் ஒன்றான பொருட்கண் அகம் தோன்றாது புறமே புலப்படும். இதனால் காரிய வெளிப்பக்கச் சாதாக்கியம் அவ் வெளிப் பக்கத்தில் மையமாக அமைதலின் அச் சாதாக்கியத்தின் புறமான மேல்வெளி காரணமாயும், கீழ்வெளி காரியமாயும் அமைந்து தன்னில் அவைகள் புலப்பட நிற்பதால் படிகநிறம் என்றனர். புறத்தை அடக்கிக் காட்டலே படிகம். இது சாதாக்கியத்தின் தடத்த நிலை நிறமாகும். இதன் சொரூபநிறம் பரவிந்து நிறத்தின்

மிதநிலை என்பதால் அதனை இத்தன்மைத் தென்று இனிதாய் உரைத்தல் முடியாதென்க. இதற்குக் காரணம் அதன் சொரூபம் அருவவடிவையுங் கடந்து இருத்தலால் என்க.

சாதாக்கியத்திலே கிரியையேறி ஞானங் குறைந்து தொழிற்படுதலால் "ஈச்சுரம்" தோன்றும். "ஈசத்" என்பது அற்பம். அற்பமலம் உடையதாதலின் ஈச்சுரம் என்ற பெயரை இத்தத்துவம் பெற்றது. இது சிவப்புக்குள்ள விண்மீன் கோளத்திற்குரியது. பெரிய இராட்சத ரூபமான சிவப்பு வண்ணவொளி, காரியத்தில் காரியமான வானத்தில் குள்ளமாக - அற்பமாக ஒளிவண்ணம் ஒடுங்கல் போலப் பரநிலை வெளியில் அமூர்த்தி சாதாக்கியமாய்ப் பருப்பட்ட ஈசன் அசுத்த மாயைக்கு அதிகாரசிவமாய் அகப்பட்டவுடன் அகண்டம் அருகிச் சிற்றீசனாகினன் என்று தெளிதல் வேண்டும். ஈச்சுரத்தின் சொரூபநிறம் குறுஞ்சிவப்பு. தடத்த நிறம் இருள் என்பர் தத்துவநெறியர். அவ்வாறு அவர்கள் கூறியது, அசுத்தமாயையின் மேலாண்மையைக் கொண்டதால் ஏற்பட்ட அற்பமலத்தால் என்க. இருள் மறைப்புப்பொருள். இங்கே ஆன்மா கன்மத்தை அனுபவிக்கச் செய்யும் போது அவர்கள் அப்போது அனுபவிக்க வேண்டாத கன்மங்களை மறைக்க வேண்டியுள்ளது. மேலும், அனுபவிக்க வேண்டிய கன்ம பலன்களில் உள்ள குண குற்றங்களையும் மறைக்க வேண்டியுள்ளது. இதனை அவர் செய்வதால் ஈச்சுரதத்துவத்தை இருளென்றதும் பொருள் முறையில் நேரியதே. நீலவெண் ஒளியின் நிறமாலையும் குள்ளசிவப்பு விண்மீன் கோளத்தோடு முடிவுறுவது போல "மூர்த்தி தத்துவமும்" ஈச்சுர தத்துவத்தோடு நிறைவுறுகிறது. இதிலிருந்து விஞ்ஞானமும் நமது தத்துவமும் எவ்வளவு நெருக்கமுடையதாகிற தென்க. இன்னுஞ் சத்தியின் பேதமான இச்சா, ஞான, கிரியைகள் தனித்தும், இணைந்தும், இணையாதபோது ஒன்றுகூடி ஒன்று குறைந்தும், நிற்பதாகிய இயல்புகளை விண்மீன் திறன்களிலும் காணலாம். இங்கு ஞானம், கிரியை என்பன கூடிக் குறைதல் நிலையே ஊசல் விண்மீன் போலதாம். ஊசல் விண்மீனின் வெளிச்சம் ஒரே அளவாய் இருந்திடாமல் சிலமணி நேரத்திற்கு ஏற்றத் தாழ்வாய் மிகுந்தும் குறைந்தும் மாறிவரும் பெற்றி அதனோடு ஒக்குமென்க.

"ஈச்சுரம்" என்ற தத்துவத்தில் இருந்து "சுத்தவித்தை" தோன்றும். இத் தத்துவம் பரவெளியிற் சுத்த சிவமான முழுமுதற் பொருள், ஆன்மாக்களில் கொண்ட கருணையால் அயல்நிலைப்படும் போது, அஃது சுத்த ஞான ரூபியாய்க் காரியத்திற் காரியமாகிறது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. அந்த ஞானத்தை ஆன்மாக்கள் ஆளும்போது அந்த ஞான வடிவமாகவே அவைகளுக்குக் காட்சியாகிறது என்றவ் ஞானத்திற்கு ஏற்றம் ஏற்பட அத்தத்துவம் கொள்ளப்பட்டது, தத்துவ முறையான மூர்த்தங்களில் இந்த ஞான மூர்த்த தத்துவமே சொரூபமாகவும், தடத்தமாகவும் அமையும்.

இதனுலேயே அஃது அருவம், அருவுருவம், உருவம் என்பதற்குள் அடங்கா மையும் ஓர்க. வித்தை வெண்மையாய்க் குறித்தல் மரபாதலின் வெண்மை சுத்த வித்தையின் சொரூபமாம். இத்தத்துவம் வெள்ளைக்குள்ள விண்மீனுக அமையும்.

இனி, வெள்ளைக்குள்ள விண்மீன்கோளம் காலகதியில் ஒருகால் வெண் மையிழந்து இருளாய்க் கறுப்புநிறக் கோளமாக அமையும். இந்தக் கோள ஆய்வில், இக்கோளம் சுழற்சியால் மின்னும் ஒளியை அதிகரித்தும், குறைத் தும் வருவதான மாற்றத்தைச் செய்யும் என்று மேலை விஞ்ஞானிகள் உரைத்துள்ளனர். இத்தகைய விண்மீன் இரட்டை விண்மீன் எனவும் தேர்ந் துள்ளனர். ஒளியினை மறைப்பும் வெளிப்பும் பெறச்செய்தலால் அதனைக் கிரகண இரட்டை விண்மீன் என்ற பெயர் கொடுத்துள்ளரென்க. இந்த விண்மீனை "மாயை" என்ற தத்துவத்தோடு ஒப்புறுதல் செய்யலாம். கருமை விண்மீன், வெண்மை விண்மீன் என்ற இரட்டை நிலையை முறையே திரோதான சத்திக்கும், பரிக்கிரக சத்திக்கும் சொல்லலாம். வெண்மீனில் வெண்மை மறைந்து கருமை தோன்றியது போலச் சத்தியின் ஆதி (சுத்தம்) நிலை மறைந்து, அயலிடத்தால் அசுத்தமாக வெளிப்படலாம். வெண் மீன் கருமீனின் சுழற்சியால் கருவெண் மீனுக வேருகி, அக்கருமையும் நிலை யற்றது போலச் சிவத்தின் சத்தியும், ஐந்தொழிற் காரணமாக நிறைகிரியா சத்தியாக அமைந்து, அச்சிவத்திற்கு வேண்டுமிடத்து உதவுதலால் அக் கிரியைத்தொழிலும் நிலையற்றதாம் என்று அவ் ஒப்புமையை ஓர்க. பரிக்கிரக சத்தி மாயா சத்தியாம். மாயாசத்தி கருவெண் விண்மீன்போலச் சுத்தம் அசுத்தம் என்று பெறும் ஒற்றுமையுங் காண்க. கருமை-அசுத்தம். வெண்மை- சுத்தம. கருமை வெண்மையிற் படர்ந்து மயங்கிய போல, அசுத்தம் பிரகிருதி யிற்படர்ந்து மயங்குறுதலுக்கொப்பாகும். இவ்வாறு பரவெளியின் ஒளிவிளக்க மும் அறிவொளியின் தத்துவ விளக்கமும் ஒப்புமையாதலை ஆன்றோர் இன்னும்ஆய்வாராக. இன்னும்; பொருள் முதலும், கருத்து முதலும் இங்கு ஒப்பாதலும் காண்க.

நிற்க, பரசிவமாம் சுத்தசிவம் என்ற செம்பொருள், இங்ஙனம் கீழ்முகப் பட்டு "ஈசத்" துவம் வரை நிலையுறும் பெரும் ஒழுகலாற்றைச் "சிறப்பு' என்றே தமிழ்ஞானிகள் செப்பியுள்ளனர். அவ்வாறு அவர்கள் அறைந்ததின் காரணம், முழுநிறைவுள்ள பொருள் எம்முகப் பட்டாலும் அம்முகத்தில் தன்னிறையியலில் இடமியும் மாருத் தன்மைத்தென்றது பொருள் ஞான விளக்கத்தால் என்க. எனவே; பொருளும், பொருள்நிலையும் ஒன்ருக எண் ணிப் பரசிவப் பொருளின் இலக்கணத்தில் பேதுறுதல் குற்றமாகும்.

# வானப்பொருள்.

## காலத்தோற்றம் : காலக்கடவுள்

உள்பொருளாம் துகளாவியைக் கொண்ட வெளியானது பரத்தல் பொருண்மையான வெண்புகையால் வெள்வெளி யாயிற்று. அந்த வெண் புகையின் பேராவியற்கை இயல்புமிகுதி, மையப் புள்ளியாக அதனைச் சுற்றி அவ்வெண்புகை சூழ்ந்து கொண்டது. இதுவே காலப்பொருளின் மூலக்குறி என்க. மையப் புள்ளியைச் சுற்றியிருந்த வாயுள் சிறிது அடர்த்தி யுள்ளதாய் இருந்தது. அவ்வடர்த்தி அவ்வாயுட்களை இறுகச் செய்தது. அந்த மைப்புள்ளியின் எல்லாப் பக்கங்களிலும் மலிந்த ஈர்ப்பு வேகத் தால் அவ்வாயுட்கள் அவற்றைச் சுற்றிப் பெரும் பந்துருவத்தில் வாயுட் திவலைகளாகத் திரண்டன. துகளாவி துளிநீராகச் சிறந்ததையே அறிஞர் வாயுட் திவலை என்றனர். இதுவே, கால் + அம் = “காலம்” என்ற சொல்லின் விகுதியான “அம்” என்ற உறுப்பின் பொருட்செய்தியாம். மையப்புள்ளியான மைப்புள்ளி, அச்சொல்லின் பகுதியுறுப்பான “கால்” என்பதன் செய்திக்கு அமையும். துகளாவியின் மையியல் மையப்புள்ளி யாய் வெள்வெளியிற் கால்கொண்டு வாயுட் திவலைகளாகத் தலைப்பட் டதே “காலம்” என்ற சொல்லின் பௌதிகச் செய்தியாம். அந்த மைய மான மைப்புள்ளியும், அதன் பந்தருவான வட்டத்தையும் நமது சிவ தத்துவம் “விந்து” என்று குறித்துள்ளது. காரண முறையான பரபிந்து அசைதல் காரணமாகப் பரவெளிக்கண் பரநாதமெனத் தோன்றுங்கால் அப்புள்ளி விருத்தியுறுதலையும், அந்த விருத்தியியல் சுத்தமாயையாம் பரவிந்தாய்க் காரிய முறையாகப் பொருந்துமிடத்து, நாதத்தை எழுப்பி வானில் பரவுங்கால், அது வட்ட வடிவு பெறுதலையே நம் சித்தாந்தி கள் “அபரவிந்து” என்றுரர்கள். அதாவது, ஒளிக்கருவின் ஏறுநிலையில் ஏற்படும் பரபிந்தே (ஒளி) பரநாதத்தின் (ஒளியோசை) மூலம் கால பொருளைக் கருவாக்கிறது. அக் காலக் கருவானது அவ்வொளிக் கருவில் இறங்கு நிலையிற் சுத்தமாயைத் தொடர்பால் ஏற்படும் நாதத்திலே உரு வம் பெற்றுப் பரவிந்துத் தத்துவத்தால் காலக்குழந்தை என்ற பொருள் பிறக்கிறதாகத் தெளிதல் வேண்டும். காலப்பொருளோ முதலும் ஈறும் விந்தகாவும், நடுவு நாதமாகவும் உள்ளார்ந்த பொருளாய் அமைந்து காட்சிப்பட்ட தென்றுணர்க. இந்த விளக்கத்தாலேயே சித்தாந்திகள் விந்து தத்துவமே காலத்தை நடத்துவது என்றுரர்கள்.

பராபரையின் ஆற்றல் காரணமுறை நிலையிற் பரபிந்தென்று பாயுஞ் சத்தியாயும், காரியமுறை நிலையில் அதுவே பரவிந்தென்று தாங்குஞ் சத்தியாயும், அமைவதால் பரபிந்துவின் சற்காரியமே "காலம்" என்று பொருளாயிற்று. இதனை இன்னொரு வகையாகக் கூறின், சத்தி தன் யாற்றலில் சிறப்பு என்பதாம். தத்துவ மொழியிற் சொல்லின், மிகுந்த ஆதிசத்தியின் இயக்கப் பொருளே காலம் என்பது.

காலமானது; பொருள் நிலையிற் சத்தியாயும், பொருட் தத்துவ நிலையில் சத்தாயும் அமையும். காரியமுறை வெளியில் உள்ள சிவப்புக்குள்ள விண்மீனாகிய சிவஒளியின் கதிர், வெள்ளை – கறுப்பு விண்மீன் கோளங்களின் ஊடே பொருந்திக் காரியவெளிப் பொருளாய் வெளிப்படும் போது காலத்தத்துவமாகப் பரிணமிக்கிறது. இங்கே வெள்ளைக்கோளம் மாயையின் ஒளி (சுத்த)ப் பகுதியையும், கறுப்புக்கோளம் அதன் இருட் (அசுத்தம – பிரகிருதி) பகுதியையும் குறிப்பதாகும். காலத்தத்துவம் ஒளிப்பொருளில் பொழுதாகி, ஒளியிருளிற் பெரும்பொழுது - சிறுபொழுது என்று வகைப்பட்டுத் தன்னைப் புலப்படுத்தும். புலர்ந்த காலமோ நுண்மையாய்ப் பொழுதெனப் பொதுநிலைப் பட்டும், ஒளியிருளிற் பருமையாய்ச் சிறுபொழுது, பெரும்பொழுது எனச் சிறப்பு நிலைப்பட்டும் அமையும். பொதுநிலையைக் காலத்தின் சொரூபம் என்றும், சிறப்புநிலையை அதன் தடத்தம் என்றும் எண்ணலாம். எனவே காலத்தின் உட்பொருள் ஒளியாயும், வெளிப்பொருள் இருளாயும் கொண்ட ஒரு பொருள் என்பது பெற்றும். வெளிப்பொருள் இருளெனவே காலம் காட்சியளவில் கரும்பொருளா யிற்று. இதனைக் "காலம்" என்ற சொல் காட்டும். கால் + அம் = காலம் என்று பகுக்கப்படும். கால் – கருமையாம். அம் - தொழிற்பெயர் விகுதி. சிவசுந்திரானது காரொளி (அசுத்தமாயை) யான இடப்பொருளில் இருந்து தெறித்துப் பரவெளியைக் கருமை (இருள்மை) யாக்கிப் படர்வதால், இருள்மையான பரவெளியே காலத் தத்துவப்பொருள் என்று நாம் தேறும் தன்மையில் அச்சொற்பாகுபாடு அமைந்த தென்க. சிவப்புக் குள்ளவிண் மீனான சிவஒளியின் கதிரையே நம் தத்துவநெறிஞர் காலதத்துவத்தை நடாத்தும் "காலநாத்மர்" என்று பெயர் சூட்டினர். இதன் பொருள் காலத்தை இயக்குபவர் என்பதாம். இந்தச் சொல்லில் உள்ள "நாத்" என் பது "அசைதல்" என்ற கருத்துடையது. நாதம் என்ற சொல்லின் பகுதி யும் இதுவேயாம். நாம் முன்னர் விளக்கியவாறு போலக் காலம் முதலும் ஈறும் விந்தாக, இவைகளை நடுநின்று அசைதல் செய்பவர் நாதம் (சிவம்) என்ற தத்துவமாம். இதனையே அந்நெறியர் தெளிந்து "காலநாத்மர்" என்று கூறினர். காலப்பொருளில் வரும் முதற்பிந்து இறந்த கால மாகும். இறுதிவரும் விந்து எதிர்காலமாகும். நடுநின்ற நாதம் நிகழ்காலமா கும் என்று காலம் காரியப்படுகையில் முக்காலமாகக் கூறுபடும் தத்துவத்தை ஈண்டு நினைவு கொள்ளுதல் நலமன்றோ. இறப்பும் எதிர்வும் நமக்குப்

புலனுகாதவை. இவைகளின் இடைநின்ற "நிகழ்வும்" அவைகளின் இயலாற்றலால் முன்னறியப்படாது போகிறது. எனவே, காலக்கூறுகள் மறையாகவே, அக்கூற்றின் முதலும் மறையாயிற்று. இதனுலேயே காலம் அருவப் பொருளாயிற்று. அருவப் பொருளானுலும் காலம் என்ற பொருளின் இயல்புண்மை நமக்கு உள்ளதாய் உணரப்படுதலின் உருவமாயிற்று. எனவே, காலப்பொருள் அருவுருவம் என்பது தெளிவாயிற்று. காலதத்துவம் எல்லா அண்டங்களுக்கும், அவைகளில் வாழும் எல்லா ஆன்மாக்களும் உண்டாகிய தொழிலை எழுப்பித்து நிற்கிற ஒரு கிரியைத் தத்துவமாகும். எனவே, "செலுத்துதல்" என்ற கருத்துறும் கடவுள் என்ற சொற்பொருளாகக் கருதி ஆன்ருேர் காலத்தையும் கடவுள் என்றும் பாவனை பண்ணினர் என்க.

இனி, காலதத்துவத்திற்கு வண்ணம் கூறவந்த தத்துவப் பெரியர், "வெண்மை, செம்மை, கருமை" என்ற மூன்றினையும் ஒருமித்துக் கூறியுள்ளனர். இந்த வண்ணச் செய்திக் கேற்ப விண்கோளங்களையும், அதற்குரிய தெய்வத்தத்துவங்களையும் ஒப்பிட்டுக் காலத்தோற்றவியலை இன்னும் தெளிவாக்கிக் கொள்ளலாம். இங்கு வெண்மை என்றது; நீலவெண் கோளத்தில் உள்ள பரசிவப் பொருளான வெள்ளொளி என்க. செம்மை என்றது, அப்பரசிவப் பொருள் தடத்தமான சிவப்புக்குள்ள விண்மீனிற் சுட்டிய அதிகாரசிவத்தின் செவ்வொளியாம். கருமை என்றது, பரசிவவொளியின் தடத்தமான சிவப்புக்குள்ள விண்மீன் வெள்ளைக் கோளமாகவும், இவற்றுள் சில காலப்போக்கில் கறுப்புநிற மீனுகவும் அடையும் என்ற கறுப்புநிற விண்மீனைக் குறிக்கும்; இது காரிய மாயையாகும்; இந்த மாயையிலேயே காலப்பொருள் கருமைப்பொருளாய்த் தத்துவக் காட்சிப்படுதலைக் குறித்தது.

## காலப்பொருள்.

### கதிப்பொருள் : ஒளிக்கோளம்

வானத்தில் விண்மீன்களாக விளங்கும் ஒளிக்கோளங்கள் சில நீலமாயும், சில வெண்மையாயும், சில மஞ்சளாயும், சில சிவப்பாயும், இருக்கின்றன. ஒளி நிறத்தைக் கொண்டு விண்மீன்களின் மேற்பரப்பின் வெப்பத்தை வான் ஆய்வாளர் கண்டு கொண்டுள்ளனர். அதிநீல வெண்மை, நீல வெண்மை, வெண்மை, மஞ்சள் கலந்த வெண்மை, மஞ்சள் கலந்தகிச்சிலி, கிச்சிலி கலந்த சிவப்பு, சிவப்பு முதலான ஒளிக் கோளத்தின் நிறங்கள் அதன் மேற்பரப்பின் வெப்பநிலையை இறங்கு முக நோக்கில் வகைப்படுத்திக் காட்டுவனவாகும். அதிநீலவெண்மை வெப்பம்

மிகுந்தது. சிவப்பு வெப்பம் மிகக் குறைந்தது என்று தெளிக. நமது இன்றைய சூரியன் மஞ்சள் நிறவொளியுடையது. இஃது ஒளிக்கோளத்தின் நடுப்பருவமாகும். அந்த ஒளிக்கோளமான கதிரோன் காலக்கதியினை உணர்த்தும் கருவியாக நமக்கு அமைந்தது. பிருதிவி என்ற பூவுலகத்தோடு அஃது இயைந்தது. அப்பிருதிவியுலகம் எவ்வாறு விருத்தி யாயிற்று என்பதை இனி நோக்குவோம்.

சிவப்பு இராட்சத விண்மீன் கோளமாகிய பராபரம் கிச்சிலி வண்ணக் கோளமாம் பராபரை மூலம் மஞ்சள் நிறவொளிக்கோளம் என்ற பரவிந்தை உன்னுவர். உன்னவே அஃது, ஒளிக்குறியாய் வெளியிடத்தில் விளங்கும். அவ்வொளிக்குறி அவ் உன்னலின் ஆற்றலியக்கத்தால் மேலும் சிறந்து ஒளிவண்ண ஒலியாய் - பரநாதமாய் அமையும். எனவே பரநாதம் நுண்ணொளி வண்ணத்தின் அசைஒலியெனத் தேர்க, அதாவது ஒளியுடன் கூடிய நுண்ணொலி என்க. இந்த நுண்மையான ஒளியினது ஒலியசைவு பரவெளி உச்சியில் ஏற்றத்தாழ்வு அற்று நடுநிலையாய்-சமநிலையாய்-மூலப்பொருளாய்ச் சமைகிறது. அதாவது பரசிவமாய்- என்றுமுள்ள சிவமாய் வடிவம் கொள்கிறதென்பதாம். அருவமான பொன்னொளி, நீலநிறவொளியாக உருவெடுத்து நீலவெண்ணொளியாக அருவுருவம் கொண்டதெனத் தெளிக. பராபரையின் நிலைக்களமாகப் பரவிந்து (ஒளி) அமையவே, பரநாதம் என்ற ஒளியோசையாகப் பராபரையின் ஆற்றல் பொருளாக அதிலுறுகிறது. ஓசை ரூபமான ஒளி, (நீலம்) பரவிந்தாம் துளியொளி (மஞ்சள்) ரூபத்தில் படியும்போது அவ்விரு வொளிமயக்கில் நீலமஞ்சளாகி முக்கோண வடிவாய்ப் புலப்படும் என்பர். இதனால் பராபரையின் ஆற்றலைத் திரிபுரை என்று திகழ்பெயரைத் தியானிகள் சூட்டினர். நீலம், மஞ்சளாக இயைபு உற்றது மஞ்சளின் துணை நிறமாக அமையுமென்ற நிறத்தின் விஞ்ஞானம் போலத் திரிபுரசுந்தரியும் பாராபரையின் துணையருளாகத் தேறலராம், எனவே பராபரையின் அகவொளி பரபிந்தாயும், புறவொளி பரநாதமாயும், அவ்விரு ஒளியின் இணைத்திரட்சியே திரிபுரைசுந்தரி என்க. இதுவே விஞ்ஞானிகள் துகளாவிகள் நீர்த்திவலைகளாக மாறின என்ற செய்திக்கு ஒப்பாகும், இதில் துகளாவி பரவிந்தாம். வெண்புகை பரநாதமாம். வாயுட்திவலைகள் திரிபுரையாம். இன்னும் பரவிந்து மின்ஒளி யாகவும் - பாயுஞ் சத்தியாகவும், பரநாதம் மின்ஒலி யாகவும் தாங்குஞ் சக்தியாகவும், இவைகளின் பொருள் வடிவான திரிபுரை வாங்குஞ் சக்தியாகவும் எண்ணலாம். இந்த வாங்குஞ் சத்தியைச் சிவசாக்கியமாகவும் நேரலாம். திரிபுரையான பரை என்ற ஆதிசத்தி முதற்கண் தாங்குங் சக்தியாகிய பரநாதத்தைக் காரியமுறை வெளியாம் புறத்தே வெளிப்படுத்துகிறது. இப்புறவெளி - காரியவெளி பரையியலாகச் சமைக்கப்படுதலின் பரைவெளி எனப்படும். எனவே ஆதிசத்தியாம் பரைக்குக் காரணமுறை வெளி அகவெளி—பரவெளி என்றமைதல் முறையாமென்க. பரவெளியாம் அகவெளியும்

தாங்கும் சத்தியான பரநாதம் பரைவெளியாம் புறவெளியில் வெளிப்பட்டு நிலையுறுங்கால் அது பாயுஞ் சத்தியாக மறுநிலைப்படுகிறது. இந்தப் பாயுஞ் சத்தியைத் தாங்குஞ் சத்தியாகச் சால்புறுவதையே நாதத்திலிருந்து விந்து தோன்றும் என்று நம் காரிய தத்துவம் கூறும். இதனையே விஞ்ஞானிகள் வெண்மேகம் அல்லது ஒளிக்கரு என்பர். இந்த விந்தென்ற வெண்மேகத்தில் ஆதாரவாதேய மாக ஒளியும், ஒலியும் தத்துவக் கருவாகக் கருதலாம். இது போழ்தே "வான்" என்ற மாகாயம் தோற்றமாகிக் காலம் என்ற தத்துவமும் கொள்கிறது.

மாகாயத்தின் ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற நுண்மை ஐந்து தோன்றும். நுண்மை - தன்மாத்திரை. அதனதன் அளவில் அடங்கியிருப்பதையே தன்மாத்திரை எனப்படுவது. மரத்தின் வடிவமெல்லாம் சக்தி ரூபமாக வித்திலடங்கி யிருப்பதுபோல, ஐந்து பெரும் பொருள்களின் குணங்கள் எல்லாவற்றையயும் சக்தி வடிவில் வெளியே தெரியாது அதனதன் அளவில் அடங்கியிருப்பதே தன்மாத்திரையாம். எனவே ஐம்பூதங்களும் ஐந்து தன்மாத்திரைகளின் நின்றுந் தனித்தனி தோன்றுவன என்றுயிற்று. ஒரு பூதத்திலிருந்து மற்றொரு பூதம் தோன்றுவதன்று. அங்ஙனம் தோன்றுவனவாகச் சொல்வது ஏற்றுரையாகும். ஏற்றுரை – உபசாரம். வானத்திலிருந்து காற்றுத் தோன்றும் என்பதற்குரிய விளக்கம் காற்றினிடத்து அதன் இயற்கைப் பண்பாகிய ஊறுமட்டுமன்றிச் செயற்கையாகிய வானத்தின் பண்பாம் ஓசையும் விரவியிருப்பதால் அச்சிறப்புநோக்கி வானத்தில் இருந்து காற்றுத் தோன்றிற்று என்பதாம். உண்மையாக நோக்குவார்க்குக் காற்று ஊற்றுத் தன்மாத்திரையின் நின்று தோன்றும் என்பதே வாய்ப்புடைத்தாம். எனவே ஓசையில் மாகாயமாகியவான் அமையும். ஊற்றால் – காற்றமையும். ஒளியால் - தீ அமையும் சுவையால் நீர் அமையும், நாற்றத்தால் - நிலமமையும். இவைகள் எல்லாம் அதனதன் காரியங்கள். ஓசை - காரணம், வான் - அதன் காரியம் என்று விளங்கிக்கொள்ளல் வேண்டும். இந்தக் காரணமும் காரியமும் அசுத்தமாயையின் காரியமாகிய மூலப்பகுதியின் காரியப்பாடுகள் என்க இந்த ஓசை முதலான காரணத்தில் அமைந்த காரியப் பொருளான வானம், காற்று முதலானவற்றில் முன் விளக்கியவாறுபோல, இயற்கைப் பண்பும் செயற்கைப் பண்பும் மயங்கியிருக்கும். வானம் - ஓசை என்ற ஒரு குணம் உடையது. காற்று - சத்தம் என்ற இயற்கையையும், பரிசம் என்ற செயற்கையுமான இரண்டு குணமுடையது. தீ - சத்தம், பரிசம் என்ற செயற்கைக் குணங்களோடு உருவம் என்ற இயற்கைக் குணம் உடையது. நீர் - சத்தம், பரிசம், உருவம் என்ற செயற்கைக் குணத்தோடு சுவை என்ற இயற்கைக் குணமுடையது. நிலம் - சத்தம், பரிசம், உருவம், சுவை என்ற செயற்கைக் குணத்தோடு நாற்றம் என்ற இயற்கைக் குணமுடையது எனத் தெளிக. இத்தகு விளக்க முறையால் பரைவெளியில் பரம்

பொருள் உலக நிலையில் பதியாக எவ்வாறு எழில் பெறுகிறது என்பதை யும் உணரலாம். **நாதம் என்ற** சிவதத்துவம் **அகண்டம்** என்ற பொரு ளில் வானுகியும், **அண்டம்** என்ற பொருளில் வானமாகியும் அமைகிறது. வான் வெண்புகையாம் வெண்மேகத்தாலும், வானம் கரும்புகையாம் கார் மேகத்தாலும் விளக்கம் அடையும். எனவே காலக்கதிப் பொருளின் வெளி வெண்மேகத்தாலும் கார்மேகத்தாலும் திரண்டு முழுமை பெறுகிற தென்பதாம்.

காலமென்பது, விந்து தத்துவத்தால் நடாத்தப்படும். இஃது அருவ மான பொருள். இப்பொருளை எவ்வாறு உள்ளதன்மையாகக் கொள்ளலாம் எனின் நமது புலனுணர்வால் உணரலாமே ஒழிய வேறு எதனுலும் உணரக் கூடியதன்று. திருவள்ளுவர் இக்கருத்தை "நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும் வாள் அது உணர்வார்ப் பெறின்" (குறள் 334) என்று குறள் வெண்பாவில் கூறியுள்ளார். இக்குறளுக்கு உரைகண்ட பரிமேலழகர், காலம் என்னும் அருவப்பொருள் உலகியலை நடத்தற் பொருட்டு ஆதித்தன் முத லிய அளவைகளால் கூறப்பட்டதாக வழங்கப்படுவதல்லது தானுகக் கூறு படாமையின் 'நாள் என ஒன்றுபோலக் காட்டி" என்றார் திரு வள்ளுவர் என்று உருவவிளக்கம் தந்தமையும் ஈண்டு உன்னற்பாலது. இதனை நாலடி யாரில்

"தோற்றம்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்றம் அளந்துநும் நாள் உண்ணும்" (நாலடி: 7)

என்றும்;

வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாது எழுதலால்— — — (நாலடி: 22)

என்றும் தமிழ்ச் சான்றேர் கூறியுள்ளனர். கதிரவனே தனது இயக்கத்தால் உலகத்தின் கால அளவையும், அக்கதிரவனையே அளக்கும் கருவியாகக் கொண்டு, கூற்றுவன் ஆன்மாக்களின் காலக்கழிவை நமக்கு உணர வைப் பதையும் நாலடியாரின் பாப்பகுதிகள் தெளிவாகின்றன. எனவே காலம் என்னும் பொருள் உணர்வுப் பொருளாய் உறுதலின் அவற்றை நியதிப் படுத்தற்குக் கலைக்கருவியாக ஆதித்தன் அமைவதால் நமக்குக் காலம் பொருளைக் காணும் கண்ணுடியாய் உள்ளவன் அவனென்க. அவனே வயங்கொளி மண்டலத்திக் அதிபதியாம். இம்மண்டலத்தின் புவனம் புவர் உலகம். இது பூமண்டலத்திலிருந்து ஓரிலட்சம் யோசனையில் உள்ளதென் பர். இவ்வாறு காலத்தில் புவர், பூமி என இரண்டு புவனங்கள் முறையே வெண்மேகமான ஒளிக்கருவாலும், கார்மேகமான ஒலிக்கருவாலும் சிறப்புப் பகுதியாகச் சீருற்று விளக்கம் அடைகின்றன. இதிலும் புவர் உலகமே காலக்கதிப் பொருளுக்கு—ஒளிக்கோளங்களுக்குச் சிறப்பிடமாகும். இந்த

ஒளியுலகத்தின் தாக்கமே பூவுலகத்தை ஆட்கொள்கின்றது. எனவே கால தத்துவம் இவ்விரு புவனங்களுக்கும் உரிய சிறப்புப் பொருள் என்க.

## கதிர்ப்பொருள்: வெண்ணொளிக் கோளம்.

காலத்தைத் தனது கதியால் பொருளாக உணரவைப்பவன் கதிரோன் ஆதலின் அவனைக் காலக்கதிப் பொருள் என்றோம். கதித்த கதிர்களையுடைய பொருளே கதிரவன் என்க. ஆதிசத்தியின் பொருள் சுத்த சிவம். அந்தச் சுத்தசிவமாக ஆதித்த மண்டல அதிபதியாம் கதிரோனை ஞானிகள் பாவனை பண்ணுவார்கள். விண்ணுலக வீச்சால் விளங்கிய விண்மீன்களிலொன்றே கதிரோனான சூரியன். வான்மண்டலம் போல வானமண்டலம் குளிர்ச்சி மிக்க தல்ல. சுயமாக ஒளியுறும் வெண்ணொளிக் கோளங்களால் அது வெப்பமுடையதாயிற்று. அந்த வெண்ணொளிக் கோளங்களில் ஒன்றான நாள்மீனான சூரிய கோளத்தின் நடுப்பகுதி கற்பனைக் கெட்டாவகையில் வெப்பமுடையது. இதனால் இதனிடத்துப் பொருள்களும் ஆவி நிலையிலேயே இருக்கின்றன. சூரியகோளம் வெப்பஆவிகளின் பிண்டமாகத்தான் இருந்தது. சூரியனின் ஆவிகள் அதனிடத்துள்ள கொடூர வெப்பத்தால் வெகுவாகப் பெருக்க மடையும் போது, அவ்வாயுக்களின் அமுக்கமும் எல்லை மிகுந்து நெருக்கமாகி விடுகின்றது. அதன் விளைவாகச் சூரியனின் அடர்த்தி அத்தனைக் கத்தனை அதிகரித்து விடுகின்றது. இந்த அடர்த்தி அதனின் மையப்புள்ளி நோக்கிச் செல்லச் செல்ல இன்னும் அதிகரித்துக்கொண்டே போகும். இவ்வாறு சூரியனில் உள்ள அக ஆவிகளைச் சூழ்ந்து கொண்டு அடைத்து வைத்திருக்கும் பொருள் சூரியனின் மேற்பரப்பிலுள்ள ஆவியாகும். மேற்பரப்பின் ஆவிகளுக்கு இயற்கையாக ஒன்றையொன்று கவருஞ் சத்தி இவற்றைச் சிதற விடாமலும் கோளத்தினுள் அமுக்கம் குன்றாதபடியும் பாதுகாப்பு செய்கிறது. இந்தப் புதுமையான ஆவிமதில் கோளத்தினுள்ளே சுருக்க விரிவுகளுக்கேற்ப விரிந்தும் சுருங்கியும் போகும் இயல்பு உடையது. இஃது இயற்கையின் புதுமைத் திறன்களில் ஒன்றாகும்.

சூரியகோளத்தில் மூலங்களின் அணுக்கள் சிதைவுறும்போது ஏற்படும் வெப்பம், சிதைந்த அணுக்கள் ஒன்று சேர்ந்து புதுமூலங்களாக இயைவதற்குப் பயன்படுகிறது. அவ்வாறு சிதைந்த அணுக்கள் ஒன்று சேர்ந்து அமையும் போது, இன்னும் பல மடங்கு அதிகமான சத்தி வெளிப்படுகிறது. இந்த வகையான அணுச்சிதைவும் அணுச்சேர்க்கையும் சூரிய கோளத்தில் ஏற்பட்டுக் கொண்டிருப்பதால்தான் நமக்குச் சூரியனிடம் இருந்து நிலையான சக்தி வெப்பமாயும் வெளிச்சமாயும் இடையறாது கிடைத்துக் கொண்டிருக்கிறது. இதனை இன்னும் சிறிது விரிக்கின் சூரியனுடைய கொடூர வெப்பத்தில் நீர் வாயுவின் அணுக்கள் சிதைந்து

மறுபடியும் ஒன்று கூடி "கீலியம்" என்ற வாயு அணுக்களாக மாறி விடுகின்றன. அப்போது நீர்வாயுஅணுக்களின் ஒருபகுதி சக்தியாக வெளிப்படுகின்றது. அந்த சக்திதான் சூரியவெளிச்சமாகவும் சூரிய வெப்பமாகவும் பூமியை அடைகிறது. இதுவே வாழும் உயிரின் "வாழ்நாட்கு அலகா வயங்கொளி மண்டிலம் வீழ்நாள் படாது" எழுகின்ற திறனின் விஞ்ஞானச் செய்தியாகும்.

## கதிர்மண்டலப் பொருள்: காரொளிக் கோளம்

காலக்கதிர் மண்டலப் பொருள்கள் பூமண்டலத்திற்கு மேற்கண் உள்ள புவர் உலகத்திற்குரிய பொருள்களாகும். அப்புவர் உலகத்தில் முதற்கண் ஆதித்த மண்டலம் அமையும். இதுவே புவியின் கோளத்தில் இருந்து ஓரிலட்சம் யோசனை உயரத்தில் உள்ளது. அதனுள் மேகப்பகுதியும், வாயுப் பகுதியும் அடங்கும். அவ்வாயுப் பகுதியைப் பத்துக்கூறுகளாக்கிப் பகர்வர். ஆதித்த மண்டலத்தின்மேல் சந்திர மண்டலமும், அதன்மேல் விண்மீன் மண்டலமும் முறையே உயர்ந்துள்ளது என்பர். இதில் விஞ்ஞானிகள் சந்திர மண்டலம் சூரியனுக்குக் கீழ்முகப்பட்டதென்பர். மேற்கூறிய உயர்நிலைகளுக்குப் பின்பே, கோள்கள் என்ற புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி என்றவைகள் முறையே உயர்ந்து மண்டலப் பகுதியாக இருக்கும் என்பர். இன்னும், சனிப்பகுதி உயர் நிலைக்குமுன் சப்தவிருடிகள், துருவம் என்ற பகுதிகள் ஒன்றின் முன் ஒன்ருய் உயர்ந்து நிலைக்கும் என்பர். இப்புவர் உலகத்திற்கு உருத்திரன் அதிபதியாய் அமைவர்.

வானவெளியில் சூரியனைவிடப் பெரிய பெரிய நாள்மீன்கள் மின்னிய போதிலும், பூமியில் வாழும் நமக்குக் கதிரோனுகிய சூரியனே சிறந்தது. இந்தப் பூமிக்குத் தனது சக்தியின் ஒரு பகுதியாகிய வெளிச்சத்தையும், வெப்பத்தையும் கொடுத்து நம்மையும் மற்றச் சீவவர்க்கங்களையும் வாழச்செய்யும் அன்னையே சூரியன். தனது மற்றக் கார்க்கோளங்களாம் கிரகக் குழந்தைகள் மீது தனது தாயன்பாம் ஒளிச் சத்தியை வீசி அவர்கள் அனைவரையும் வானத்தில் ஒளியை வீசும் வெளிச்சப் பொருள் ஆக்குகிருள் சூரியத்தாய்.

சூரியன் பூமியிலிருந்து ஏறக்குறைய ஒன்பது கோடிமைல் எல்லையில் இருக்கிறது. இவ்வளவு எல்லையில் சூரியன் இருந்தாலும் அதன் அக்கினியில் வானத்தின் குளிர்நிலை குன்றுவதில்லை, குறைவதில்லை. எனினும் குளிர்அரக்கன் சூரியனின் தீமுன் நிற்க நடுங்குவன். வானவெளியில் திடீரென ஓர் ஒளிக்கோளம் புதிதாகத் தோன்றுகின்றது. இக்கோளம் சூரிய கோளத்திலும் பெரியது. இதுதன் கதிவிசையாற் தட்டுத் தடுமாறி

சூரிய கோளத்தை அண்மிக்கிறது. அப்போது இவ்விரு கோளங்களின் ஈர்ப்புச் சக்திகள் நேர்படுகின்றன. புதிய விண்மீனிடம் இருந்து கிளம்பிய பொருள்களும் முட்டிமோதிக் கொள்ளுகின்றன. சூரியனின் கதுவற் கனலில் அவையெல்லாம் ஆவிநிலையை அடைந்துவிடுகின்றன. சூரியன் தன்னைத்தானே வெகு வேகமாகச் சுற்றுஞ் சுழற்சி விசையால் அந்த ஆவிப் பொருள்கள் சிறிது சிறிதாகச் சூரியனை விட்டுச் சேண்மைப் படுகின்றன. சூரியனை விட்டுச் சேண்மைப்பட்டுச் செல்லும்போது வான வெளியின் குளிர்ச்சி அவ்ஆவிப் பொருளைப் இறுக்கத் தொடங்குகின்றது. அதனால் அந்த வாயுட் பொருள்கள் நெருங்கிப் பல உருண்டை வடிவங்களாக உருவெடுக்கின்றன. அந்த உருண்டை வடிவங்களில் சில சிறியவையாகவும், சில பெரியவையாகவும் ஏற்பட்டு விடுகின்றன. அந்த உருண்டைகள், கனதிக்குத் தக்கவாறு சூரியனிடம் இருந்து அப்பாற் சென்று கொண்டிருக்கும், இந்தச் செல்கையில் வேகம் குறையும் அமையத்தில், சூரியனின் ஈர்ப்புச் சக்தி அக்கோளங்களை இழுத்துப் பிடித்துக்கொள்ளுகிறது. இதனாலேயே இக்கோளங்கள் - "கோள்" எனப் பட்டன, தன்னைச் சுற்றி வளைந்து வருதற்குக் கொள்ளுதலால் "கோள்" எனப்பட்டதென்க. குள்-கொள்-கொள்ளுதலாம். வளைந்து சுழன்று கொள்ளுதல் உற்றதால் கோளாயிற்று. ஆவியியலில் உருண்டைகளாகப் பரிணமித்த அந்தக் கோளங்கள், வானவெளியின் குளிர்ச்சியால் திரவ நிலையையடைந்து, பிறகு திடமான கெட்டிப் பொருளாகி விடுகின்றன. இவையே புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன், ப்ளுட்டோ என்று அழைக்கப்படும் கிரகங்களான கார்கோளங்களாம், இந்தக் கிரகங்களின் பிறப்புக்குக் காரணமாயிருந்த புதிய விண்மீன் காலப் போக்கில் தன் இயற்கையின்படி ஒளியிழந்து புலப்படாத கறுப்பு விண் மீனாய் மறைநிலையாயிற்று. இந்த மறை நிலையான புது விண்மீனை நம் தத்துவ நெறியில், நாம் ஒப்ப வைத்து நோக்கின் மாயாகற்பத்தில் வசிக்கின்ற பிரளயாகலராகிய உருத்திரர்களில் முதல்வரான ஸ்ரீ கண்ட உருத்திர தேவர் என்க. இந்த ஸ்ரீ கண்ட உருத்திரதேவர் பிரகிருதி மாயா காரியத்தின் அதிகாரியாவர். அனததேவரின் அதிகாரத்தைப் பெற்ற ஸ்ரீ கண்டதேவர் "கலை" என்ற தத்துவத்தைக் கலக்க, மூலப்பிருகிருதி என்னும் மூலப் பகுதி தோன்றும். இந்தப் பகுதியின் ஒருகூறே சூரியனும் அதனையொட்டிய கிரகங்களுமான சூரியமண்டலம் என்ற காலமண்டலமாம். இதுவே பரவெளித் தத்துவத்தின் இறுதிநிலை வெளியாம்.

# நிறைவுரை.

## அசையொளி: பரவெளி.

பராபரமாய் வெளியிடம் இருக்கும் போது அதனை வெறுமை வெளி என்றேம். அவ்வெள் இடத்திற் பராபரம் பராபரையாகப் பொருளுற்ற போது அது "பராபரவெளி" என்று பெயர் பெற்றது. இந்தப் பராபரவெளி பரவெளி யானதும் இயற்கைநூல் அறிஞர் அதனை "வானி" என்றனர். வானம் என்பதைத் தனக்கு உடமையாகக் கொண்ட பொருளே வானி என்பது. வெளிமைப் பொருள் பராபரம். வெள்ளொளிப்புகையாம் பராபரை யின் அசை (சிறுதுளி) யே ஒளி (பரவிந்து) என்று கருதப்படும். இதுவே "வானி" எனப்படும். ஒளிப்புகையாம் வானியின் அசைவானது குறுக்கு அலைகளாக எழுகிறது. அக்குறுக்கலையோ சிற்றலையும் பேரலையும் ஆகவே அமைகிறது. இவை படிப்படியாக உயரும்; ஒரு தொடர்ச்சியாக இருக்கும் என்பர் வான்புலவோர். இந்த ஒளியமைப்புச் செய்தி, நமது பரவெளித் தத்துவத்தில் பரபிந்தென்பது பரவிந்தாக மலர்ச்சி பெற்றதன் நிகழ்வை விஞ்ஞான முறையாக விளங்கிக் கொள்ள உதவும். ஒளியின் மிகப் பேரலை களாய் உள்ளவை நமது கண்ணுக்குப் புலனுவதில்லை என்றும், இடை நின்ற அலைகளே நமது கண்களுக்குப் புலனுவது என்றும் ஒளியலையியற் கருத்து எடுத்துக் காட்டும். இதிற் பேரலையினைக் காரணப்பக்கத்துப் "பரபிந்து" ஆகவும், இடைநின்ற ஒளியலைக் காரியப்பக்கத்துப் பரவிந்து ஆகவும் நேரலாம். இன்னும்; வானியின் குறுக்கலைகள் பெரிது நீண்டும் நீளாதுமாகிய செய்தியைத் தனித்தனியான ஞானமும் கிரியையும், காரியமுறைப்பக்கத்தில் காரியத்திற் காரியமாகும் போது ஒன்று கூடியும் ஒன்று குறைந்தும் தத்துவமாகும் செய்திக்குப் பொருந்தும். வானலைகள் படிப்படியாக உயர்ந்து போதல் என்றது; பரவெளித்தத்துவத்தில் பரா பரமான பெரிய இராட்சத சிவப்பு விண்மீன் படிப்படியாக ஏறு நிலையிற் சிறந்து, பரநிலை யுச்சியிற் பரசிவமாய்ச் சொரூபப்பட்டதென்று நாம் கூறும் வகையில் நீலவெண்மீன் கோளமாக நின்றதைச் சுட்டியதாம். இவ்வாறு ஏறுநிலையாய் இறங்குநிலையாய் அசையும் ஒளி இயக்கத்தையே நாம் அசையொளி என்றேம். இதுவே பரவெளியாகியதும் என்க.

## அசைஒளியளவு: பரநிலைவெளி.

ஒளியலைகளை அளப்பதற்குச் சீர்கோலில் நூறுகோடியில் ஒரு பிரிவையே அளவைத் தனியன் (Unit) ஆகக் கொள்வர். ஆங்கிலேயர் ஒரு விரற் கடையை அங்குலம் அல்லது "இஞ்ச்"என்பர். 39·37 விரற்கடை நீளமுள் ளதே ஒரு சீர் கோலாகும். அதில் பத்தில் ஒரு பிரிவைக் கீழ் பத்துச்

சீர்கோல் என்றும், அதில் நூறில் ஒருபிரிவைக் கீழ்நூற்றுச் சீர்கோலென்றும், அதில் ஆயிரத்தில் ஒருபிரிவைக் கீழ் ஆயிரத்துச் சீர்கோல் என்றும், "கீழ்" என்ற அடைகொடுத்து வேறு பிரிப்பர். இந்தப் பத்து, நூறு, ஆயிரம் என்ற "கீழ்" அடையான அளவைச் செய்திகள் நம் சமய தத்துவத்திலும் அமைகின்றன. பராசத்தியின் ஆயிரத்தில் ஒரு கூற்றினின்று ஆதி சத்தியைப் பரசிவம் தோற்றுவிப்பர். அந்த ஆதிசத்தியின் ஆயிரத்தில் ஒருகூறு இச்சா சத்தியாம். இச்சா சத்தியில் ஆயிரத்தில் ஒருகூறு ஞானசத்தியாம். ஞானசத்தியில் ஆயிரத்தில் ஒருகூறு கிரியாசத்தியாம் என்று ஆயிரத்தில் ஒருகூறு அளவாகச் சத்திகள் அமைதல் காண்க. இவ்வாறே பத்திலொருகூறு அமூர்த்தி சாதாக்கியம். இச்சாதாக்கியத்தின் பத்திலொருகூறு மூர்த்தி சாதாக்கியம் என்று சாதாக்கிய முறையிலும், விந்துரூப சத்தியின் பத்தில் ஒரு கூற்றினின்று உமாசத்தியும், இவரின் பத்திலொரு கூற்றினின்று கணேசையும் என்று சத்திபேத முறையிலும் பத்திலொரு கூறு அமைதல் காண்க. இவ்வாறு பரநிலைவெளித் தத்துவப் பொருட்களை அளவு நெறியாகக் காட்டல், அக்காலத் தத்துவ நெறிஞர்களுக்கு விஞ்ஞான முறையான அளவுநெறி புலனாயிற்று என்பதை நாம் உணரலாம் அன்றோ.

## ஒளியசை: சத்திபரத்துவம்

கதிரவன் ஒளியை முப்பட்டை ஆடிவழியாகச் செலுத்தினால் ஒளி அலைகள் மடங்குகின்றன. திரிபொளி எழுகின்றது. அவ்வாறு மடங்கிய ஒளி அலைகளை ஒரு வெள்ளைப் பொருள்மேல் விழுமாறு செய்தால் அதிற் பல அளவான ஒளி அலைகளின் நிழல் விழுந்து பலநிறமாகத் தோன்றும். அதுவே நிறமாலையாகும். இதனை நமது தத்துவ நெறியிற் காண்போம். உயிர்களுக்கு மலபாகம் வருதற் பொருட்டாய் ஐந்தொழில் செய்தல் குறித்துச் சிறப்பு வகையாய் ஆதிசத்தி தொழிற்படுங்கால் இச்சை — ஞானம் — கிரியை என்று முத்திறப்பட்டுச் சிவதத்துவத்தைத் தோற்றுவித்தலுக்கு நிகராகும். இங்கு கதிரவனொளி பராசத்தி. முப்பட்டைஆடி ஆதிசத்தி. திரிபொளி — இச்சை ஞானம், கிரியை என்ற ஆதிசத்தியின் சத்திகள். திரிபொளி விழும் வெள்ளைப்பொருள் — சத்தி காரியமான அருட்டிருமேனி. அவ்வெள்ளைப் பொருளில் பலஅளவு ஒளியலை, பல நிறமாக விளங்கல் — அத்திருமேனி நவவடிவமாக விளங்குதலாம்.

## ஒளியசை விளக்கம் : சிவபரத்துவம்

உயிர்வாழும் உடலில் உள்ள "கண்" என்ற உறுப்பு 'புகைப்படக் கருவி' என்னும் நிழற்பொறி போன்றது. கண்ணென்னும் நிழற்பொறியாலே உலகத்தின் வண்ணத்தைச் சிறப்பாக உணருகிறோம். பிறவெவற்

ருலும் அறியமுடியாத வண்ணத்தை வகைபடக் காட்டி அழகு பொருளாய் உலகை உவகையுறத் துய்ப்பதற்குக் கடவுள் தந்த கருவி "கண்" என்க. ஒளியலைகளின் வேறுபாடுகள் நமது கண் நரம்பில் வெவ்வேறு கிளர்ச்சிகளை எழுப்புகின்றன; இக் கிளர்ச்சிகள் மூளையை எட்டியபோது வெவ்வேறு காட்சிப் புலன்கள் எழுகின்றன. நாம், வேறு பிரித்து அறியும் நிறங்கள் இவ்வாறே வெவ்வேறு வகையான ஒளியசைவால் எழுகின்றன. எல்லாவகையான ஒளி அலைகளும் கலந்து தாக்கும்போது வெண்மை நிறம் புலனாகிறது. இது நமது தத்துவத்தில் வேறு பிரித்தறியும் சக்திகள் எல்லாம் பரவெளியிற் பராபரையின் வெவ்வேறு வகையான சத்தி இயக்கத்தால் அமைந்தனவாம். அந்த இயக்கத் திறனெல்லாம் பரவெளி உச்யிற் குவிந்து, நிலைத்து (நீலநிறவிண்மீன்கோளத்தில்) வெண்ணொளியாய்ப் புலப்படலுக்குச் சொல்லலாம். அந்த வெண்ணொளியே பராபரை ஆற்றலின் கூர்மையொளி என்க.

ஒளிப்புலனை வகை செய்வோர்க்கு அப்புலன்கள் இரண்டு வேறு, இனங்களாகப் பிரிபடும். ஒரே அளவுள்ள அலைகள் தாக்கியபோது எழுகின்ற காட்சிப்புலன் ஒன்று. ஈதே மிளிர்புலன்; இதனை நிறம் எனலாம். பல அளவுள்ள அலைகள் ஒருங்குதாக்கியபோது எழுகின்ற காட்சிப் புலன் மற்றொன்று. ஈதே வெளிறு (Grey). இந்த வெளிற்றில் பலவகை நிறங்களும் அடங்குகின்றன. வெளிற்றொளியில் வெண்மையிலிருந்து கறுப்பு வரையுள்ள பலவகையான விளக்க நிலைகளும் அடங்குகின்றன. இவ் வெளிறு நிரலில் நிறம் காணப்படுவதில்லை. இவ்வாறு வேறுவேறாக விளங்கும் இரண்டு தன்மைகள் ஒன்றுகூடுவதையும் காண்கிறோம். குறித்த அளவுள்ள அலைகளாக எழும் காட்சித் தூண்டல், பல அளவுள்ள அலைகளோடு ஒன்று சேர்ந்து தாக்குமானால் நிறமும் வெளிறும் கலப்புறக் காண்கிறோம். அப்போது எழுகின்ற காட்சிப்புலனை "ஒளிர்வு" (Tint ரங்கு) என்போம். ஒரு நிறமாக உள்ள பொருள்களிலேயே ஒன்று பளபளப்பாகவும், ஒன்று வெளிறாகவும் தோன்றுவது இதனால் என்க. ஒவ்வொரு நிறத்திற்கும் அதனோடியையும் வெளிறு நிரல் வழியே ஒளிர்வுநிரல் வகுக்கலாம். மிகவும் பளபளப்பானது, சிறிது பளபளப்பானது, பளபளப்புக் குறைந்தது என்று அதனைத் தொடர்புபடுத்தலாம். இந்த ஒளிவிளக்கக் கருத்தை நமது சைவசமய நெறிக்கருத்தோடு ஒப்ப நோக்குவாம்.

"கண்ணுக்குரிய ஒளிப்புலன் ஒன்று நிறமாயும், மற்றது வெளிறும் வேறு இரண்டு இனங்களாகப் பிரியும்" என்பது: நமது சைவ நெறியில்; கதிரொளி–ஆதி சக்தியாம். "நிறமாயும் வெளிறும் ஒளிப்புலன் பிரிந்து வேறு இனமாகல்" இச்சாசத்தி ஆதிசத்தியின் நினைவளவில் அமைவதாதலின் அதனை விடுத்து; ஞானசத்தி, கிரியா சத்தி என்றவற்றைச்

சுட்டியதாம். ஞானம்-கிரியை முறையே கருத்தும்-கருமமும் என்றமைதல் போல அதுவும் வெளிறு - நிறம் என்ற இருவேறு இனத்தைச் சுட்டும் என்க. ஒரே அளவுள்ள அலையாம் வெளிறு - ஞானசத்திக்கும் பல அளவுள்ள அலையாம் நிறம் - கிரியா சத்திக்கும் நேர்க.

நிறம் (கிரியை) என்றும்; வெளிறு (ஞானம்) என்றும் வேறு வேறாக விளங்கும் இரண்டு தன்மைகள் ஒன்று சேர்ந்து தாக்குமானால் "ஒளிர்வு" (சாதாக்கியம்) என்ற காட்சிப் புலன் (தத்துவம்) அமையும். "ஒவ்வொரு நிறத்திற்கும் அதனோடு இயையும் வெளிறின் நிரல் பெறும் உண்மையானது நீலவெண் நிறவிண்மீனின் வெள்ளொளி; நீலம் (நாதம்), மஞ்சள் (விந்து), கிச்சிலி (சதாசிவம்), சிவப்பு (மகேசன்), வெள்ளை (சுத்தவித்தை) என்று விண்மீன்கோளத்து நிரல் பெறலோடு கொள்ளும். இனி "அவ்வெளிறு நிரல்வழியே 'ஒளிர்வு' நிரல் வகுக்கலாம்" என்பது: சுத்தசிவமானது, இலயசிவம், போகசிவம், அதிகாரசிவம் என்று தத்துவ நெறியில் தலையோராய்த் தலைப்பட்டலுக்கு ஒக்கும். அந்த "ஒளிர்வு நிரல்; மிகப் பளபளப்பானது, சிறிது பளபளப்பானது, பளபளப்புக் குறைந்தது என்று தொடர்புபடுத்தலாம்" என்ற செய்தியை முறையே; சிவம், சத்தி, நாதம், விந்து என்ற அருவத்திருமேனிக்கும்; சதாசிவம் என்ற அருவுருவத்திருமேனிக்கும்; மகேசன் - உருத்திரன் - அரி - அயன் என்ற உருவத் திருமேனிக்கும் இட்டு இயைபுறுத்தலாம்.

## காட்சிப்புலன்: தத்துவவெளி.

காட்சிப்புலக் கொள்கையில் "கெரிங்" என்ற மேலையர் உடல் இயக்கக் கொள்கை மூலம் நிறக்கொள்கையினை வெளிப்படுத்தியுள்ளார். நமது உடலின் இயக்கங்கள் இரண்டு வகையாக நிகழ்கின்றன. ஒன்று, ஆக்க இயக்கம். நாம் உண்ணும் உணவைக் குருதி வழியாக உடல் முழுவதும் பரப்பி உடலை வளர்க்கும் இயக்கங்கள் ஆக்க இயக்கங்களாகும். நாம் வேலை செய்யும்போது குருதிவழியாக வந்த ஆற்றல் குறைபடுகிறது, வேலை வடிவாம் இவை எல்லாம் அழிவியக்கங்களாகும். ஆக்கத்திற்கு எதிர் அழிவு ஆதலின் ஒவ்வொரு ஆக்கவியக்கத்திற்கும் நேர் எதிரிடையான அழிவியக்கம் உண்டு. இவ்விரண்டும் சேர்ந்து ஓர் எதிர்நிலை இயக்க முறையாக அமைகின்றன. இரண்டு இரண்டாக நிற்கும் மூன்று எதிர்நிலை இயக்க முறைகள் நமது கட்படலத்தில் நிகழ்கின்றன. முதல் இணையில் ஆக்கவியக்கத்தால் பசுமையும், அழிவியக்கத்தால் செம்மையும் புலனாகின்றன. இரண்டாவது இணையில் ஆக்கவியக்கத்தால் நீலமும், அழிவியக்கத்தால் மஞ்சளும் புலனாகின்றன. மூன்றாவது இணையில் ஆக்க வியக்கத்தால் கறுப்பும், அழிவியக்கத்தால் வெளுப்பும் புலனாகின்றன. நீலம், பசுமை, கருமை கண்குளிரக் காணும் நிறங்கள். இஃது ஓரினம். செம்மை. மஞ்சள்,

வெண்மை கண்ணைக் கூசச் செய்யும் நிறங்கள்; இது வேறேரினம். இவ் விளக்கத்திற்கு மேலையரிடம் பெருமதிப்பில்லை. எனினும் நமது பரவெளித் தோற்ற விளக்கத்திற்கு இதுவும் பெரிதும் பொருந்தி வருகிறது.

பராபரமாம் வெளியிடம் பரவெளி இயக்க முறையாக நெறிப்படும் போது; காரணம், காரியம் என்று இரண்டு முறையாகப் பகுக்கப்படும். இப்பகுப்பில் காரணப் பகுப்புவெளி, உடலியக்கத்தின் ஆக்கமுறையாகும். காரியப் பகுப்புவெளி அவ்வியக்கத்தின் அழிவு முறையாகும். "ஒவ்வொரு ஆக்க இயக்கத்திற்கும் ஒவ்வொரு அழிவு இயக்கம் உண்டு" என்பதை: விண்மீன் ஒளிக்கரு வளர்ச்சியில் வண்ணத்திலும் வடிவிலும் நிகழும் மாற்றங்களை நினைவு கொள்ளலாம்; "ஆக்கமும் அழிவும் சேர்ந்து ஓர் எதிர்நிலை இயக்கமுறை அமைகிறது. இரண்டிரண்டாக நிற்கும் மூன்று எதிர்நிலை இயக்க முறைகள் நமது கட்புலப் படலத்தில் நிகழ்கின்றன" என்பதை நமது சிவ தத்துவத்தில் நினைவுறுவோம். வெளிப்பரப்பில் பரம், பரநிலை என்ற இரண்டு கூறுகள் காரணமுறையில் முதற்கண் பிறந்தது. இதில் பரவெளிக்கூறு வளர்வுடைத்து. பரநிலைவெளிக்கூறு தேய்வுடைத்து. காரண முறைவெளி, காரியமுறைவெளி என்பன ஒன்றுக்கொன்று எதிர்நிலை வெளிகளாம். இரண்டிரண்டாக நிற்கும் மூன்று எதிர்நிலை இயக்கங்களாவன: காரியமுறைப் பக்கத்தில்; பரநிலைவெளி, காரியத்திற் காரணவெளி, காரியத்திற் காரியவெளி என்பனவாகுதலைக் குறிக்கும். இரண்டிரண்டாக அமைவன: முதலுறும் வெளியில் பராசத்தி, ஆதிசத்தி என்ற இரண்டுமாம். இரண்டாம் வெளியில் நாதம், விந்து என்ற இரண்டுமாம். மூன்றும் வெளியிற் சதாசிவம், மகேசன் என்ற இரண்டுமாம். இவ்வாறு நமது தத்துவத்தில் இரண்டிரண்டாக அமையும் மூன்று எதிர்நிலை இயக்க முறைகளைத் தேர்க.

இனிக் காரணமுறைப் பக்கவெளியில் மேற்கூறிய விஞ்ஞானச் செய்தியை நுட்பமாக விளங்கிக் கொள்ளலாம். முதலுறுங் காரணவெளி பராபரவெளி. இது காரணமுறைக்கு உட்படாவிடினும் பராபரத்தின் சொரூபத்தை ஒருவாறு விளங்கிக் கொள்ள உதவுதலின் எடுத்தோம். பராபரவெளியில் பராபரம், பராபரை என்ற இணையுண்டு. அவ்விணை சொல்லளவில் அன்றிப் பொருள் அளவிலன்று. இவ்வெளியில் ஆக்கவியக்கத்தால் பசுமையும், அழிவியக்கத்தால் சிவப்பும் புலனுகின்றன என்ற இணைச் செய்தி பராபரத்திற்கே அமையுமன்றிப் பராபரைக்கு அமையாது, என்பதை இந்த விஞ்ஞானக்கருத்து தெளிவாக்கிறது. பசுமை-விண்மீன் கருவின் குளிர்ந்த நிலை இயலைச் சுட்டும். இது பெரும் இராட்சத விண்மீனுகப் பராபரத்தின் ஆக்கவியக்கமாம். இதுவே சிவப்பு இராட்சத விண்மீன் கோளமாக வளரும். இது பராபரத்தின் அழிவு இயக்கத்தால் அச்சிவப்பு அதில் அமைகிறது என்பதைச் செப்பும். குளிர்மையான பசுமை

மறையவே வெம்மையான சிவப்பாகப் புலப்பட்டதென்று தெளிதல் வேண்டும். பசுமை பராபரத்தின் சொரூபம். அச்சொரூபம் தடத்தமாகும்போது சிவப்பாகும் என்றும் நாம் உணர்தல் வேண்டும். இரண்டாம் வெளி பரவெளியாம். இதில் பராபரையின் இயக்க விளக்கம் பகுமுறையில் அமைந்திருக்கின்றது. பரவெளியில் முதல் அமைந்த பரபிந்து பராபரையின் சொரூபமாயும், பரநாதம் அதன் தடத்தமாயும் நாம் உணரலாம். இந்த உணர்வால் அழிவு இயக்கத்தால் 'மஞ்சள்' மலரும் என்பது பரபிந்தையும், ஆக்கவியத்தால் "நீலம்" புலப்படும் என்பது பரநாதத்தையும் கொள்ளலாம் என்க. பொன்னிற மஞ்சள் பொன்னிற மற்ற மஞ்சளானதே அழிவியக்கம், பரபிந்தின் அசைவே பரநாதமாதலின் பரநாதத்தின் நீலம் பரபிந்தின் ஆக்க வியக்கமாகும். எனவே பரபிந்தின் மஞ்சள் நிறம் பராசத்தியாயும் நீலநிறம் ஆதிசத்தியாயும் அமைந்து, பராபரையின் பரநிலை வெளியின் இயலை—சத்தி சிருட்டியை விளக்கிறது. இங்கே பராபரையின் ஆதாரம்' ஆதேயம் என்ற பொருள்கள் தனித்தனி உருவாகியுள்ளன என்றும் தெளிய வேண்டும், மூன்ருவது வெளிப்பகுதி பரநிலை வெளியாம். இங்கு ஆக்கவியக்கத்தால் கறுப்பும், அழிவியக்கத்தால் வெளுப்பும் பிறக்கும். பரவெளியிற் தனித்தனியான பொருள்கள் பரநிலை வெளியிற் சமமாக இணைந்து இணையொளியாக ஒரு விண்மீன் கோளமாய்த் தோன்றுகின்றது. அந்தச் சம இணையொளியிற் கறுப்பு என்ற அதிநீல நிறம் ஆக்கவியக்கம். வெண்மை நிறம் அழிவியக்கம், மிகு மஞ்சளும் அழிதலால் வெண்மை பிறத்தலின் அதனை அழிவியக்கம் என்றல் முறையானது. பராபரையின் கூறுகளாகவே பரபிந்தும் (மஞ்சள்) பரநாதமும் (நீலம்) சொல்லப்படுதலால் பரநிலை வெளியின் உச்சியில் பரநாதமே நிலைத்தாதலின் அதன் அதிநீலத்தைக் கறுப்பென ஆக்கவியக்கத்தால் அமைந்தது என்றல் மிகப் பொருத்தமாகும்.

## வளர்ச்சிமுறைக் காட்சிப்புலன்: சிவதத்துவத் தோற்றம்.

"லட்" என்பவரும், "ப்ராய்க்லின்" என்பவரும் வளர்ச்சி முறைக் கொள்கை வழியாக நிறப்புலன் உண்மைகளைப் பொதுவாக எல்லோரும் ஒப்ப விளக்கி வைத்துள்ளனர். நிறவணு சிறப்புநிலை அடையாதபோது தொடக்கத்தில் வெளிறு தோன்றும் முறையொன்றே காணக்கிடந்தது. பின்னர் அந்த நிறவணுத்திரள் சிறப்புநிலையுற்று வேருகப் பிரிந்தபோது எதிர்நிலை இயக்கமாம் மஞ்சள் தோற்றமுறையும், நீலத்தோற்ற முறையும் எழுகின்றது. பின்னும் வளர்ந்து சிறப்புநிலையுற்றபோது, மஞ்சட் பிரிவினின்றும் இரண்டு கிளைகள் பிரிந்தன. பசுமை தோற்ற முறையும், செம்மைத் தோற்றமுறையும் ஆகிய இரண்டு எதிர்நிலை இயக்கங்கள் தோன்றின. இந்த இரண்டு எதிர்நிலை இயக்கங்களையும் ஒன்று சேர்த்தால்

மஞ்சள் தோன்றுகிறதே யன்றி வெளிறு தோன்றுவதில்லை. மஞ்சளியக்கத்தையும், நீல இயக்கத்தையும் ஒன்று சேர்த்தால் வெளிறு தோன்றுகிறது. இக்கொள்கைப்படி செம்மை, வெண்மை, நீலம், மஞ்சள் என்றிடும் நான்கு தனிநிலை நிறங்கள் இருக்க அவற்றில் செம்மை, மஞ்சள், நீலம் என்றிடும் மூன்று முதல்நிலை நிறங்களாக விளங்குதலின் ஆக்கவியக்கங்கள் முன்கூறிய கொள்கைபோல நரம்புக் கிளர்ச்சியைத் தூண்டுகின்றன என்னும் உண்மை தெளிவாகின்றது.

உ

## நிறமும்
## தத்துவத் தோற்றமும்

[ வளர்ச்சி முறைக்கொள்கை ]

★

நிறவணு - **பதி**

**வெளிருகும்** பொதுநிலை


[ காரணம் — காரியம் அரும்பாதநிலை ]

↓

நிறவணுத்திரள் - **சத்தி**

**முன்னிலைச் சிறப்பு** - காரணநிலை

[ மாமாயை ]



முதனிலே நிறங்கள் மூன்றில் செம்மை - இலயசிவம்; பசுமை - போக சிவம்; நீலம் – அதிகாரசிவம் என்று அமையும். தனிநிலே நான்கு நிறங் கள்; செம்மை - சிவம் ; பசுமை - சத்தி; நீலம் - நாதம் ; மஞ்சள் - விந்து என்ற சிவதத்துவத்தின் அருவத்திருமேனிகளுக்கு அமையும். நிறவணு பொதுநிலேயில் "வெளிறு" தோன்றும் முறையிற் கிடந்த தென்பது "பதி" என்ற சிவமாகும். "நிறவணுத்திரள் சிறப்பு நிலேயுற்று வேறு பிரிதல்,' 'சிவம் ஐந்தொழிற்கு முதற்காரணமாய் நிற்கும் பரிக்கிரக சக்தி யாம் மாயை என்க. இது சிவனுக்கு வேண்டுமிடத்து உபகாரப்படும் சத்திப் பொருளாம். "நிறவணுத்திரள் வேறுபிரிதலால் எதிர்நிலே இயக்க மாம் மஞ்சள், நீலம் தோன்றுதல்": பதியாகிய சிவம்; ஞானசத்தி, கிரியா சத்தி என்றவைகளேப் பொருந்தி கலக்க நீலநிறமாம் நாதமும், மஞ்சள் நிறமாம் விந்துவும் தத்துவம் ஆதலேக் குறிக்கும். "நிறவணுத்திரள் பின் னும் வளர்ந்து சிறப்பு நிலேயுற்றபோது மஞ்சள் பிரிவினின்றும் பசுமை, சிவப்பு என்ற இரண்டு கிளேகள் பிரிந்தன" என்பதில், 'வளர்ந்து சிறப்பு நிலேயுற்றதென்பது': சுத்தமாயையானது அண்டங்கள் தோன்றுஞ் சீருக்கு அசுத்தமாயை, பிருகிருதி மாயை என்று நிலேயுற்றதை இயம்பும். "அந் நிலேயில் மஞ்சள் நிறம்; பசுமை, சிவப்பு என்ற எதிர்நிலே இயக்கங்கள் தோன்றின" என்றது, முறையே போகசிவமும் அதிகாரசிவமும் குறித் தது. இவ்விரு சிவன்கள் சிறப்புநிலேயில் எதிர்நிலே இயக்கங்கள் என்பது எவ்வாறெனில்; போகசிவமாம் காரிய சதாசிவம் சிறப்பாகச் சுத்த தத்து வத்தையும், அதற்குரிய ஐந்தொழிலேயும் புரிவதால் என்க. சுத்ததத்துவத் திற்கு எதிர் அசுத்தமாம் என்பது தாமே புலனுகும்." பசுமை, சிவப்பு என்ற எதிர்நிலே இயக்கங்களேயும் ஒன்று சேர்த்தால் மஞ்சள் தோன்றுகிறதே யன்றி, வெளிறு தோன்றுவதில்லே" என்பது; காரியவிந்து வானமாகத் தோன்றலேக் குறிக்கும். இவ்வாறே மற்ற எதிரியக்கமாம் மஞ்சளியக்கத் தையும், நீலவியக்கத்தையும் ஒன்று சேர்த்தால் வெளிறு தோன்றுகிறது என்பது: காரணவிந்து வானுகத்தோன்றலேக் குறிக்கும். வானும் வெளிற் றியக்கம் பரசிவமாகவும், வானமாம் மஞ்சளியக்கம் சிவப்பரமாகவும் அமை வுறுத்தலாம். மஞ்சள் அழிவு இயக்கத்தாற் புலனுவதால் உருத்திரனுகவும் வெளிறும் அவ்வாறு அழிவியக்கத்தால் புலனுதலில் மகா உருத்திரனுகவும் உன்னுக. இவ்வாறு விஞ்ஞானமும் தத்துவமும் பிரிவற்ற முறையிற் கருத்து நிறைவுறுதலேக் காண்க.